# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 20 சனிக்கிழமை [04-07-1998] SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்:05


# கிருஷாந்தி கொலை வழக்கில் 6 பேருக்கு மரண தண்டனை!

## 'ட்ரயல் அட் பார்' மன்று தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 4

கைதடி மாணவி கிருஷாந்தி குமாரசாமி மற்றும் மூவர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கு விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஆறு பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ''ட்ரயல் அட் பார்'' விசாரணைக்குப் பின்னர் நேற்று மரண தண்டனை விதிக்கும் தீர்ப்பை வழங்கியது.

மேல் நீதிமன்ற நீதிபதி நிமால் டி திஸநாயக்கா (தலைவர்) நீதிபதிகள் காமினி அபேரத்ன, அன்ட்ரு சோமவன்ஸ ஆகியோர் இத்தீர்ப்பை நேற்று நண்பகல் வழங்கினர்.

லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஸ, ஜெயசிங்க முதியான்ஸலாகே ஜெயசிங்க, பிரிய சாந்த பெரேரா, லான்ஸ் கோப்ரல் தஸாநாயக்கா முதியான்ஸலாகே ஜெயசிங்க, லான்ஸ் கோப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணி சதுப்பு நிலப்பகுதியில் இன்னும் 400 சடலங்கள் உள்ளன

### நீதிமன்றத்தில் குற்றவாளி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

''கிருஷாந்தி குமாரசாமியின் சடலம் மீட்கப்பட்ட செம்மணி காவலரணை அண்டிய சதுப்பு நிலப்பகுதியில் மேலும் முந்நூறு முதல் நாநூறு சடலங்களைக் கொண்ட பாரியசவக்கிடங்குகள் உள்ளன.''

கிருஷாந்தி கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட எதிரிகளுள் ஒருவரான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நேற்று நீதிமன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

குற்றவாளிகளாகக்காணப்பட்ட பின்னர் மரணதண்டனை ஏன் வழங்கப்படக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆபத்துநிலையைடக்ளஸ் இன்னும் தாண்டவில்லை

கொழும்பு, ஜூலை 4

களுத்துறைச்சிறைச்சாலையில் கடந்த முதலாம் திகதி தமிழ்க் கைதிகளால் படுமோசமாகத் தாக்கப்பட்ட ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் உடல் நிலையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டதாகவும் அவர் இன்னும் ஆபத்துக் கட்டத்தைத் தாண்டவில்லை என்று கொழும்பு பொது வைத்தியசாலை டாக்டர்கள் தெரிவித்தனர்,

''அவர் சிறிது தேறியுள்ளார் (Marginally Recovery) என்றாலும் அவர் ஆபத்து நிலையைத் தாண்டவில்லை''—என்றார் ஓர் மருத்துவர்.

அவருக்கு நரம்பியல், கண் சிகிச்சை, பொது வைத்தியம், மயக்கமளித்தல், இருதயவியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த 6 சிரேஷ்ட வைத்தியர்கள் ஒருங்கிணைந்து சிகிச்சையளித்து வருகின்றனர்.

தேவானந்தா இயற்கையாக சுயமாகவே சுவாசிக்க முற்படுவதை அடுத்து அவருக்கு செயற்கைச் சுவாசம் வழங்கிய கருவிகள் அகற்றப்பட்டன. ஆனாலும் அவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அவருக்கு சுயநினைவு திரும்ப வாய்ப்புகள் இருப்பதாகவும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

### டக்ளஸ் மீது தாக்குதல்

## 16 தமிழ்க் கைதிகள் இனங்காணப்பட்டனர்

கொழும்பு, ஜூலை 4

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த முதலாம் திகதி ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக 16 தமிழ் கைதிகள் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — வேலை நீக்கம் செய்யப்பட்ட களுத்துறைச் சிறைச்சாலை அத்தியட்சகரின் இடத்துக்கு பதுளை சிறைச்சாலை அத்தியட்சகர் ஆர். குலதுங்க இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த சிறைச்சாலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பட்டதாரிகள் போராட்டம்

## உண்ணாவிரதி ஒருவர் நேற்று மயங்கி வீழ்ந்தார்!

திருகோணமலை, ஜூலை 4

திருகோணமலை மாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளர் அலுவலகத்துக்கு முன்பாக சாகும் வரையான உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ள மூன்று பட்டதாரிகளில் ஒருவர் நேற்று மாலை மயங்கி வீழ்ந்தார்.

எஸ். புஸ்பராசா என்ற அந்த உண்ணாவிரதியை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது அவர் மறுத்ததாகவும்—

பெரும் பிரயத்தனத்துக்கு மத்தியில் அவர் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும்—

அங்கிருந்து நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அதேநேரம்— உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக கல்வி, உயர்கல்வி அமைச்சர், ஜனாதிபதி ஆகியோருடன் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருமலை உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில் அடையாள உண்ணாவிரதங்களை மேற்கொள்ள அங்குள்ள வேலையற்ற பட்டதாரிகள் ஏற்பாடு செய்துள்ளதாக கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(மேலும் செய்திகள் 7 ஆம் பக்கத்தில்)

### யாழ். சிறையில்

## உண்ணாவிரதத்தை 3 கைதிகளும் கைவிட்டனர்

யாழ். சிறைச்சாலையில் கடந்த 30 ஆம் திகதி முதல் நான்கு நாள்கள் உண்ணாவிரதம் இருந்து வந்த—விளக்கமறியல்கைதிகளான—மூன்று படையினரும் தமது உண்ணாவிரதத்தை நேற்றுக் கைவிட்டனர்.

இ. வலிசுந்தர, எம். அருணசாந்த, வி. கே. நிரோஷன் ஆகிய இந்த மூன்று கைதிகளும் தமது கோரிக்கைகள் ஏற்கும் நிலைமை காணப்பட்டதால் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ–139)

## வவுனியாவில் நேற்று சக்திமிகு குண்டு மீட்பு!

வவுனியா, ஜூலை 4

வவுனியா தர்மலிங்கம் வீதியில் கடைத் தொகுதிப் பகுதிக்கு முன்னால் உள்ள எரிபொருள் நிலையத்துக்கு அருகில் சாப்பாட்டுப்பெட்டியுடன் சக்திமிகு குண்டு ஒன்று நேற்றுக் கைப்பற்றப்பட்டது.

அந்தப் பகுதியில் உள்ள கடை ஒன்றைத் திறக்கச் சென்ற ஒருவர் அநாதரவாகக்கிடந்த பார்சல் ஒன்றைக் காலால் தட்டியதாகவும்–

அந்தப் பார்சலுக்குள் வயர், பற்றறி போன்ற பொருள்கள் தெரிந்ததையடுத்து பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டதாகவும்–

அவர்கள் வந்து அந்தப் பார்சலில் இருந்த குண்டை செயலிழக்கச்செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 8 பாரிய ஜெனரேட்டர்களும் காங்கேசன் வந்து சேர்ந்தன

### மாத இறுதியில் மின் விநியோகம்

காங்கேசன் துறையில் அமைக்கப்படவிருக்கும் மின் நிலையத்துக்கான ஏழுபாரிய ஜெனரேட்டர்கள் 'லங்கா முடித்' கப்பல் மூலம் நேற்று முன் தினம் காங்கேசன் துறைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த ஜெனரேட்டர்களை இறக்கும் பணிகள் நேற்று இடம்பெற்றன. இதற்காக மின்சார சபை ஊழியர்கள் நேற்று காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஏற்கனவே எடுத்துவரப்பட்டுள்ள ஒரு ஜெனரேட்டருடன் இந்த ஜெனரேட்டர்களும் பொருத்தப்பட்டு இம்மாத இறுதியில் குடாநாட்டுக்கு 24 மணி நேர மின் விநியோகம் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. (உ–3–15)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கப்பட்ட எமது புதிய

## வட்டி வீதங்கள்

01 - 07 - 1998 இலிருந்து எமது வட்டி வீதங்கள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளன.

1. நிலையான வைப்புக்கள்
   - (i) வருட வட்டி 11%
   - (ii) மாத வட்டி 10.5%
2. சாதாரண சேமிப்புக் கணக்கு 10.5%

மதிநுட்பமான சேமிப்புக்கு ரிதிரேகா

நாளை நலமுற இன்றே சேமியுங்கள்

## தேசிய சேமிப்பு வங்கி

(சி/4185)


# மோட்டார் நிலைகளைக் கண்டறியும்
# 143 கோடி ரூபா பெறுமதியுடைய
# 'ரடார்' கருவி புலிகளின் வசம்!

கொழும்பு, ஜூலை 4

விடுதலைப் புலிகளால் சில மாதங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட — மோட்டார் நிலைகளைக் கண்டறியும் — 'ரடார்' உபகரணத்தின் விலை 22 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்: இது இலங்கை நாணயத்தில் 143 கோடி ரூபாவர்கும் என 'யுக்திய' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

ஸ்ரீலங்கா அரசு சிம்பாப்வே நாட்டிலிருந்து பெற ஒழுங்கு செய்த 81 மி. மீ. மோட்டார் ஷெல்கள் 34 ஆயிரமும் புலிகளின் கைக்குக் கிடைத்த சில மாதங்களுக்குப் பின்னர் இந்த 'ரடார்' உபகரணத்தை விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்துள்ளனர் எனவும் —

மோட்டார் நிலைகளைக் கண்டறியும் இந்த 'ரடார்' உபகரணத்தைப் பயன்படுத்தியே 'வெற்றி உறுதி' நடவடிக்கையில் ஈடுபடும் படையினர் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் — அந்தப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ-10)

## விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம் ஜூலை 4

கொக்குவில் மேற்கில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மேட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றவர்களானகொக்குவில் மேற்கைச்சேர்ந்த மாணிக்கம் மலர்சூடி (வயது 39) அவரது மனைவி மலர்சூடி தங்கராணி (வயது 32) மகன் மலர்சூடி சுகேதன் (வயது 8) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர். இவர்கள் யாழ்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (உ-15-139)

## வெள்ளரிப்பழத்தை உண்டதால் சுகவீனம்!
### ஐவர் ஆஸ்பத்திரியில்!!

யாழ்ப்பாணம், ஜூலை 4

வெள்ளரிப் பழத்தை உண்டதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர், வாந்தி பேதிக்குள்ளாயினர்.

மூளாய் தெற்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பொன்னம்மா (வயது 51), இவரது பிள்ளைகளான இரத்தினசிங்கம் கௌரிவாசன் (வயது 23), இரத்தினசிங்கம் கௌரிகாந்தன் (வயது 23) (இரட்டையர்), இரத்தினசிங்கம் சிவகவிதா (வயது 22), இரத்தினசிங்கம் நளினி (வயது 17) ஆகிய ஐவருமே வாந்திபேதிக்கு உள்ளானவர்களாவர்.

கடந்த முதலாம் திகதி மாலை 4 மணிக்கு வெள்ளரிப்பழம் சாப்பிட்டதாகவும் இரவு 12 மணிக்கு வாந்திபேதி ஏற்பட்டதாகவும், அந்த நேரத்தில் இருந்து தொடர்ந்த வாந்திபேதி நேற்றுவரை நீடித்து சோர்வு நிலையை அடைந்ததும் இவர்களை ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதிப்புற்ற குடும்பத் தலைவரான இரத்தினசிங்கமும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வாந்திபேதிக்கு உள்ளான ஐவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (உ-15-139)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

வெள்ளி முதல் ஞாயிறு வரை

ஸ்ரீபிரியா - கமல் விஜயகுமார் - லதா நடித்த

**நீயா**

திங்கள், செவ்வாய்

ரஜனி - பிரபு - ராதா நடித்த

**தர்மத்தின் தலைவன்**

நேரம்:- 10-30, 2-30 (பழைய நேரம்)

Tele. No: 070 - 212223

(57309)


## இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் 15 வயதுக்குட்பட்டோர் அணிகளுக்கான இறுதியாட்டம் இன்று காலை 8.30 மணிமுதல் யாழ் சென். பற்றிக்ஸ்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் யாழ் மத்திய கல்லூரி அணியும் யாழ். பரியோவான் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

போட்டிக்கு பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கிரிக்கெட் பயிற்சிக் கல்லூரியின் பணிப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான டி. ஆர். அருமைநாயகமும் அவரது பாரியாரும் கலந்து கொள்ளவுள்ளனர். பரிசில்களை திருமதி மீ. அருமைநாயகம் வழங்குவார்.


## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கடைசி வாரமாக

ரஜனி - நக்மா ரகுவரன், ஜனகராஜ் நடித்த

**பாட்ஷா**

அடுத்த வெளியீடு!

**சத்ரிய வம்சம்**

தினசரி

10-30 — 2-00, 5-00 (புதிய நேரம்)

(சி/3917)


## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர்

லயன் அ. நல்லதம்பியின் பாரியார்

### லயன் சீமாட்டி புனிதவதி

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| லயன் டாக்டர் | லயன் கலாநிதி |
| எஸ். எஸ். அருளானந்தம் | நா. குகபாலன் |
| பிராந்தியத் தலைவர் | வலயத் தலைவர் |
| பிராந்தியம் VIII | வலயம் I. |
| | பிராந்தியம் VIII. |

(57338)


## நாகம்ஸ்

சினிமா

சுன்னாகம்

அகல வெண் திரையில்

04-07-98 சனி முதல்

பிரபு, ரம்பா, சத்தியராஜ் நடித்த

**சிவசக்தி**

CD வெளியீடு

காட்சிகள்:- 10-30, 2-30

(57335)


## புளியங்கண்டு பிள்ளையார் ஆலய வழிபடுவோர் சங்கம்

### பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

இடம்: கூளாவடி அ. மி. த. க பாடசாலை மண்டபம்

காலம்: 05 - 7 - 98 ஞாயிறு பிற்பகல் 3மணி

தலைவர்: கிராமசேவையாளர் J/133 ஆனைக்கோட்டை

அங்கத்தவர்கள், உற்சவ உபயகாரர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— வழிபடுவோர் சங்கம்

ஆனைக்கோட்டை.

(57337)

## நான்காம் ஆண்டு நீங்காத நினைவு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 04 |
| 02 | 07 |
| 1929 | 1994 |

திருமதி

### அனா ஞானமணி நரசிங்கம்

(Anna Gnanamany)

அன்புததும்பும் முகம் கண்டு ஆண்டுகள்
நான்கு போனதம்மா!
என்பும் தசையும் தந்து உலகில் — எம்மை
வாழ வைத்தவளே!
வறுமைகள் வந்தபோது — எம்மை
வாடாமல் காத்தவளே!
வசதிகள் வந்தபோது — எமை
வாடவிட்டுச் சென்றதேன் என்னவளே?
நெஞ்சக் கூட்டில் உங்கள் பிரிவுத்துயரம்
எம் தேகம் மடியும் நாளில் தீரும்!

இவரின் ஆன்மஇளைப்பாற்றி இரங்கல் திருப்பலி சனிக்கிழமை மாலை புனித அந்தோனியார் தேவாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

உங்கள் நினைவில் வாழும்
கணவன், மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

தகவல்:
திரு. மு. நரசிங்கம்
உடுப்பிட்டி வீதி, மாலுசந்தி.
கரவெட்டி. வதிரி.

(57342)


யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில்

## சத்யா

வெண்திரையில்

சனி, ஞாயிறு

சரத்குமார், சுகன்யா கஸ்தூரி, செந்தில் வடிவேலு நடித்த

**ராஜபாண்டி**

காட்சிகள் 10. 30, 2. 30

தினசரி மாலை 5 மணிக்கு ஆங்கிலத் திரைப்படம் காண்பிக்கப்படும்.

(57330)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி புனிதவதி நல்லதம்பி

உரும்பிராய், உரும்பிராய் மேற்கு, மானிப்பாய் வீதியைச் சேர்ந்த

லயன் அப்புக்குட்டி நல்லதம்பி அவர்களின் (தலைவர், லயன்ஸ் கழகம், சுன்னாகம்)

அன்பு மனைவியார் காலமானார் என்ற துக்க செய்தியால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

கழக உறுப்பினர்கள்,
சுன்னாகம் லயன்ஸ் கழகம்.

(57332)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட்சங்கம் 15, 17 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கின்றது. இச் சுற்றுப்போட்டி சிறப்பாக நடைபெறுவதற்கு வர்த்தக வங்கியின் யாழ். கிளை வழங்கிய ஆதரவு பாராட்டுக்குரியது. பொதுவாகவே யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் மற்றும் விளையாட்டுத் துறைகளுக்கு ஊக்கமளிப்பதில் முன்னிற்கும் நிறுவனங்களுள் இந்த வங்கிக் கிளையும் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் 15, 17 வயது அணிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தும் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், முக்கிய அணியான—முதலாம் பிரிவான — 19 வயதுக்குட்பட்டோர் அணிக்கு மட்டும் ஒரு சுற்றுப்போட்டியை நடத்தாமல் ஒதுங்குவது ஏன்?

19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இங்கு சிநேகபூர்வ ஆட்டங்கள் மட்டுமே நடைபெறுகின்றன. சுற்றுப் போட்டி என ஒன்று நடப்பதில்லை.

கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் ஒரு புறம் சிநேகபூர்வ ஆட்டங்களும் மறுபுறம் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் சுற்றுப்போட்டியும் நடக்கின்றன.

ஆனால் இங்கு பாரம்பரியமாக மிகப்பெரிய மோதல்களை நடத்தி வரும் சில பாடசாலைகள், 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு ஒரு சுற்றுப் போட்டி நடத்தப்பட்டால், அந்தச் சுற்றுப் போட்டியின் இறுதி நிலை ஆட்டங்கள் முக்கியத்துவம் பெற, தமது பாரம்பரிய பெரும் மோதல்கள் முக்கியத்துவம் இழந்து விடும் எனக் கருதி, சுற்றுப்போட்டி நடத்த விடாமல் நந்தி போல குறுக்காக நிற்பதாகக் கூறப்படுகிறது. அது உண்மையா?

குறுக்காக நிற்கும் நந்திகளை விலத்தி ஓடும் திறமையான கிரிக்கெட் நிர்வாகிகள் ஏனைய பாடசாலைகளில் இல்லையா?

பக்கம் சாராத- கிரிக்கெட் ரசிகர் ஒருவர் எழுப்பும் வினா இது!

★ ★ ★

**புலிகள்** விதித்த தடையால் குடா நாட்டில் நீதிமன்றங்கள் அனைத்தும் செயலிழந்து விட்டன. இதனால் ஜனநாயகம் பேசிக் கொண்டு இப்போது இங்கு வந்திருக்கும் முன்னாள் ஆயுதக் குழுக்கள் சிலவற்றுக்கு ஒரே கொண்டாட்டம்!

எப்படித் தண்டிப்பது ] என்று அலைந்து கொண்டிருந்தவர்களுக்கு பெரிய தடி கிடைத்தமாதிரி ஆகிவிட்டது நீதிமன்ற விவகாரம். தடியைத் தூக்கிக் கொண்டு பவனி வரத் தொடங்கிவிட்டார்கள்.

உதாரணத்திற்கு ஒரு சம்பவம். இயக்கத்தின் பெயர் குறிப்பிடாமல் தகவலை மட்டும் வெளியிட்டால் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் கோபிப்பார்கள்; சம்பந்தப்பட்ட இயக்கத்தின் பெயர் குறிப்பிட்டால் அந்த இயக்கம் சீறும்.

''ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால்முடவனுக்குக் கோபம்'' என்ற நிலை பத்திரிகைக்கு. என்றாலும் குறிப்பிட்டுத்தானே ஆக வேண்டும்?

கடந்த மார்ச் மாதம் அரியாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மற்றொருவருக்கு அடித்து விட்டதாகக் கூறப்படுகின்றது. இது பற்றிய வழக்கு யாழ். நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. நாளை மறுதினம் வழக்குத் தவணை. ஆனால் நீதிமன்றம் இயங்காததால் வழக்கு விசாரணை நடக்க வாய்ப்பில்லை.

அடித்ததாகக் கூறப்படும் இளைஞரின் வேலைத் தலத்துக்கு சில தினங்களுக்கு முன்னர் ரெலோ இயக்கத்தவர்கள் என்று கூறப்படும் சிலர் சென்றனர். சம்பந்தப்பட்ட இளைஞரை அன்று மாலையே தமது இயக்க அலுவலகத்திற்கு வரும்படி பணித்தனராம். இளைஞர் தாயுடன் சென்றார்.

''நீதிமன்றம் இல்லை. அடித்ததற்குத் தண்டனையாக ரூபா நாலாயிரத்து ஐந்நூறு கட்டுங்கள்'' — என்று விசாரணை எதுவுமின்றி உத்தரவு பிறந்தது. தீர்ப்பைக் கேட்டு விழி பிதுங்கி நிற்கின்றார்கள் தாயும் மகனும்.

இது ஓர் உதாரணம் மட்டுமே! இப்படிப் பல.

யாருக்கு யார் தண்டனை கொடுப்பது? குற்றப் பணம் யாருக்கு? நீதிமன்ற விசாரணைகள் நடத்தி குற்றப் பணம் என்ற பெயரில் அறவிடுவதற்காகவா ஜனநாயக நீரோட்டத்தில் சேர்ந்து கொண்டன இந்த அமைப்புகள்? எல்லாம் இறைவனுக்கே வெளிச்சம்!

யாழ்ப்பாணம், வவுனியா மாதிரி ஆகாமல் இருக்க ஏதாவது செய்தாக வேண்டும்.

'சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல்' என்ற மாதிரி படையினரிடம் பணிந்து சென்று, முறையிட்டு, நீதி கேட்பதுதான் ஒரே வழி என்கின்றனர் சிலர்.

அதைவிட எமக்கு நாமே ஓர் அமைப்பை ஏற்படுத்தி இத்தகைய நெருக்கடிகளை எதிர்கொள்வதே நல்லது என்பது இன்னொரு கருத்து. ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார்? அதுதான் இப்போதுள்ள கேள்வி.

இப்போது புதிதாக உருவாகியிருக்கும் — பல கட்சிகள், பொது அமைப்புக்கள் இணைந்து ஸ்தாபித்திருக்கும்— ''மனித நீதிக்கான போராட்டக்குழு'' போன்றவை இத்தகைய முறைப்பாடுகளை ஏற்று அத்து மீறல்களைத் தடுக்கலாமே! முதலில் அடுத்தவன் இழைக்கும் மனித அநீதிகளை எதிர்க்க முன்னர் எமக்குள் நடக்கும் பொது அநீதிகளை அம்பலப்படுத்தி, தடுப்பதற்கு முயல்வதே முறையானது. எனவே இந்த விடயம் அவர்களுக்கும் சமர்ப்பணம்.

— மின்னல்

# குரு பூர்ணிமா விழா

திருநெல்வேலி, ஜூலை 4

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் நடத்தும் குருபூர்ணிமா விழா எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை திருநெல்வேலியிலுள்ள சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் ''குரு கிருபா'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ. வே. மாணிக்கவாசகர் சொற்பொழிவாற்றுவார். பண்ணிசை, பஜனை, நாராயண சேவை ஆகிய பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

(ஐ-135)

# தேசிய அ. அட்டை

நவாலி, ஜூலை 4

கொழும்பிலிருந்து யாழ். ஆள்பதிவுத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் ஆயிரத்து 200 தேசிய அடையாள அட்டைகள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு ஆள்பதிவுத் திணைக்களப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ-100)

# கைத்தொழில் பேட்டையில் தீ விபத்து

கொழும்பு, ஜூலை 4

ஜாஎல - எக்கல கைத்தொழில்பேட்டையில் உள்ள ஜின்மூர்லங்கா நிறுவனத்தின் களஞ்சியப்பகுதி தீயினால் முற்றாக அழிந்து விட்டது.

இத்தீவிபத்தினால் சுமார் 4 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பணியாற்றுகின்றனர்.

கடந்த புதன் மாலை இந்தத் தீவிபத்து இடம் பெற்றது. தீயணைப்புப் படையினர் தீயை அணைப்பதற்கு முயற்சி எடுத்தபோதும் அனைத்தும் பயனற்றுப்போய் விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

1998 ஆம் ஆண்டுக்கான ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களின் விண்ணப்பத்துக்கான இறுதித்தினம் இம்மாதம் 15 ஆம் திகதி ஆகும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் விண்ணப்ப இறுதித்தினம் இம்மாதம் 25 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தாம் பரீட்சைக்குத் தோற்ற உள்ள பாடங்களுக்கேற்ப பரீட்சைக் கட்டணத்தை அஞ்சல் அல்லது உப அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

விண்ணப்பங்கள் யாவும் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு 02' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(ஐ-9)


## வெளிநாட்டில் பட்டப்படிப்பு

Who fail to win a place in Medical Faculty are now being offered the chance to Train as Doctors in the Heart of Russia.

பல்கலைக்கழகங்கள்

★ Lumumba University.
★ Moscow Medical University.
★ Kursk Medical University.
★ Moscow State Medical University.

கட்டணம்: US$ 1200-US$ 2500 per year.

இவ் வாய்ப்பிற்கான இறுதித்தினம்:
15 - 07 - 98

Note: விசா, Ticket வசதிகள் ஒரு மாதத்திற்குள் செய்து கொடுக்கப்படும்.

Dr. Pathmanathan M. B. B. S., D. T. M & H
**Worldwide Educational Consultants**
No, 05, Pereira Lane, Colombo 6
(C/4162) TEL: 597234 FAX: 597234

## முதிரைப் பலகை விற்பனைக்கு

பல அளவுகளிலும்
முதிரைப்பலகை, பாலை, தீராந்தி
என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
மந்திகை வைத்தியசாலை முன்பாக,
கஜமுகன் பல்பொருள் வாணிபம்
மந்திகை.

(52787)

## பேராதனை கல்வி நிலையம் கிளை II

சுன்னாகம் சயன்ஸ் சென்ரரில்
திறக்கப்பட்டுள்ளது.

A/L 98 August வினாத்தாள் பற்றிய கருத்தரங்கு
பொருளியல், வணிகப்புள்ளி விவரவியல்

ஆரம்பம்: 08 – 07 – 98
நேரம் பி. ப. 3-00 மணி
அனுமதிக்கு முந்துங்கள்.

பிரபல விரிவுரையாளர்கள்

(57325)

## பணிப்பெண் தேவை

சிங்கப்பூரில் வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த படித்த குடும்பமொன்றுக்கு வீட்டு வேலைகள் செய்ய சமையல் அனுபவம், நல்ல ஒழுக்கம், சுத்தம், பணிவு நிறைந்த 27 வயதிற்குட்பட்ட திருமணமாகாத இந்துப் பணிப்பெண் தேவை. மாதச் சம்பளம் 2,200 ரூபா. போகவர இலவச விமானச் சீட்டு. ஏஜன்ட் யாரும் இல்லை. புகைப்படம், விலாசம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 753
மே/பா. உதயன்

[சி/4158]

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

28-06-98 இல் யாழ். லயன்ஸ் கழகத்தால் நடத்தப்பட்ட சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

1 ஆம் இடம் - 1765
2 ஆம் இடம் - 0580
3 ஆம் இடம் - 1596

ஆறுதல் பரிசுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1386 | 2696 | 1221 | 1478 |
| 2408 | 1242 | 1602 | 1433 |
| 0058 | 2438 | | |

பரிசு பெற்றோர் 11—07—1998 -க்கு முன் 655, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் எமது செயலாளரைத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தலைவர்,
யாழ். லயன்ஸ் கழகம்.

(சி/4184)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சி கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. கீர்த்தி பூரணவாசர், ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை, சாவகச்சேரி. [சி/4181]

இரும்புப் பெட்டகம் (Iron Safe) விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 144, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். [57324]

### O/L MATHS

ஆரம்பத்திலிருந்து இதுவரையும் பெறுபேறடையாதவர்கள் Credit, Distinction பெறுபேறடைய 15 வருடங்கள் O/L விடைத்தாள்கள் திருத்திய அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படுவர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [57280]

### இலகு திருமணசேவை

வயது30, ரோகிணி, உதயச் செவ்வாய், பட்டதாரி ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை. சீதனம் உண்டு. மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு: (ஞாயிறு காலை) துரைவிமலா, 958/8, K.K S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [57278]

### திருமணசேவை

எம்மிடம் பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், வெளிநாட்டில் இருந்து வந்திருப்பவர்கள், கிராமசேவையாளர்கள் ஆகிய தரத்தில் மணமக்கள் உண்டு. செவ்வாய், வியாழன் தவிர்ந்த மற்ற நாள்களில் தொடர்பு கொள்ளவும். வராகி திருமணசேவை, இலங்கைநாயகி அம்மன் கோயில் அருகில், கல்வியங்காடு. [57296]

## இன்று

மானிப்பாய், ஜூலை 4

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தினமும், வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் கு. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் இளைப்பாறியஅதிபர் செ.கேசவராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளர் ந. விவேகானந்தராஜா நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (ஐ-90-135)

## கலைப்பீட மாணவருக்கு

வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்காக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த மாணவர்கள் அனைவரும் தமது அடையாள அட்டைகளின் நிழற்படப் பிரதியை ஒன்றியத்திடம் ஒப்படைக்குமாறு யாழ். பலகலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ)


ஈசன்
கல்வி நிலையம்
கே. கே. எஸ் வீதி,
கோண்டாவில்
நாளை ஆரம்பம்
கணக்கீடு
A/L 99
ஒற்றைப் பதிவு
திரு. பாலவாசன்
Sun. 9– 10 A.M(05 -07 -98)
(57323)



உ
சிவமயம்

## உபநயன பிரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்!

08 - 05 - 1998 வெள்ளிக்கிழமை
நடைபெறவிருந்த
எமது மகன்
**சிரஞ்சீவி ஜகஜீவ சர்மா**
அவர்களின்
உபநயன வைபவம் நிகழும் வெகுதானியவருஷம்
ஆனி மாதம் 22 ஆம் திகதி (06 - 07 - 1998)
திங்கட்கிழமை காலை 6,45 மணி முதல் 7.25
மணி வரையுள்ள

கடகலக்ன சுபமுகூர்த்த வேளையில் நடைபெறத் திருவருள் கைகூடி பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சிவஸ்ரீ ச. ஸ்ரீசண்முகானந்தக்
குருக்கள் (ஆனந்தன்)
தம்பதிகள்

கந்தசுவாமி கோயிலடி,
மயிலணி,
சுன்னாகம்.

(சி/4178)



## இதய அஞ்சலி

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உபதலைவர்
திரு. அ. நல்லதம்பி அவர்களின் துணைவியார்
**திருமதி புனிதவதி நல்லதம்பி**

அவர்களின் மறைவையிட்டு நாம் எமது கண்ணீர் அஞ்சலியைத்தெரிவித்துக் கொள்வதோடு, குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.

(சி-4175)



## 33ஆம் நாள் நெஞ்சகலா நினைவுகள்



செல்வன்
**சாமுவேல் ஜீவரட்ணம்**

ஜனனம்
02 — 12 — 1969
மாகியம்பதி

காலாவதி
02 — 06 — 1998
ஜேர்மன்

(04 — 07 — 1998)

துலங்குகின்ற இலங்கையிலே
துள்ளித்திரியும் காளைப் பருவத்தினிலே
துலக்கமின்றி வெளியூர் சென்று விட்டாய்
தூமதி நீயென்றே நாமெல்லாமிருந்து விட்டோம்
கல்லையும் உருக்கும் கான்சரினால்
காலாவதியாகி விட்டாய் வெளியூரில்
கண்துயின்று விழித்திடுவோமா! காலவனே
கட்டிளங் காளை யுன்னுறக்கம்
கலைந்து கனவாய் மாறாதோ!

உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
தாயார், அண்ணன்மார், அண்ணிமார்,
அக்கா, அத்தான், மருமகன்,
பெறாமக்கள்.

மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.

(57260)


# துண்டியில் வீடுகள்:

## கடற்றொழிலாளர்கள் விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், ஜூலை4

குருநகரில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கென எழில் நகர் துண்டியில் கட்டப்படவிருக்கும் வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கடற்றொழிலாளர்களிடம்இருந்து கோரப்பட்டுள்ளன.

சொந்தக் காணியோ, வீடோ அற்றவர்களுக்கு இந்த வீட்டுத்திட்டத்தில் வீடுகள் வழங்கப்படும். வீடு பெறுவதற்கு தெரிவுசெய்யப்படுபவர் தாமாக வீட்டைக் கட்டிமுடிக்க வேண்டும். வீடு கட்டுவதற்கென இவருக்கு 50 ஆயிரம் ரூபா கட்டங்கட்டமாக வழங்கப்படவுள்ளது.

நூறு வீடுகள் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் இடமின்மையால் 40 வீடுகளே துண்டியில் கட்டப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வீடுகளைப்பெற விரும்புபவர்கள் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-5)

## சாரதி அனுமதிப்பத்திரம்; விண்ணப்பங்கள் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை. 4

யாழ். மாவட்டத்துக்கென மோட்டார் பரிசோதகர் எவரும் நியமிக்கப்படாததனால் சாரதி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்தவர்களின் பெருந்தொகையான விண்ணப்பங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் தேங்கிக் கிடப்பதாகத் தெரியவருகிறது.

மோட்டார் பரிசோதகர்களை நியமிக்குமாறு பல தடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டும் இதுவரை எவரும் நியமிக்கபடாத காரணத்தினாலேயே இவ்வாறு விண்ணப்பங்கள் தேங்கிக்கிடப்பதாக யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ–7)

## பாவனைக்கு உதவாத 'சுவிங்கம்' விற்பனை

திருநெல்வேலி, ஜூலை 4

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கடைகளிலும், விற்பனை நிலையங்களிலும் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனையின் போது திகதி காலாவதியான பிஸ்கட்டுகள், சுவிங்கம் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொறுப்பதிகாரி வி. கே. வருணநாதன் தலைமையில் சென்ற சுகாதாரப் பரிசோதகர் குழுவினால் இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (ஐ-135)

## கற்பித்தல் உபகரணம்

யாழ்ப்பாணம், ஜூலை4

யுனிசெவ் உதவித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள 50 முன்பள்ளி பாடசாலைகளுக்கு மாவட்ட திட்டமிடல் பகுதியினரால் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேலும் 19 முன்பள்ளி நிறுவனங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன. (இ-5)

## காங்கேசனில் லங்கா முடித

யாழ்ப்பாணம், ஜூலை4

லங்கா முடித கப்பல் நேற்று முன்திளம் காலை காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடைந்தது. இக்கப்பலில் அரிசி உட்பட பல பொருள்கள்எடுத்து வரப்பட்டுள்ளன.

இக்கப்பலிருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் இன்று முதல் நடைபெற விருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ–5)


## கண்ணீர் அஞ்சலி

எமது கிராம உத்தியோகத்தர்
திரு. க. வாமதேவன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பசுபதி கந்தையா**

அவர்களின் மறைவினால் துயரமடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மட்டுவில் மத்திவாழ் மக்கள்.

(57328)



## கண்ணீர் அஞ்சலி

எங்கள் சங்க அங்கத்தவரும் முன்னாள் தலைவருமாகிய
**திருமதி புனிதவதி நல்லதம்பி**

அவர்களின் மறைவையிட்டுமிகுந்த துயரம் அடைவதுடன் அன்னாரின ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம.

அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது சங்கம் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஐக்கிய நாணய சங்க
அங்கத்தவர்கள் சார்பாக
க. நல்லைநாதன்

உரும்பிராய் தெற்கு.
உரும்பிராய்.

(57326)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கின் பகிரங்க மடலுக்கு

# சுரேஷ் பிரேமச்சந்திரன் விளக்கம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ ஏடான 'புதிய கண்ணோட்டம்'' சஞ்சிகையில் 'சஞ்சீவி'யின் 'அதிரடி அரங்கு' குறித்து வெளியான ஒரு சிறு கட்டுரை பற்றி கடந்த 13 - 06 1998 சஞ்சீவியில் அக்கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு ஒரு பகிரங்க மடலை 'அதிரடி அரங்கு' பத்தி எழுத்தாளர் 'மின்னல்' வரைந்திருந்தார் என்பது தெரிந்ததே.

அந்தப் பகிரங்க மடல் குறித்து விளக்கமானபதில் கடிதம் ஒன்றை 27 - 06 - 1998 அன்று சுரேஷ் பிரேமச்சந்திரன் அனுப்பி வைத்திருக்கின்றார். அது அப்படியே இங்கு பிரசுரமாகுகின்றது. (ஆ-ர்)

*அன்புடன் சஞ்சீவி ஆசிரியர் அவாகட்கு!*

சஞ்சீவியில் நீங்கள் எழுதிய திறந்த மடல்கண்டேன். எமது கண்ணோட்டம் பத்திரிகையில் வெளியான செய்தி உங்களையோ, உங்கள் பத்திரிகையையோ, சீண்டவோ மனதை நோகடிக்கச் செய்யவோஎழுதியதல்ல. அப்படியான ஓர் உணர்வை அது ஏற்படுத்தியிருக்குமாயின் அதற்கு மன்னிப்புக் கோருகின்றேன்.

எம்மைப் பொறுத்தவரையில் இயக்கங்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் பொதுமைப்படுத்தப்படும் பொழுது அவற்றிலிருந்து விலகி சரியான திசை வழியில் செல்வோரையும் அது பாதிக்கின்றது என்ற காரணத்தாலேயே அதனை பொதுமைப்படுத்த வேண்டாம் எனக் கேட்டோம்.

*பத்திரிகைகள் தொடர்பாக எமது கோரிக்கை*

தமிழ்ப பத்திரிகைகளைப் பொறுத்தவரையும், தமிழ் மக்களைப் பொறுத்தவரையும் கட்சிகளுக்கான கொள்கைகள் கோட்பாடுகள், வேலைத் திட்டங்கள் அவர்களது செயற்பாடுகள் என்பவற்றைக் கொண்டு அவர்களைப் பிரித்தறிந்து பார்ப்பதன் மூலமே அவர்கள் சரியான ஒரு சக்தியை இனங்காணமுடியும். இன்றைய கால கட்டத்தில் அதுதேவையெனவும் நான் கருதுகின்றேன். இவ்வடிப்படையில் சரியானவற்றைப் பாராட்டவும் பிழையானவற்றை நேரடியாகச் சுட்டிக்காட்டும் பக்குவத்தையும் பத்திரிகைகள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

அதே சமயம் பத்திரிகைகளுக்குள்ள அச்சுறுத்தலை நான் அறியாதவனல்ல. பத்து வருடத்துக்கு முன் ஈ.பி.ஆர்.எல்.எவ். விட்ட தவறுகளை விலாவாரியாக எழுதி, இப்பொழுது நாம் அப்படியல்ல எனபதையும் எழுதியிருந்தீர்கள். அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். விட்ட தவறுகளை நியாயப்படுத்தாமல் தவறுகளைத் தவறுகளாகப்புரிந்து கொண்டு, அவற்றைத்திருத்த முயற்சிப்பதனூடாகத்தான் நாம் சரியான திசைவழியில் செல்ல முடியும். அவ்வடிப்படையில் தான் நாம் தவறுகளுக்கு மன்னிப்புக் கோரியிருந்தோம். இதே சமயம், சரியான முடிவுகளை நடைமுறைப்படுத்த முற்படும் போது தான், நடைமுறையில் சில தவறுகள் ஏற்பட்டன என்பதையும் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

*வேதனைக்குரியது*

முக்கியமாக வடக்கு—கிழக்கு இணைந்த ஒரு மாகாண சபையை நாம் உருவாக்கியதால் தான் கடந்த 10 வருடங்களாக, வடகிழக்கு என்ற தனியான நிர்வாகம் நடந்து வருகின்றது. இல்லையேல் இன்றும் வடக்கும் கிழக்கும் இரண்டுபட்ட நிர்வாகங் களின் கீழேயே இருந்திருக்கும். இவ்வாறான நல்லதொரு விடயத்தை சாதிக்கப் புறப்பட்டோம். ஆனால் நாம் சாதித்த நல்ல விடயங்களை முழுமையாக மறைத்து, 10 வருடத்துக்கு முற்பட்ட தவறுகளை மாத்திரம் சுட்டிக்காட்டுவது வேதனைக்குரியது; ஈ.பி.ஆர்.எல்.எவ் வை ஜனநாயக வழியில் எப்படியும் விமர்சிக்கலாம், அதனை அவர்கள் புரிந்து கொள்வார்கள், அதற்கான பதிலை அவர்கள் முரட்டுத்தனமாகத் தெரிவிக்கமாட்டார்கள் என்ற உங்கள் நம்பிக்கைக்காகவும், குறைந்த பட்சம் ஈ.பி.ஆர்.எல்.எவ். தொடர்பாகக் கொண்டுள்ள உயர்வான கருத்துக்காகவும் பெருமை அடைகின்றேன்.

உங்கள் பகிரங்க மடலில் சில தவறுகளைச் சுட்டிக்காட்டுவதும், அவை சரி செய்யப்பட வேண்டும் என்பதும் அவசியமென்பதாலேயே இம் மடலைத் தொடர்கின்றேன்.

ஈ. பி. ஆர். எல், எவ்,வின் '3 விசிற்றைப்' பற்றி நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். புலிகள் விரட்ட முன், ஐ.பி.கே. எவ்உடன், சிறீலங்கா இராணுவத்துடன் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

*கொச்சைப்படுத்தியமை*

முதலாவது புலிகள் விரட்டமுன் நாம் 'விசிற்' அடிக்கவில்லை. அந்த மண்ணிலே பிறந்து வளர்ந்து, சின்னஞ்சிறார்களாக இருக்கும பொழுதே எமது முன்னோருடன் அல்லது மூத்தோருடன் இணைந்து போராடியவர்கள்தான் நாங்கள். எமது தேசம் சிங்கள மேலாதிக்கத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவேண்டும்; வட—கிழக்கு ஒரு சமதர்மப்பூங்காவாகமலரவேண்டும் எனக் கனாக் கண்டு அதற்கு மக்களை அணிதிரட்டிய மக்கள் போராட்டம் ஒன்றினூடே அது சாத்தியம என்ற அடிப்படையில் திட்டமிட்டு செயற் பட்டவர்கள் நாங்கள். (83 ஆம் ஆண்டுக் கலவரம் போராட்டவடிவத்தையே மாற்றியதென்பது வேறு) அதற்காக பல்வேறுபட்ட முன்னணி அமைப்புக்களையும் ஆயுதப்படையையும் நாம் உருவாக்கி போராடினோம் என்பதை யாரும் மறுக்க முடியாது; ஆகாயத்தில இருந்து குதித்து நாம் போராட வரவில்லை. எனவே அது எமது முதல் விசிற் என கொச்சைப்படுத்துவது தவறென்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆனால் விடுதலைப் போராட்டம் எனப் புறப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள், இயக்கங்கள் மத்தியில் ஐக்கியம் உருவாகிவந்த வேளையில், தாம் மாத்திரமே ஒரே ஒரு போராட்டக் குழுவாக இருக்க வேண்டும் எனற ஒரே ஒரு காரணத்திற்காகப் பொய்யான கதைகளை ஜோடித்து, ஏனைய இயக்க உறுப்பினர்களைக் கொன்றுகுவித்தனர். ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் ஆகிய இயக்கங்களில் பல முக்கியஸ்தர்களும், உறுப்பினர்களும் இவர்களால் கொலை செய்யப்பட்டார்கள்.

*உண்மை இதுதான்*

இச்சமயத்தில் நாம் எமது சகோதரர்களாகக் கருதிய புலிகளிடமிருந்து எமது உயிர்களைப் பாதுகாக்கப் பின்வாங்கினோம் என்பது உண்மை. இதைத்தான் ''புலிகள் விரட்டுவதற்கு முன்' என நீங்கள் கொச்சைப்படுத்துகின்றீர்கள். இப்படிக் கொச்சைப்படுத்துவதின் மூலம் இப்போராட்டத்தில் இணைந்து என்றோ ஒரு நாள் தமிழ் மக்களுக்கு விடிவு வரும் என மரணித்த ஒவ்வொரு தோழர்களையும் நீங்கள் கொச்சைப் படுத்துவதாகவே உள்ளது. நடுநிலைமைப் பத்திரிகையொன்று விடயங்களை கொச்சைத்தனமாக அணுகுவது தவறென்றே நான கருதுகின்றேன்.

எந்த ஒரு நாட்டிலும், ஒரு விடுதலை இயக்கம் ஏனைய விடுதலை இயக்கங்களை முழுமையாக அழித்தொழித்து தான் ஏகபிரதிநிதியாக இருக்க வேண்டும் என்ற நடைமுறை இருந்ததில்லை; அவ்வாறு இருக்கவும் முடியாது.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் போதுகூட மகாத்மா தலைமையில் இந்திய தேசியக் காங்கிரஸ் சுதந்திரத்திற்காகப் போராடிய அதேசமயம் சுபாஸ் சந்திரபோஸும், கம்யூனிஸ் கட்சிகளும் தமது வழியில் சுதந்திரத்கிற்காக போராடவில்லையா?பெரியார் ஈ.வே. ராமசாமி அவர்கள் நீதிக் கட்சி என ஒன்றை நடத்தி பிரித்தானியா, இந்தியாவை விட்டு வெளியேறக் கூடாது என்று கூறவில்லையா? இதே போல் தென்னாபிரிக்கா, பாலஸ்தீனம், எரித்திரியா போன்ற நாடுகளில் எத்தனை விடுதலை இயக்கங்கள் இருந்தன? இஸ்ரேலில் கூட இடதுசாரிகள் தொடக்கம் பழைமைவாதிகள் வரை பலகட்சிகள் இணைந்தே இஸ்ரேலை உருவாக்கின.

ஆனால் வட - கிழக்கில் மாத்திரம் ஒரு கட்சிதான் போராட வேண்டுமென்பது எந்த வகையில் சரி? ஆனால் அந்த மனப்பாங்கில்தான் எமது இயக்கம் தடை செய்யப்பட்டது.

*துப்பாக்கித் துரைத்தனம்*

துப்பாக்கித் துரைத்தனம் மேலாண்மை வகித்தால் மக்கள் உட்படப் பத்திரிகைகள் எல்லாமே வாய் பொத்தி மௌனமாய் இருந்தன. படித்தவர்களிடம் கேட்டால் ஹிட்லரின் காலத்திலும் அவருக்கெதிராக யாரும் எழுதவில்லை. அதைப்போன்றே நாம் எழுத வேண்டிய காலம் வரும் அப்பொழுது எழுதுவோம் என்றார்கள். ஆனால் இன்று பத்திரிகையாளராகிய நீங்கள், நாங்கள், மக்கள், புலிகள் எல்லோரும் தெரிவிக்க வேண்டும். (துப்பாக்கி பயமில்லாத பொழுதுதான், நாம் தெளிந்த, ஏற்றுக்கொள்ளக் கூடிய முடிவுகளுக்கு வரமுடியும். அப்படியான சூழலைப் பத்திரிகைகள் தோற்றுவிக்க வேண்டும் என்பதுதான் எனது விருப்பம். ஆனால் ஒரு பகுதியைக் கதாநாயகர்கள் போன்றும் ஏனையோரை வில்லன்களாகச் சித்திரிப்பது போன்றதுமான எழுத்துக்களே இன்று எல்லாப் பத்திரிகைகளிலும மேலோங்கி நிற்கின்றன. இவற்றை நாம் மாற்ற முனைய வேண்டாமா?

இரண்டாவது 'விசிற்' இந்திய இராணுவத்துடன் என எழுதியுள்ளீர்கள். நீங்கள் குறிப்பிட்டதுபோல் புலிகளால் யாழ். மண்ணில் இருந்து விரட்டப்பட்ட நாம் இந்திய அரசும், புலிகளும் ஓர் உடன்படிக்கைக்கு வந்து, இனிமேல் ஆயுதப் போராட்டம் இல்லை என்ற சூழலிலேயே நாம் மீண்டும் வந்தோம். அதே சமயம் இடைக்கால நிர்வாகம், ஆயுதக் கையளிப்பு எனப் புலிகள் சுறுசுறுப்பாக இருந்த பொழுது நாம் சீண்டுவாரற்ற சாதாரண பிரசைகளாகத்தான் இருந்தோம்.

*எமக்கு வேறு வழி இருக்கவில்லை*

பின்னர் புலிகள் இந்திய இராணுவத்துடன் அநாவசியமான ஒரு யுத்தத்தை ஆரம்பித்தபோது, மீண்டும் சக தமிழ் குழுக்களைத்தான் முதல் எதிரிகளாகக் கொல்லத் தொடங்கினார்கள். கையில் எந்தவித ஆயுதமுமற்ற நாம் எங்காவது பாதுகாப்புத் தேடுவது சரியா? இல்லையேல் புலிகளால் சாகடிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா? அப்பொழுது அங்கே இருந்த இந்திய இராணுவத்திடம் பாதுகாப்புத் தேடுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. அதன் பின்னர் புலிகள் இடைக்கால நிர்வாக சபையையும் நிராகரித்து ஒரு தொடர்ச்சியான யுத்தத்துக்குப் போன போது, வட—கிழக்கிற்கு மாகாண அரசை உருவாக்க வேண்டுமென்று வற்புறுத்தி ஒரு மாகாண சபையை உருவாக்கினோம். அக் கால கட்டத்தில் ஈ. பி. ஆர். எல். எவ் உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாகாணசபை உத்தியோகத்தர்களென எல்லோருக்குமே புலிகள் மரண தண்டனை விதித்திருந்தார்கள். இதனால் நாமும் எம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டது.

*இந்தியா செல்லவேண்டி ஏற்பட்டதேன்?*

ஆனால் புலிகளுக்கும், பிரேமதாசா அரசுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை ஆகியன ஏற்பட்டன. இதனடிப்படையில் பிரேமதாசாவால் இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்டது. மாகாண அரசுக்கோ அதன் உறுப்பினர்களுக்கோ சிறீலங்கா அரசாங்கம் பாதுகாப்புக் கொடுக்க மறுத்தது. இந்நிலையில்தான் எமது உறுப்பினர்களும் மாகாண சபையைக் கைவிட்டுஇந்தியா செல்ல வேண்டி ஏற்பட்டது. அதாவது புலிகளுடன் யுத்தத்தை உருவாக்கி மீண்டும் ஓர் இரத்தக்களரி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே இவர்கள் வெளியேற வேண்டி ஏற்பட்டது.

இதுதான் நீங்கள் கிண்டலடிக்கும் 2 ஆவது ''விசிற்''. அப்பொழுது கூட ஈ.பி.ஆர். எல். எவ். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றததினூடு சிறீலங்கா அரசின் கொலை வெறி நடவடிக்கைகளை அம்பலப் படுத்தி வந்தார்கள். புலிகளுக்கு நாங்கள் எதிரிகளாக இருந்த பொழுதும் கூட புலிகளின் வானொலியும். அப்பொழுது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடப்பட்ட ஒரு சில பத்திரிகைகளும் அரசை அம்பலப்படுத்திய எனது பேச்சின் ஒரு பகுதியைப்பிரசுரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டன. அது மாத்திரமல்லாமல் வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், திருமலை போன்ற பகுதிகளில் எமது செயற்பாடுகள் அதன் பின்பும் தொடர்ந்து இருந்தன. யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்ததனால் எம்மால் எமது பணிகளைச் செய்ய முடியவில்லை என்பது உண்மையே. இதன் அர்த்தம் யாழ். மககளின் பிரச்சினைகளை நாம் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்பதல்ல.

*யாழ்ப்பாணத்தில் பணி விஸ்தரிப்பு*

புலிகளுக்கும், சிறீலங்கா இராணுவத்துக்கும் இடைப்பட்ட யுத்தத்தில் புலிகள் யாழ். நகரை விட்டு வெளியேறியதால் ஓரளவுக்கு உயிராபத்து குறைந்துள்ளது என்ற அடிப்படையில் எமது பணிகளை நேரடியாக யாழ்ப்பாணத்திற்கும் விஸ்தரித்தோம். ஓர் அரசியல் கட்சி என்ற அடிப்படையில் எம்மைக்கொலை செய்ய எமது சகோதரர்கள் எனப் படுவோரே அலைந்து திரிகையில் அரசாங்கத்திடம் இருந்து பாதுகாப்பை பெற்றுக் கொள்வது தவறில்லை என்றே கருதுகின்றேன். மற்றும்படி சிறீலங்கா இராணுவத்துடன் நாம் இணைந்து செயற்படவில்லை என்பதையும் உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இச்சமயத்தில் இன்னுமொரு முக்கிய விடயத்தையும் நான் குறிப்பிட வேண்டும். அதாவது ஒவ்வொரு கட்சியையும், இயக்கத்தைப் பற்றியும் எழுத உங்களுக்கு எவ்வளவு உரிமை உண்டென்று நீங்கள் கருதுகின்றீர்களோ அதே போல் எமது எண்ணத்தை எமது கருத்துக்களைச்சொல்லவும்செயற்படவும் எமக்கும் ஜனநாயக உரிமை உண்டு. அவற்றில் இருந்து நாம் தடுக்கப்பட்டுள்ளோம் என்பதை நீங்கள் பூரணமாக உணர்வீர்கள்.

ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழீழ விடுதலைப் புலிகள், தமது போராட்டத்தை நியாயப் படுத்துகின்றனர். ஓர் அரசியற் கட்சி என்ற வகையில் தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய தேவையும், பொறுப்பும், கடமையும் எமக்குண்டு; ஒன்றுபட்ட இலங்கைக்குள், அதிஉயர்ந்தபட்ச சுயாட்சியை நோக்கி மக்களை அணிதிரட்ட வேண்டிய கடமை எமக்குண்டு.

இச்சூழ்நிலையில் சில விடயங்களை நீங்கள் பொதுமைப்படுத்துவதால் அதில் சம்பந்தப்படாத நாமும் பாதிக்கப்படுகின்றோம் என்பதுடன், அது மக்களுக்கு மொத்தமாகவே தமிழ்மகள் தொடர்பானஒரு பிழையான விளக்கத்தையே கொடுக்கும்.

*பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்*

ஈ. பி. ஆர். எல்.எவ். என்றும் தன்மீதான ஆரோக்கியமான விமர்சனங்களை வரவேற்கின்றது. ஆனால் திரிபுபடுத்தல்கள், கிண்டல்கள், கொச்சைத்தனத்துக்கு நாங்கள் பதில் சொல்ல கடமைப் பட்டுள்ளோம் என்பதையும் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராணுவ அதிகாரிகள் பலர் புதிய பதவிகளுக்கு மாற்றம்

கொழும்பு, ஜூலை 4

இராணுவஉயர்அதிகாரிகள் பலரின் பதவிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி மன்னாரிலுள்ள 212 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் காமினி ஜயசுந்தர இராணுவ உளவியல்பிரிவுப்பணிப் பாளராகவும்; உளவியல் பிரிவுப் பணிப்பாளராக பணியாற்றிய பிரிகேடியர் ரி.ரி. ஆர்.டி சில்வா மன்னாரிலுள்ள 212 ஆவது பிரிவின் கட்டளை அதிகாரியாகவும் இடமாற்றம்பெற்றுள்ளனர்.

வவுனியாவிலுள்ள 211 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சீவலிவணிகசுந்தர இராணுவத்திற்கு ஆள்சேர்க்கும் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அப்பதவியிலிருந்த பிரிகேடியர் கொல்வின் ஜயரத்ன வவுனியாவிலுள்ள 211 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரியாக மாற்றம் பெற்றுள்ளார்.

இரத்தினபுரி உப பிரிவின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய பிரிகேடியர் கே.பியசோம குருநாகல் உப பிரிவின் கட்டளை அதிகாரியாக மாற்றப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் —

3 கேணல்கள் வெளிநாடுகளில் பாடநெறிகளைப் பின்பற்றச் செல்லவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. நடமாடும் விமானத் தாக்குதல் பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் நிமல்ஜெயசூரியா, தொண்டர் படைப் பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் ஜி. சந்திரவங்ஸ். 551 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி கேணல் திஸ்ஸ ஜயவர்த்தன ஆகியோரே வெளிநாடு செல்லவுள்ளகேணல்களாவர்

நடமாடும் விமானத் தாக்குதல் பிரிவின் கட்டளை அதிகாரியாக கேணல் சிறிநாத் ராஜபக்ஷவும்—

தொண்டர்படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக கேணல் நலின் பெர்னாண்டோவும் மாற்றம் பெற்றுள்ளனர்.

தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியின் கட்டளை அதிகாரி கேணல்தயாரத்னாயகா 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 533 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியின் பதில் கட்டளை அதிகாரியாக லெப். கேணல் ஜனகவல்கம நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ–10)

# நிவாரண வெட்டை மீளாய்வு செய்க!

## மக்கள் சக்திக் கழகம் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். மாவட்டத்தில் உள்ள சுமார் 34 ஆயிரம் குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை நிறுத்துவது என்ற முடிவை மீளாய்வு செய்யுமாறு 'மக்கள் சக்தி கழகம்' ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக மக்கள் சக்தி கழகம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். மாவட்டத்திலுள்ள சுமார் 34 ஆயிரம் குடும்பங்களுக்கான இடம்பெயர்ந்தோர் நிவாரணம் நிறுத்தப்படுவதாக அறியப்படுகிறது. இந்த முடிவு இங்கெல்லாம் சகஜநிலைக்கு அல்லது சகஜத்திற்கு அண்மித்ததாக உள்ளது என்ற தவறான கருத்தில் எடுக்கப்பட்டிருக்கலாம் என நாம் கருதுகிறோம். எனவே இம்முடிவை மீளாய்வு செய்யக் கோருகிறோம்.

உண்மையில் நிலைமை அவ்வாறில்லை என்பதற்கானகாரணங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

★ மீன்பிடித் தொழில்மீன்பிடிப்பு பிரதேசத்தின் கடுமையான கட்டுப்பாடுகாரணமாக முன்னைய நிலைக்கு மீளவில்லை.

★ விவசாயத் தேவைகள் இல்லாமை மற்றும் 75 சதவீதமான விவசாய பிரதேசம் விவசாயத்திற்கு உட்படுத்தாமையால்முன்னைய நிலைக்கு வராமை.

★ மின்சார விநியோக மின்மை, மூலப்பொருள்களின்மை காரணமாக கைத்தொழில்கள் மீள ஆரம்பிக்கப்படவில்லை.

★ எல்லைப் பகுதிகளிலான மீளக் குடியமர்வுகள் பெயரளவில் உள்ளதே தவிர நிரந்தரமானதல்ல.

★ மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான சிறுவர்களும், பெரியோரும் ஏற்கனவே போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். நிவாரண நிறுத்தம் இந்நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும்.

எனவே நிவாரணத்தை நிறுத்த எடுத்த முடிவை தாங்கள் தலையிட்டு மீளாய்வு செய்து மாவட்டத்தில் நிலைமை வழமைக்கு திரும்பும் வரை நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்குமாறு கோருகிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் சக்தி கழக தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், செயலாளர் ஏ. மயில்வாகனம் ஆகியோர் இக்கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளனர். பிரதிகள் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவருக்கும் யாழ். அரச அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

(ஐ–ரீ–17)

## முருங்கை விதை

சாவகச்சேரி கமநலசேவைகள் நிலையத்தில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முருங்கை விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

50 கிராம் விதைகள் கொண்ட பைக்கற் 150 ரூபாவாக விற்கப்படுகிறது.

# படையினர் அடுத்தமாதமே பாதையை கைப்பற்றலாம்

## சரத்முனசிங்க நம்பிக்கை

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினர் வெகுவிரைவில் பிரதான வீதியைக் கைப்பற்றிவிடுவர். சில வேளைகளில் அடுத்த மாதமே கைப்பற்றிவிடலாம்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் வன்னிப் பகுதியூடாக செல்லும் நெடுஞ்சாலையில் 30 கிலோ மீற்றர் தூரத்தையே படையினர் இன்னமும் பிடிக்க வேண்டும். இந்த நடவடிக்கையில் சுமார் 1 லட்சம் படைவீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை —

விடுதலைப் புலிகளின் சார்பில் சுமார் 6 ஆயிரம் பேருக்கு மேல் போர்க்களத்தில் நிற்கின்றனர்.

படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேரடியான சண்டைகள் எதுவும் கடந்த வாரம் இடம் பெறவில்லை. பெரும்பாலும் மோட்டார் குண்டு, சிறிய ஆயுதங்களே இருதாப்பினலும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ – 7)

## அதிரடி அரங்கின்...

(ஐந்தாம் பக்கத் தொடர்)

ஈ.பி.ஆர்.எல்.எவ். கடந்த காலங்களில் தான் விட்ட தவறுகளைப் புரிந்து கொண்டுள்ளது. எந்த ஒருகடசியும், தனது சரி பிழைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதன் மூலமே பிழைகளைச் சீர்செய்து சரியான வழியில் செல்ல முடியும். இதன் பொருள் நாம் கடந்த காலத்தில் முழுமையாக பிழையாக நடந்தோம் என்பதல்ல, எமது சாதனைகளையும் நாம் அறிவோம். இன்று அது பத்திரிகைகளுக்கோ, மக்களுக்கோ புரியாவிட்டாலும், வரலாறு எமது சாதனைகளையும் குறித்துக்கொள்ளும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு.

இறுதியாக உங்கள் கருத்தை இண்டலோ, கேலி செய்வதோ எனது நோக்கம் அல்ல. மக்களுக்கு எம்மைப் பற்றிசரியான விளக்கத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே இப்பதிலை எழுதவேண்டி ஏற்பட்டது. தயவுசெய்து உங்கள் சஞ்சீவிப் பத்திரிகையில் இதற்கான ஓர் இடத்தை அளித்தால் நன்றி உள்ளவனாயிருப்பேன்.

ஒப்பம்
கே. சுரேஷ் பிரேமச்சந்திரன்,
செயலாளர் நாயகம்,
ஈ. பி. ஆர். எல். எவ்.

# ஜனநாயக விரோத செயற்பாடுகளே அவநம்பிக்கைக்குக் காரணம்

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம். ஜூலை 4

சர்வதேச ரீதியில் தமிழர்கள் வேண்டாத விருந்தாளிகளாகக் கருதப்படுவதற்கும், எமது சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் அவநம்பிக்கைகளுக்கும் ஜனநாயக விரோத செயற்பாடுகளே காரணமாக அமைந்துள்ளன.

ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் இருவர் மட்டுவிலில் சூட்டுககாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணத்தில் ஜனநாயக விரோத படுகொலைகள் அடுத்தடுத்து மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் உறுப்பினர்களான காளிதாசன், குணசீலன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இக்கொலை மூலம் சம்பந்தப்பட்டோர் சாதிக்கவிளைவதென்ன? இன்று எமது சமூகம் சந்தித்துள்ள பேரிடிகள், நாதியற்ற நிலைமை ஆகியவற்றில் இந்தப் படுகொலைகள் குறிப்பிடத்தகுந்த பாத்திரங்களை வழங்கியுள்ளன.

சர்வதேச அளவில் தமிழர்களை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதற்கும், வேண்டாத விருந்தாளிகளாகக் கருதுவதற்கும் எமது சமூகத்தில். உருவாகியிருக்கும் அவநம்பிக்கைகளும் இந்த ஜனநாயக விரோத செயற்பாடுகளே காரணமாய் அமைந்திருக்கின்றன.

ஏற்கனவே அழிவைச் சந்தித்துள்ள எமது சமூகம் மேலும் பலஅழிவுகளைச் சந்திப்பதற்கான நிலைமைகளை உருவாக்கியுள்ளது. ஜனநாயகம் ம[illegible] என்பன எமது மக்களுக்கு மறுக்கப்பட்டவிடயங்களாகி விட்டன. இந்தத் தலைமுறையினருக்கு அது என்ன என்று தெரியாத நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தேசிய விடுதலை என்பது ஜனநாயகத்துக்கான போராட்டமே. அதற்காகப் போராடுவதாகக் கூறுபவர்கள் சம்பந்தப்பட்ட மக்களின் ஜனநாயகத்தையும், வேறுபட்ட அரசியல் இயக்கங்களின் செயற்பாட்டையும் மறுத்துள்ளனர். இது காட்டுமிராண்டி நிலையை நோக்கி சமூகத்தை இட்டுச் செல்லும் போக்காகும்.

இந்த அபாயகரமான போக்கிற்கு எதிராக ஜனநாயகம், மனித உரிமைகளை நேசிப்பவர்கள் ஓரணியில் செயற்பட வேண்டுமென திரும்பவும் கேட்டுக்கொள்கின்றோம்.

படுகொலை செய்யப்பட்ட உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கும், கட்சியினருக்கும் [illegible] துக்கொள்கின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் சின்னத்துரை

சங்கானை தேவாலய வீதியைச் சேர்ந்த தில்லையம்பலம் சின்னத்துரை அவர்கள் வெள்ளிக்கிழமை (03-07-98) காலமாகிவிட்டார். அன்னார் செல்வநாயகியின் அன்புக் கணவரும், சிவதாசன் (கனடா), செல்வறோசினி (மேற்கு ஜேர்மனி), குகதாசன் (சிமெந்து கூட்டுஸ்தாபனம் KKS.) ஆகியோரின் தகப்பனாரும், சறோயினிதேவி (கனடா), விஜயகுமார் (ஜேர்மனி), லோகேஸ்வரிதேவி ஆகியோரின் மாமனாரும், சாளினி, நிவேதா (ஜேர்மனி), அபிராமி, சாரங்கன், ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரது இல்லத்தில் நேற்று 03 – 07 – 98 பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

குகதாசன்
(மகன்)

தேவாலய வீதி,
சங்கானை.

(சி–4183)

## பொன்னம்பலம் செல்வரத்தினம்

(அரியாலை)

இரத்தினம் என அன்பாக அழைக்கப்படும் காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம், இளையபிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் செல்வரத்தினம் காலமாகிவிட்டார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம், செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை பொன்னம்மா, கணபதிப்பிள்ளை கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், S M ரஞ்சன் என அன்பாக அழைக்கப்படும் மோகனரஞ்சிதன, திருமதி சற்குணவதி செல்லத்துரை, நிததியானந்தன் (மலேரியாதடுப்பு இயக்கம்), சோதிலிங்கம், மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்,

காலஞ் சென்ற பிரதமமருந்தாளர் சின்னத்தம்பி செல்லத்துரை, செல்வராணி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேஷ்குமார், வனேஷ்குமார், ரஞ்சிதா, யசிதா, பரி.யோவான் கல்லூரி A/L மாணவன் ரதீஸ்குமார், துஷ்யந்தன், மயூரன், கஜந்தன், கவிந்தன், கிஷானி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்றவர்களான பரமசாமி, கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்றுசனிக்கிழமை (04-07—98) காலை 10 மணியளவில் (பழைய நேரம்) சின்னக்கிணற்றடி ஒழுங்கையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மகன் S. M. Ranjan

163/3, கண்டி வீதி,
அரியாலை.

(57322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் நடத்தி வரும்

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு

# தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு!

## கல்விச் செயலர் மீது குறை தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது முழுமையான தார்மீக ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது. இப் பட்டதாரிகள் இவ்வாறாகப் போராட்டம் நடத்தாமலே தமது தொழிலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு நிறையவே இருந்தது; ஆனால் இதில் ஏற்பட்ட தாமதம், இழுபறி அனைத்திற்கும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தாம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜனவரி மூன்றாம் வாரத்திலேயே இந்த நியமனங்களை வழங்க கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எஸ். ஏ. பிரேமரட்ணா மாகாண அமைச்சுச் செயலாளருக்கு எமது முன்னிலையில் அனுமதி வழங்கியிருந்தார். மார்ச் முதலாம் திகதிக்குள் வழங்குவதாக வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் உறுதியளித்திருந்தார்.

ஆனால் மாகாணக் கல்விச் செயலாளரின் அலுவலக வேலைகளில் அக்கறையின்மை, நிர்வாகத் திறமையின்மை போன்ற இன்னோரன்ன பொறுப்பற்ற தன்மை ஆகியன நியமனம் வழங்கலைத் தாமதப்படுத்தியது.

எனவே பட்டதாரிகள் போராட முயன்ற அன்றைய காலகட்டத்தில் எமது சங்கம் இரு பகுதியினரையும் சுமுகமான முறையில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தி ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் முயன்று வெற்றியும் கண்டது.

அதன் பின்னரும் அமைச்சுச் செயலாளரின் போக்கில் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. சுற்றுலாக்கள், மாலைகள், மரியாதைகள் பெறுவதிலேயே அக்கறை காட்டினாரே தவிர அலுவலக வேலையில் அக்கறை காட்டவில்லை. உண்மையான அக்கறையுடன் மாகாண அமைச்சுச் செயலாளர் தொழிற்பட்டிருந்தால் இந்த நியமனத்தை 1-3-1998 இற்கு முன்னர் ஒப்பந்தம் செய்ததுபோல வழங்கிமுடித்திருக்கலாம். ஆனால் நடைபெறவில்லை. எனவே வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் நியாயமானது. அதற்கு எமது சங்கம் தனது முழுமையான தார்மீக ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இவ்விடயம் தொடர்பாகச் சங்கம் ஆளுநரையும், ஜனாதிபதியையும் தலையிடுமாறு கோரியுள்ளது. அவர்களுக்கு சங்கத்தின் பொதுச் செயலாளர் அனுப்பிய கடிதத்தில் மாகாணக் கல்வியமைச்சுச் செயலரின் நிர்வாகத்தில் பல விதமான ஊழல்கள் மலிந்து கிடப்பதாகவும், அவரை அப் பதவியில் இருந்து மாற்றும்படியும், மாற்றாவிட்டால், இவ்வாறான மேலும் பல போராட்டங்களை ஆளுநரும் ஜனாதிபதியும் எதிர்பார்க்க வேண்டி ஏற்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட்டால் மாகாண அமைச்சிலுள்ள பல ஊழல்களை நிரூபித்துக் காட்ட சங்கம் தயாராகவே உள்ளது.

இப்படி பொதுச் செயலாளர் த. மகாசிவம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ-3-ரி)


## சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானம்

## சங்காபிஷேக விஞ்ஞாபனம்

1998

திகதி: 05-07-1998 ஞாயிறு

மு.ப. 10.00 மணி 1008 சங்காபிஷேகம்

ந.ப. 12.00 மணி அன்னதானம்.

பி.ப. 3.30 மணி திருக்கல்யாணம்.

பி.ப. 4.30 மணி சமயச் சொற்பொழிவு

திரு. வ. குமாரசுவாமி ஐயா.

பி.ப. 5.30 மணி பூந்தண்டிகையில்

சுவாமி வீதிவலம் வருதல்.

- நிர்வாக சபை,

ஐயனார் தேவஸ்தானம்:
சுன்னாகம்: (57345)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி பொன்னையா சிவகாமிப்பிள்ளை

(இமையாணன் உடுப்பிட்டி)

தோற்றம்: 05 - 08 - 1924 மறைவு: 04 - 06 - 1998

04 — 07 — 1998

அன்புடன் அயலவர்கள் அற்புக்கா என்றிட
பண்புடன், பாசமுடன் பழகினீர்,
சீருடன் வாழ்ந்த சிவகாமியே!
சிவனடி சேர்ந்தாயே!

உம் பிரிவால், துயருறும்,
மக்கள், மருமக்கள், சகோதரங்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
ந. பிரகலாதன் (பேரன்)
தாவடி.


# வேலையற்ற பட்டதாரிகள்

# இரண்டாவது நாளாக உண்ணாவிரதம்

திருகோணமலை, ஜூலை 4

கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினரின் சாகும்வரையான உண்ணாவிரதம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

சாகும்வரையான உண்ணாவிரதத்தை திருமலை கல்வி அமைச்சு அலுவலகம் முன்பாக மேற்கொண்டுள்ள மூன்று பட்டதாரிகளுக்கும் ஆதரவு தெரிவித்து அங்கு தினமும் மேலும் 15 பட்டதாரிகள் சுழற்சிமுறையில் உண்ணாவிரதம் செய்து வருகின்றார்கள்.

இந்த உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த நூறு மாணவர்கள் ஆளுநரின் அலுவலகத்துக்கு அருகேயுள்ள வீதியில் நேற்று ஒரு நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். (உ-3)

# சிற்றூழியர் சங்கமும் ஆதரவு தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 4

கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு — கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்க தலைமைச் செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்த விவகாரத்தில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலர் நடக்கும் முறை குறித்து அந்த அறிக்கையில் குறை கூறப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கு மாகாணக்கல்வி அமைச்சுச் செயலர் 20-4-98 இல் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார். தவறை மறைக்கும் விதமாக — செய்தி ஊடகம் மூலம் அரசியல் வாதிகள் போன்று விளக்கமளித்தது முறையற்றதொன்று. வானொலி மூலம் அவர் தந்த விளக்கம் குதர்க்கம் நிறைந்தது சமாளித்து மழுப்பும் தன்மை வாய்ந்தது என்பதை அறியக்கூடியதாக இருந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகளுக்கு

# உடன் நியமனம் வழங்க யாழ். சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்கு-கிழக்குப் பகுதியில் உள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் உடன் ஆசிரிய நியமனம் வழங்கவேண்டுமென்று யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர், மாகாணக் கல்வியமைச்சுச் செயலர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள அவசர 'பக்ஸ்' செய்தியிலேயே மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

"கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதம் தொடர்வதையிட்டு கவலையைத் தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த 4 வருடங்களாக வேலையின்றி இருக்கும் பட்டதாரிகளின் நியாயபூர்வமான உண்ணாவிரதப் போராட்டத்துக்கு வடக்கு - கிழக்கு மாகாண சபை மதிப்பளிக்க வேண்டும்." என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமய சந்நிதியில்

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் — ஐயனார் ஆலயத்தின் வருடாந்த ஆனிப் பொங்கல், மடை இன்று காலை ஆரம்பமாகி விசேட அபிஷேகம், பூசை, ஆராதனைகளுடன் நடைபெறும்.

நண்பகல் அம்மன் — ஐயனார் வீதிவலம் வருவார். (உ-30)

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயிலின் வருடாந்த உற்சவத்தின் மஞ்சத் திருவிழாவில் இன்று சனிக்கிழமை பகல் விசேட சங்காபிஷேகமும், பூசையும், இரவு அம்பாள் மஞ்சத்தில் வீதிவலம் வருதலும் இடம்பெறும்.

★ ★ ★

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தான தக்கன் யாகப் பெருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற உள்ளது. சிவஸ்ரீ பொ. வரதராஜக்குருக்கள் தலைமையில் இந்தயாகப் பெருவிழா இடம்பெறும். (ஐ-9)

★ ★ ★

பளை இரட்டைக்கேணி அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் நாளை மாலை 6 மணி முதல் நடைபெறவிருக்கிறது.

இரவு முழுவதும் நடைபெறும் இந்தப் பொங்கலை ஒட்டி விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (உ-117)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயந்தி இளங்கோ

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த முத்துவேலு இளங்கோ (முன்னாள் முகாமையாளர் கிராமிய வங்கி கோப்பாய்) அவர்களின் அன்பு மனைவி ஜெயந்தி 02-07-98 இல் பிரான்சில் காலமாகிவிட்டார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. ச. முத்துவேலு
(இளைப்பாறிய S. R. D.)

வராம்பற்றை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (57339)

### கதிரித்தம்பி கந்தசாமி

(Retired O. A. State Timber Corp.)

மீசாலை மேற்கைச் சேர்ந்த கதிரித்தம்பி கந்தசாமி 03-7-98 அன்று தமது இல்லத்தில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், றாகினி தவேந்திரன் (ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வரா ம. வி.), மாலினி பேரின்பசோதி (சுவிஸ்), சுபாசினி பரிமளராசா, நளாயினி கேசவன் (அமெரிக்கா), உதயகுமார் (சுவிஸ்), சிறீதரன் (U. K.), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவேந்திரன் (பலாலி ஆசிரியகலாசாலை ஆங்கிலப்பயிற்சி நெறி), பேரின்பசோதி (சுவிஸ்), பரிமளராசா (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), கேசவன் (அமெரிக்கா), சசிராதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலுக்ஷன், செந்தியா, றஜீதன், டிலாணி, தனீஷன், சுவைஸ்தா, சுவேதா, பிருந்தன், கீர்த்தனன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03-07-98) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த. தவேந்திரன்
(மருமகன்)

மீசாலை மேற்கு,
மீசாலை. (57346)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாதத்துக்கு முன் யுத்தம் முடிவுக்கு வரும்!

## மீண்டும் உறுதி கூறுகின்றார் ரத்வத்த

கொழும்பு, ஜூலை 4

எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன்னர் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனத் தான் முன்னர் அளித்த வாக்குறுதி குறித்து சந்தேகம் கொள்ள வேண்டாம் என பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த அமைச்சரவைக்கு மீண்டும் தெரிவித்துள்ளார் என 'லங்கா தீப' நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

வடபகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை மிகவும் திருப்திகரமாக உள்ளது எனவும்—

எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன்னர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என பொறுப்புடன் தன்னால் கூற முடியுமெனவும்—பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அமைச்சரவைக்குத் தெரிவித்துள்ளார்.

இந்நேரத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தினால் அதற்கு பாதுகாப்பை வழங்குவது கடினம் எனவும்—

யுத்தத்தில் வெற்றி பெறுவதே இந்நேரத்தில் அனைவரதும் குறிக்கோளாக இருக்கவேண்டும் எனவும்—

ஜெனரல் ரத்வத்த மேலும் தெரிவித்தார். (உ-10)

## கரம் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் கரம் சுற்றுப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளன,

முதலில் இன்று பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டங்கள் நடைபெறும்.

ஆண்கள் - ஒற்றையர், ஆண்கள் - இரட்டையர், பெண்கள் இரட்டையர் ஆட்டங்கள் முறையே 5.7, 9 ஆம் திகதிகளில் நடைபெறும். 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பரிசில்கள் வழங்கல் நிகழ்வு இடம்பெறும். (உ)

## கப்பல் சேவை:

# கட்டணத்தைக் குறைக்க கோருகின்றது ரெலோ

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள திருமலை—காங்கேசன்துறை கப்பல் சேவையில் பயணம் செய்வதற்கான கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று ரெலோ அமைப்பு கேட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இந்த அமைப்பு பத்திரிகைச் செய்தி ஒன்றை விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்துக்கும்- திருமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு நாம் உயர்மட்டத்தைக் கோரியிருந்தோம்.

தற்சமயம் இந்தச்சேவை ஆரம்பிக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடையும் அதே நேரத்தில் இச்சேவைக்கான கட்டணத்தை ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளமை பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கும் என்பதால் வேதனை அடைகிறோம்.

முன்னர் இந்தக்கட்டணம் அறுநூறுரூபாவாகவேஇருந்தது.

எனவே நியாயமான கட்டணத்தை அறவிட ஏற்பாடு செய்யவேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# மெய்வல்லுநர் போட்டிகள்

சாவகச்சேரி அசெம்பிளி ஓவ் கோட் தேவ சபையால் நடத்தப்பட்டுவரும் ,ரைனி ரொட்ஸ்கோணர்' பாலர் கல்வி நிலையத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி மைதானத்தில் பாடசாலை இயக்குநர் கு. சே. செல்வராசா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக சாவகச்சேரி நகர சபை செயலாளர் மு. செ. சரவணபவவும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வே. அருணந்தியும், கௌரவ விருந்தினராக வைத்தியகலாநிதி பே. பிலிப்ஸும் கலந்து கொள்வர். மைதான காப்பாளராக வைத்திய கலாநிதி திருமதி புஸ்பராணி-லியோன் பணிபுரிவார். (உ-31)

★ ★ ★

மட்டுவில் வடக்கு சபீனா அறவழி (மழலைகள்) பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1,00 மணிக்கு மட்டுவில் வடக்கு அ. த. க. பாடசாலை மைதானத்தில் திருமதி வாணி - இரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

திருநெல்வேலி அபிராமி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு க. ஜெயானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் உதவி பிரதேச செயலர் சி. வேல்முருகோன் பிள்ளை பிரதமவிருந்தினராகவும், வைத்திய கலாநிதி செல்வி ப. சின்னப்பா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (உ-7)


## இதோ!
## வெளிநாட்டு செருப்புகள்
உங்களுக்கு

உள்நாட்டு பாட்டா, DSI, றன்பா, சீபா, SODI மற்றும் சான்றில்கள்

வெளிநாட்டு THAILAND - KITO, SINGAPORE - WALKBD

தற்போது மகளிர் விரும்பும் இந்தியா, TARA, LISA SERA, DISA, VIKING சான்றில்கள் (ஒருவருக்கு ஒன்று மட்டும்) கலர் DSI முள்ளுபாட்டா, சொக்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

'வண்ணக் காலணிப் பூங்கா'

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,

சாவகச்சேரியில்: ''SODI'' செருப்பு குறைந்த விலையில் ''மம்மிடடி'' இருந்த இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(57327)


## கிருஷாந்தி...

(முதலாம் பக்கத் தொடர்)

ரல் இந்திரஜித் குமார ஆகிய இராணுவத்தினர் மற்றும் பொலீஸ் கான்ஸ்டபிள் பிரதீப் பிரியகர்ஷன ஆகியோரே மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளாவர்.

இவர்களுள் லான்ஸ் கோப்ரல் இந்திரஜித்குமார என்ற இராணுவச் சிப்பாய் தப்பியோடி தலைமறைவாகியுள்ளார்.

1996 செப்ரம்பர் மாதம் 7 ஆம் திகதி கிருஷாந்தி குமாரசாமியை கடத்தி, கற்பழித்துக் கொலை செய்தது மற்றும் கிருஷாந்தியின் தாயார் திருமதி இராசம்மா குமாரசாமி, சகோதரன் பிரணவன் குமாரசாமி, அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரைக் கடத்தி கொலை செய்தது ஆகிய பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இந்த வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

கடத்தல். கற்பழிப்பு. கொலை உட்பட பல்வேறு குற்றங்களில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட எதிரிகளுக்கு மரண தண்டனையுடன் பத்து வருடம் வரையான கடூழியச் சிறைத்தண்டனை மற்றும் ஐம்பதினாயிரம் ரூபா வரையான அபராதம் ஆகிய பல்வேறு தண்டனைகள் விதிக்கப்பட்டன.

இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட மற்றொரு எதிரி அவருக்கு எதிரான குற்றங்கள் நிரூபிக்கப்படாததால் விடுதலை செய்யப்பட்டார். (உ-3-7-10)

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

கூடாது என்று நீதிமன்றம் அவர்களிடம் கேட்டபோது, அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஆறு எதிரிகளில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஐந்து பேரும் தாங்கள் இவ்வழக்கில் நிரபராதிகள் என்று தெரிவித்தனர்.

இராணுவ உயரதிகாரிகளின் அழுத்தத்துக்கு உட்படும் சாதாரணப் படைச் சிப்பாய்களுக்கு எதிராக இவ்வாறான குற்றச்சாட்டுகள் கூறப்படுவது வழமையானதே. இத்தகைய செயல்களுக்கு அந்த அதிகாரிகளே காரணம்.

''வழக்கு நடைபெற்ற காலத்தில் எனக்கும் எனது உறவினர்களுக்கும் உயர் இராணுவ அதிகாரிகளினால் மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன'' — இவ்வாறு குற்றவாளிகளுள் ஒருவரான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (உ-3-7 10)

# ஊவா, மத்திய மாகாண சபைகளுக்கு 830 வேட்பாளர்கள் போட்டியில்!

## நேற்று வேட்பு மனு தாக்கல்

ஊவா, மத்திய மாகாண சபைகளின் தேர்தலில் ஒன்பது அரசியல்கட்சிகள், எட்டு சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 830 வேட்பாளர்கள் போட்டியிடவிருக்கின்றனர்.

இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்வது நேற்று நண்பகல் 12.00 மணிக்கு முடிவடைந்தது.

மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட மனுத்தாக்கல் செய்த இரண்டு கட்சிகளினதும், ஒரு சுயேச்சைக் குழுவினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐ. தே. க, ஜே. வி. பி, தேசிய தொழிற்சங்கம், இலங்கை முற்போக்கு முன்னணி, மலையக மக்கள் முன்னணி, புதிய இடதுசாரி முன்னணி, லிபரல் கட்சி ஆகியன இந்தத் தேர்தலில் போட்டியிடவிருக்கின்றன.

இரு மாகாண சபைகளுக்கும் 162 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத் தேர்தல் நடத்தப்படுகிறது. (உ-3-7)

## இலங்கை ஒலிம்பிக் வீரர்

# டங்கன்வைற் நேற்று லண்டனில் காலமானார்

லண்டன், ஜூலை 4

இதுவரைகாலமும் ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கைக்குக் கிடைத்த ஒரேயொரு வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தவரான டங்கன்வைற் தமது எண்பதாவது வயதில் நேற்று அவரது சொந்த ஊரான லண்டன் நியூபன்சிலில் காலமானார்.

1948 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையின் சார்பில் 400 மீற்றர் தடைதாண்டல் போட்டிகளில் பங்குபற்றி அவர் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

அவர் வெள்ளிப் பதக்கம் பெற்ற ஐம்பதாவது ஆண்டை நினைவு கூருமுகமாக அவருக்குக் கடந்த ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி ஸ்ரீலங்கா ஜனாதிபதி தேசமானிய விருதை வழங்கிக் கௌரவித்திருந்தார்.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

இக்குண்டு வெடிக்க முன்னர் கண்டு பிடிக்கப்பட்டதால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர். (உ-3-164)

## ஆபத்து...

(முதலாம் பக்கத்தொடர்)

அவர் கை, கால்களை அசைக்கத் தொடங்கியுள்ளதாகவும்—

அவரது மூளைப்பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட ''சி. ரி. ஸ்கான்'' ஆய்வுப் பரிசோதனையின் மூலம் அவரது மூளையில் அதிக பாதிப்பு ஏற்படவில்லை என்பதை ஊகிக்க முடிவதாகவும் — வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர்.

மூளையில் ஏற்பட்ட பாதிப்பு வேறு சிக்கல்களை (Side affects) தருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அவரது சுவாசப்பையின் பிற்பகுதியில் ஏற்பட்ட சுருக்கம் நீங்கி வருவதாகவும்—

இன்று அல்லது நாளை அவருக்கு சுயநினைவு சற்று திரும்பக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் — அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அமைச்சர் எஸ். தொண்டமான உட்படப் பல பிரமுகர்கள் நேற்று தேவானந்தாவைப் பார்வையிட்டனர். (உ-1-3)

## மாங்குளம் அருகே சண்டை

கொழும்பு, ஜூலை 4

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்பினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மாங்குளத்துக்கு தென்கிழக்குப் பகுதியில் நேற்று கடும் சண்டை மூண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று ரூபவாஹினி தெரிவித்தது.

இந்தச் சண்டையில் விடுதலைப் புலிகள் சிலர் இறந்திருக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. (உ-3-7)

## 16 தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆணையாளர் நாயகம் ஒரு நபர் விசாரணைக் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

தமிழரான சிறைச்சாலை ஆணையாளர் ஒருவரே அந்த விசாரணைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். (உ-3-21)

## சிற்றூழியர்...

(ஏழாம் பக்கத் தொடர்)

பட்டதாரிகளின்கோரிக்கை நியாயமானது என்று ஏற்ற பின்பு அட்டவணையைக் காட்டித் தாமதப்படுத்தும் இந்த நிலைக்கு எதிராகப் போராடும் பட்டதாரிகளின் போராட்டத்துக்குக் கை கொடுப்போம்.

நேர்முகப் பரீட்சையில் தோற்றிய சகல பட்டதாரிகளுக்கும் 01-07-98 முதல் நியமனம் வழங்கவேண்டும்— என்றுள்ளது. (உ-3)


## நாடகம்

07-07-1998 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9-30 மணிக்கும் பிற்பகல் 2-30 மணிக்கும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில்

இப்சனின்

ஒரு பாவையின் வீடு

இது நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பு

பாடசாலை மாணவர்கள் 20/-

ஏனையோர் 25/- 50/- 100/-

இன்ரக்றக்ட் கழகம் - தமிழ் மன்றம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

(சி/4189)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறை வேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி சஞ்சிகை

04 – 07 – 1998 சஞ்சீவி


காஞ்சிப் பட்டு உடுத்தி கஸ்தூரிப் பொட்டு வைத்து தேவதைபோல் மிளிர்வதற்கு ஏற்ற ஆடைத் தெரிவிற்கு

ராகம்ஸ் பட்டுச் சோலை

இல. 24, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

(C/4157)


## கருத்துக் கலசம்

### கலை பேணுவோம்

மனித வாழ்க்கையின் ஓர் அங்கம் கலை. கலை ஓர் இன்பச் சுனை என்று கூறுவார்கள். மனிதனின் புலனுணர்வுகளுக்கு விருந்தளித்து ஒரு வகையான புத்துணர்ச்சியைத் தருவதும் கலையே.

கடவுள் உயிர்களையும் உலகங்களையும் உருவாக்கினார். அதே போன்று மனிதனும் ஆக்கும் திறமை பெற்றிருக்கிறான். மனிதனுக்குக் கிடைத்த ஆறாவது அறிவிலிருந்து பிரவாகிக்கும் கற்பனை கலைகளைப் படைக்கிறது.

ஒலியைக் கொண்டு இசை படைக்கவும், ஓவியம், சிற்பம் போன்றவற்றை பல் வேறு இயற்கைப் பொருள்களில் இருந்து வடிக்கவும், இலக்கியம், நாடகம், நாட்டியம் என்பன இயற்றவும் ஆதாரமாக இருப்பது மனிதனது கற்பனையே. அந்தக் கற்பனையே பல்வேறு கலை வடிவங்களாகின்றன.

கல்லின் மீது செலுத்திய கற்பனை அழகு சொட்டும் சிற்பமாகிறது. காகிதத்தின் மீது வர்ணத்தால் விழுந்த கற்பனை கண்ணைக் கவரும் ஓவியமாகிறது. வாழ்க்கை அனுபவத்தால் உதித்த கற்பனை கதையாகவும், கவிதையாகவும், நாடகமாகவும் வடிவெடுக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக மனிதன் உடம்பில் ஓடவிடும், நெளியவிடும், வளையவிடும் கற்பனை மனதைக் கொள்ளை கொள்ளும் நடனமாகிறது.

கலை படைக்கும் கற்பனைக்கு ஊற்றாக விளங்குவது மனதின் சிந்தனை. அதனால் மனங்களுக்கு ஏற்றபடி கலைப்படைப்புகள் வெவ்வேறு வகையானவையாக, தரத்தினவையாக உள்ளன.

அது மட்டுமன்றி கலைகள் நாட்டுக்கு நாடு, பிரதேசத்துக்குப் பிரதேசம், மொழிக்கு மொழி, இனத்துக்கு இனம் வேறுபடுகின்றன. அவை ஓர் இனத்தின் தனித்துவத்தை எடுத்தியம்பும் தகுதிக்குரியவையாகவும் விளங்குகின்றன.

இத்தகைய மேன்மைக்குரிய, மகிமைக்குரிய கலைகளை பேணி வளர்த்து அடுத்த சந்ததிக்கு கையளிக்க வேண்டியது இன்றைய சந்ததியின் தலையாய கடமையாகும்.

வேற்றுக் கலைகளை பயில்வது, அறிவது வரவேற்கத்தக்கதே. ஆனால் அந்தக் கலைகளை தலையில் தூக்கி வைத்து ஆடுதலாகாது; எங்களது கலைகளுடன் கலந்து மாசுறச் செய்வதும் தகாது. வேற்றுக் கலைகள் எமக்குள் ஊடுருவி எமது கலைகளை அழித்துவிட இடம் கொடுத்தலுமாகாது.

எங்களது கலைகளுக்கு ஆதாரமானவை, அத்திவாரமாக அமைந்தவை, அடிநாதமாக விளங்குபவை, கிராமக் கலைகள் எனப்படும் நாட்டார் கலைகளே. அவற்றை ஒதுக்கிவிடாமல், அவற்றின் தூய்மை கெடாமல் பேணி வளர்க்க கலை ஆர்வமும், கலைமனமும் உள்ளவர்கள் முன்வர வேண்டும்; உழைப்பது அவசியம்.

# கவிதையின் அணிகளும் கன்னியர் அணிகளும்

கன்னியர் தம் அழகை மேலும் சிறப்புறச் செய்வற்கு ஆபரணங்களை நாடுகின்றனர். ஆபரணங்களை அணிகள் என்று சொல்கிறோம்.

கவிஞர்களும் தங்கள் கவிதைக் கன்னியரை மேலும் அழகு படுத்த அணிகளை நாடுகின்றனர். அவை உவமை முதலிய அணிகள் ஆகும்.

கன்னியர்கள் தம்மை அழகு படுத்த அணிந்து கொள்ளும் அணிகளுக்கும் அவர்களுக்கும் எந்தவித தொடர்பு மில்லை. ஆனால் கவிதைக் கன்னியைப் பொறுத்தவரை அணிகள் கவிதையின் அங்கமாகின்றன. கவிதைக்கும் கவிதை அணிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கவிதைக் கன்னியின் குணஇயல்புகளை விளக்கிக் கொள்ள கவிதை அணி பெரிதும் உதவுகிறது.

### ஔவையும் உவமையும்

அதியமான் நெடுமான் அஞ்சி என்ற மன்னன் போரில் பேராற்றல் வாய்ந்தவன்; கொடையில் பெரு வள்ளல்; அன்பில் மிகச் சிறந்தவன். அவனைப் பாடிப் பரிசில் பெறச் சென்றார் ஔவையார்.

அவனிடத்துப் பல சிறப்புக்கள் இருந்தன. அவற்றுள் இரண்டு சிறப்புக்களை ஔவையார் பாராட்ட விரும்பினார். ஒன்று போர்க்களத்தில் அவன் கடும் கோபம் உடையவனாகப் பகைவர் மேற் பாய்ந்து பகைவரை அஞ்சிச் சிதறி ஓடவைக்கும் வீரச்சிறப்பு.

மற்றது புலவர்கள், சான்றோர்கள், நண்பர்கள், சிறுவர்கள் ஆகியோருடன் சேர்ந்து தான் அரசன் என்ற அந்தஸ்தை மறந்து அளவளாவுதற் சிறப்பு.

இவ்விரண்டு சிறப்புக்களையும் அழகாக — இனிதாக — சிறப்பாகக் கூற ஔவையாருக்கு உதவுகிறது உவமை அணி.

அரசன் ஒருவனே போர்க்களத்தில் கொடுமையாகவும் ஊர்மக்களிடத்து இனிமையாகவும் நடந்து கொள்கிறான். எனவே உவமானமாகக் கொள்வதும் ஒரு பொருளாக இருக்க வேண்டும். அந்தப் பொருள் ஒரு நிலையில் கொடியதாகவும் இன்னொரு நிலையில் இனியதாகவும் இருத்தல் வேண்டும். இங்கு ஔவையாருக்கு யானையின் நினைவு வந்தது.

யானை மதங்கொண்ட நேரத்தில் எதிர்ப்பட்ட பொருளை எல்லாம் தூளாக்கி எதிர்ப்பட்டோரை எல்லாம் அஞ்சிச் சிதறி ஓடச் செய்கிறது.

மதம் இல்லாத தனது இயல்பான நிலையில் அது குளத்தில் குளிக்கும். குளத்தில் குளிக்கும் சிறுவர்கள் யானையுடன் விளையாடுகின்றனர். அதன் தந்தத்தை தண்ணீர் எற்றிக் கழுவுகின்றனர். அச்சிறுவர்களுடன் யானை மிகவும் அன்பாகவும் இனிமையாகவும் நடந்து கொள்கிறது.

யானையை உவமானமாகக் கொண்டு அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாராட்டுகிறார் ஔவையார்.

''ஊர்க்குறுமாக்கள்
வெண்கோடுகாழாலின்
நீர்த்துறைபடியும்
பெருங்களிறு போல
இனியை பெரும்
வெமக்கே மற்றதன்
துன்னருங்கடா அம்போல
இன்னாய் பெரும
நின்னொன்னா தோர்க்கே.

ஊரிலே உள்ள சிறு பிள்ளைகள் தனது வெண்மையான தந்தத்தை நீர்த்துறையில் கழுவும் போது யானை அவர்களுடன் இனிமையாக நடந்து கொள்ளும். அதே யானை மதங்கொண்டபோது கொடுமையாக நடந்துகொள்ளும். நீயும் பகைவர்க்கு மதங்கொண்ட யானையாய் நின்பால் அன்புள்ள நமக்கு மதம் நீங்கிய இயல்பான குணமுடைய இனிய யானையாய் விளங்குகிறாய் எங்கிறார்.



**- புலவர் ம. பார்வதிநாதசிவம் -**

### பாரதிதாசனும் உருவகமும்

கன்னி ஒருத்தி குளத்தில் நீராடிக் கொண்டிருக்கிறாள். இளமை தவழும் அவளுடைய முகத்தில் மகிழ்ச்சி விளையாடுகிறது. ஏதோ ஏதோ நினைவுகளால் அவள் முகம் குங்குமமாகச் சிவக்கிறது. அவளது முகப்பொலிவைக் கண்ட ஒருவன், கண்டதும் தனது உள்ளத்தைக் கொள்ளை கொடுத்து விடுகிறான். இந்தக் காட்சியைப் பாடுகிறார் பாரதிதாசன்.

''தாமரை பூத்த
குளத்தினிலே—முகத்
தாமரை தோன்ற
மூழ்கிடுவாள்—அந்தக்
கோமள வல்லியைக்
கண்டுவிட்டான்
குப்பன் கொள்ளை
கொடுத்தனன் உள்ளத்தினை''

குளம் நிறையச் செந்தாமரைப்பூ. பெண் நீராடுகிறாள். இவளுடைய முகமும் தாமரைப் பூக்களோடு இன்னுமொரு தாமரைப் பூவாக மலர்ந்து அழகு செய்கிறது. தாமரையின் பொலிவு முகத்தில் உண்டு. எனவே ''முகத்தாமரை'' என்று உருவக அணியால் விளக்குகிறார்.

### குழவிகொள்பவரின் ஓம்புமதி

கோப்பெரும் சேரல் இரும்பொறை என்ற அரசனைப் பாடிப் பரிசில் பெறச் சென்றார் நரிவெரூஉத்தலையார் என்னும் புலவர். ஓர் அரசன் நாட்டு மக்களை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதனை அரசனுக்குக் கூற விரும்பினார்.

நாட்டு மக்கள் எல்லோருக்கும் அடிப்படைத் தேவையாகிய இருப்பிட வசதி, உணவு, உடை நிறைவு செய்யப்பட வேண்டும்; அவர்கள் நோயுறும் போது மருத்துவ வசதி வேண்டும்; போர் பற்றிய அச்சமின்றி அவர்கள் வாழ வேண்டும்; அவர்கள் மொழி வளம், கலை வளம் பெற்றுச் சிறப்படைய வேண்டும்; அவர்களுடைய சமய நம்பிக்கை பாதுகாக்கப்பட வேண்டும்; அரசனுடைய அன்பு எந்த நேரமும் மக்களுக்கு கிடைக்க வேண்டும். இந்தளவு கருத்தையும் விளக்கப் புறநானூற்றுப் பாடலில் ஓர் அடியே போதுமானதாக இருந்தது. அவ்வளவு சுருக்கமாகச் சொல்லியது உவமை அணி.

''குழவி கொள்பவரின்
ஓம் புமதி''

என்பது அந்த அடி. குழந்தையை வளர்கும்தாய்போல நாட்டு மக்களை பாதுகாப்பாயாக என்கிறார்.

இந்தக் கருத்தைப் புலவர் கூறி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. முடியரசுக்குக் கூறிய இக்கருத்துக் குடியரசுக்கும் பொருந்தும். ஜனநாயகம் பேசப்படும் நாடுகளிலே நாட்டுமக்களைத் தாய் போலப் பேணுகிறார்களா என்பது கேள்வியாகவே இருந்து வருகிறது.

### உவமையை அடுக்குவதில் அழகு

உவமைகளை ஒன்றுக்கு மேற்பட அடுக்கிச் சொல்வதிலும் தனி இன்பம் உண்டு. கபிலர் குறிஞ்சிக் கலியில்,

''ஆய்தூவி அனமென
அணிமயிற் பெடையென
தூதுணம் புறவெனத்
துதைந்த நின் எழில் நலம்
மாதர்கொள் மான்நோக்கின்
மட நல்லாய் நிற்கண்டார்
பேதுறூஉமென்பதை
அறிதியோ? அறியாயோ?''

கண்டவர் காதல் கொள்ளத்தக்க மான் போலும் நோக்கினையும் அன்னம் போலும் நடையினையும் மயில் போலும் சாயலினையும் புறாவைப் போன்ற இயல்பினையும் கொண்ட நின் அழகு மயக்கமடையச் செய்யும் என்பதனை நீ அறிவாயா? அறியமாட்டாயா?

### வள்ளுவர் தனித்துவம்

ஒரு பயனுள்ள செய்தியை விளக்க இன்னொரு பயனுள்ள செய்தியைப் பயன்படுத்துவது வள்ளுவரின் தனிச் சிறப்பு. வள்ளுவரின் உவமானத்திலும் கருத்தாழம் இருக்கும். வள்ளுவரின் உவமேயத்திலும் கருத்தாழம் இருக்கும். உவமானத்திலும் சிறந்த கருத்தை வைப்பது வள்ளுவரின் தனித்துவம். உதாரணத்துக்கு ஒரு குறளைப் பார்ப்போம்.

தலைவியைத் தழுவிய தலைவன், தலைவியைத் தழுவும் இன்பம் எத்தகையது என்று கூறிகிறான்.

''தம்மில் இருந்து தமது
பாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு''

என்கிறான்.

தலைவியைத் தழுவும் இன்பம் எது போன்றது என்றால் தமது சொந்த உழைப்பினால் வந்த பொருளைத் தமது சொந்த வீட்டில் இருந்து விருந்தினர் சுற்றம் முதலியோருடன் பகுத்து உண்ணும் போது ஏற்படும் இன்பம் போன்றது என்று கூறுகிறான்.

உவமேயத்தில் காதற் சிறப்பை வைத்த வள்ளுவர், அதை விளக்க உவமானத்தில் விருந்தோம்பல் சிறப்பை எடுத்தாள்கிறார். உவமேயத்தில் எவ்வளவு கருத்தாழம் இருக்கிறதோ உவமானத்திலும் அவ்வளவு கருத்தாழம் இருக்கிறது.

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலசிலம்பல் படும் யாழ். உள்ளூராட்சி சேவை;

# தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்புப் போக்கு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய முதல்வர் பொ. சிவபாலன் கடந்த திங்கட்கிழமை பதவியேற்றார். அந்தக்கையோடு மாநகரசபையின் மாதாந்தக் கூட்டமும் நடைபெற்றது. அக் கூட்டத்துக்கு கொழும்பில் வைத்துப் பதவியேற்ற—தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் புதிதாக நியமிக்கப் பட்ட — ஐவரும் சமுகமளித்திருந்தனர். இவர்களும் முதல்வரைப் போல கொழும்பிலிருந்தே வந்திருந்தனர்.

மாநகரசபையின் கூட்டம் மிகச் சுமுகமான சூழலில் தடங்கல், மடங்கல் இன்றி நடைபெற்றது. ஏனைய கட்சிகளையும் அரவணைத்துச் செல்லும் புதிய முதல்வரின் திறமை அன்று பிரகாசித்தது. அவரது ஆரம்பம் அன்பு ஆரம்பமாக இருந்தது. இனி மேலும் அவ்வாறே இருக்க வேண்டும் என்று வரியிறுப்பாளர்கள் விரும்புவர்.

மாநகரசபையில் அங்கம் வகிக்கும் ஏனைய மூன்று அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தனர். முதல் தடவையாக ஈ.பி டி.பி. கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் மாநகர சபைக் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் முதல்வரின் பதவிக் காலத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் (அறுவரில்) எவரும் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கவில்லை. புதிய முதல்வரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பிரசன்னமாக இருந்தது புதியவரின் இராசி என்று பேசிக் கொள்ளப்பட்டது.

புதிய முதல்வரைப் போலவே ஏனைய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் அன்றைய கூட்டத்தில் ஒத்துழைக்கும் போக்குடன் செயற்பட்டனர். கட்சி வேறுபாடின்றி மக்கள் — வரியிறுப்பாளர்கள் — நலன் கருதிச் செயற்படும் அணுகுமுறையுடன் நான்கு தரப்பினரும் குறை கூறமுடியாத அளவுக்கு விட்டுக் கொடுத்துச் செயற்பட்டனர்.

இதே அணுகுமுறையும், போக்கும், ஒத்துழைப்பும், ஒற்றுமையும் இனி நடைபெற இருக்கும் மாநகர சபைக் கூட்டங்களில், செயற்பாடுகளில் தொடர வேண்டும் என்பதும் மக்களின் விருப்பம்.

இதே அணுகுமுறையும், ஒத்துழைப்பும், ஒற்றுமையும் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட ஏனைய விவகாரங்களிலும், பிரச்சினைகளுக்கான, பாதிப்புகளுக்கான தீர்வுகளைக் காணும் விடயங்களிலும் இருக்க வேண்டும். அதுவே தமிழ் மக்களின் விருப்பமும் பிரார்த்தனையுமாக உள்ளது.

## சாதனை புரிந்திருக்கலாம்

நாடாளுமன்ற ஜனநாயக நீரோட்டத்தில் உள்ள, நீரோட்டத்துக்கு வந்த, தமிழ்க் கட்சிகள் தமது சொந்த லாபங்களை ஒதுக்கி விட்டு ஒற்றுமையாக ஒத்துழைப்புடன் செயற்பட்டால் எத்தனையோ சாதனைகளை ஈட்டியிருக்க இயலும் என்பது ஸ்ரீமான் பொதுஜனத்தின் மாற்ற முடியாத கருத்து.

அந்தக் கருத்தை அடியொற்றியே தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமையும், சின்னச் சின்ன விடயங்களில் மோதிக் கொள்ளாமல் ஒத்துழைக்கும் போக்கும் தேவை என்பதனை இப்பத்தியில் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளோம். ஒவ்வொரு தரப்பும் தமது நலன் கருதி ஒவ்வொரு திசையாகப் பிளவுண்டு, மோதுவதனையும் இழுபறிப்படுவதனையும் கண்டித்தும் உள்ளோம்.

சிங்களத் தலைவர்களை நம்பி ஏமாந்து போனமை தான் தமிழர்களின் அரசியல் வரலாறாக இதுவரை காலமும் இருந்தது. தமிழ்த் தலைமைத்துவங்களுக்கு இடையே நிலவிய போட்டி, பொறாமை, ஒற்றுமையின்மை என்பனவே இத்தகைய ஒரு துரதிர்ஷ்டவசமான அரசியல் பதிவுக்குக் காரணம்.

யாழ். மாநகரசபையின் புதியமேயரின் முன்னு காரண செயற்பாட்டின் ஆரம்பத்துடனாவது தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை வளர்ந்தால் மக்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைவர்.

மேலும்—

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அடுத்தமாதக் கூட்டத்தை இம்மாதம் இரண்டாம் திகதி வியாழக்கிழமை —இரண்டு நாள் இடைவெளியுடன்—நடத்த வேண்டும் என்ற விருப்பம் தமிழர் விடுதலைக் கூட்டணி தரப்பில் தொனித்தது. ஆனால் அது சாத்தியமாகவில்லை.

கூட்டணி உறுப்பினர்களில் பலர் கொழும்பிலிருந்து கூட்டங்களுக்கு வந்துபோவர் என்று ஸ்ரீமான் பொதுஜனம் மணந்து பிடித்துள்ளார். ''பாதுகாப்புக் கருதி'' என்று அரசாங்கம் கூறுவது போலச் சொல்லிக் கொண்டு, யாழ். மாநகரசபைக் கூட்டத்தைக் கொழும்பில் நடத்தாமல் இருந்தால் சரிதான் என்று சொல்கிறார் அவர்!

வர்கள் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

இதனால் உள்ளூராட்சி சபைகளின் இயக்கம் அல்லது செயற்பாடுகள் தாறுமாறாக, ஒரு நிலை என்று வகுத்துக் கூறமுடியாத அளவுக்கு சீர்கெட்டு உள்ளது.

இதனால் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு உரிய அலவன்ஸை ஒரே ஒழுங்கில் கோரிக்கைப் பட்டியலைத் தயாரித்து அனுப்பி மாகாண சபையிடம் இருந்து வேண்டிய கட்டு நிதியைப் பெறமுடியாது உள்ளூராட்சித் திணைக்களம் திண்டாடுகிறது.

தேர்தல் நடைபெற்று ஐந்து மாதங்கள் கடந்த போதும் உள்ளூராட்சி சபைகளின் இயக்கம் நேர் சீருக்கு வரவில்லை; அலசிலம்புகிறது.

சமீபத்திய உத்தியோக பூர்வ மதிப்பீட்டின்படி—

★ ஒன்பது அங்கத்தவர்களைக் கொண்ட பருத்தித்துறை நகரசபையில் ஐந்து பேரே பதவியேற்று உள்ளனர். கூட்டங்கள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

★ மொத்தம் பதினொரு அங்கத்தவர்களைக் கொண்ட சாவச்சேரி நகரசபைக்கு ஆறு உறுப்பினர்களே பதவி ஏற்றுள்ளனர். கூட்டங்கள் ஒழுங்காகக் கூட்டப்படவில்லை,

★ ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட வல்வெட்டித்துறை நகரசபைக்கு எந்த ஓர் அங்கத்தவரும் பதவிஏற்கவில்லை.

★ பதினைந்து அங்கத்தவர்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேசசபைக்குப் பத்துப் பேர் பதவியேற்று கூட்டங்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன.

★ இருபத்தொரு பேரைக் கொண்ட வலி.கிழக்கு பிரதேசசபைக்கு நான்கு உறுப்பினர்கள் மட்டுமே பதவியேற்றுள்ளனர். தலைவர், உபதலைவர் கூடப்பதவி ஏற்கவில்லை. பதவியேற்றவரிலும் ஒருவர் அண்மையில் விலகிவிட்டார். கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

**உள்ளும் புறமும்** — குறுமுனி

★ பதினாறு அங்கத்தவர்களைக் கொண்ட வலி.தென் மேற்குப் பிரதேசசபைக்கு ஒருவரைத் தவிர எவரும் பதவி ஏற்கவில்லை.

★ ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை பிரதேச சபைக்கு இரண்டு பேர் மட்டுமே பதவி ஏற்றுள்ளனர்.

★ இருபத்தொரு அங்கத்தவர்களைக் கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு பன்னிரண்டு பேர் பதவிஏற்றுக்கூட்டங்கள் ஒழுங்காக நடைபெற்றன. எனினும் இயல்பு நிலை திரும்பும் வரை சகல நடவடிக்கைகளையும் நிறுத்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

★ பதினெட்டுப் பேரை உறுப்பினர்களாகக் கொண்ட வடமராட்சி தெற்குப் பிரதேச சபைக்கு ஆறு அங்கத்தவர்கள் மட்டுமே பதவி ஏற்றனர். கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

★ வடமராட்சி தெற்கு — மேற்கு பிரதேச சபையின் [illegible] ஏழு பேர் மட்டுமே பதவி ஏற்றனர். கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

★ பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில் மூவர் மட்டுமே பதவி ஏற்றுள்ளனர். கூட்டம் இதுவரை நடைபெறவில்லை.

★ 9பேர் கொண்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்கு ஆறு பேர் பதவியேற்றனர். ஆனால் கூட்டம் எதுவும் நடைபெற வில்லை.

★ பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட வேலணைப் பிரதேச சபைக்கு அறுவர் பதவி ஏற்றுள்ளனர் எனினும் கூட்டம் எதுவும் நடத்தப்படவில்லை.

★ நெடுந்தீவு பிரதேச சபைக்கான ஒன்பது உறுப்பினர்களில் நான்கு பேர் மட்டுமே பதவி ஏற்றனர். கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

★ பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு எல்லோருமே பதவி ஏற்றுவிட்டனர். எனினும் கூட்டம் நடைபெற்றதா என்பது குறித்துத் தகவல் இல்லை.

★ வலிமேற்குப் பிரதேச சபையின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை பதினான்கு. அவர்களில் ஐந்து பேரே பதவி ஏற்றனர். கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

★ பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட வலிதெற்குப் பிரதேச சபையில் அங்கத்தவர்கள் பதவியேற்று கூட்டங்கள் நடைபெற்றன.

## காணாமற்போனோரின் பெற்றோரின் ஆதங்கம்

மாநகர சபையின் புதிய முதல்வர் பதவி ஏற்பு நிகழ்வுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அதன் பின்னர் முதல்வருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இனிமேல் மாதாந்தக் கூட்டங்களும் இது போன்ற பாதுகாப்பு ஏற்பாட்டுடன் தான் நடைபெறுமா என்பது குறித்து ஊர்ஜிதமான தகவல் இல்லை.

புதிய முதல்வர் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் ஆற்றிய தமது கன்னி உரையில்—

யாருக்கும் சவாலாக இல்லாமல், வீரத்துடன் போராடுபவர்களையும் அன்பால் அரவணைத்து மக்களுக்குத் தொண்டு செய்யவுள்ளதாகத் தெரிவித்தார். அவரிடம் துணிவும் இருப்பதனைக் கிரகிக்க முடிகிறது,

## அலசிலம்பல் நிலை

எப்படியோ —

யாழ். — கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள பதினேழு உள்ளூராட்சி சபைகளில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஒன்று தான் உருப்படியாக, ஒழுங்காக (ஒன்றரை மாத இடைவெளியுடன் தானும்) இயங்குகிறது என்று கூறலாம்.

ஏனைய நகரசபைகள், பிரதேச சபைகள் இயங்குவதாக இல்லை. அதற்குப் போதிய காரணம் உண்டு என்று உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

சில சபைகள் ஒன்று இரண்டு தடவைகள் மட்டுமே கூடியுள்ளன; மிகப் பல இன்னும் கூடத் தொடங்கவில்லை. சில சபைகளில் மொத்த அங்கத்தவர்களில் சிலரே பதவி ஏற்றுள்ளனர்; சில சபைகளில் இன்னும் எவருமே பதவி ஏற்கவில்லை. பல சபைகளில் பதவி ஏற்ற

நடைபெறவில்லை.

## நிதி நிலைமை

அங்கத்தவர், கூட்டம் கூடும் நிலை இவ்வாறு இன்னும் சீருக்கு வராதிருப்பது போலவே —

உள்ளூராட்சி சபைகள் தமக்குரிய மக்கள் சேவைகளைச் செய்வதற்கான பணம் வந்தும் வராததுமாக உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அவசரப்பட்ட அரசு அவற்றுக்கு நிதி எதனையும் ஒதுக்கவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கும் 30 லட்சம் ரூபா தருவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

அந்தக் கணக்கின் பிரகாரம் கிடைக்கவேண்டிய 5 கோடி 10 லட்சம் ரூபாவில் இப்போதுதான் மத்திய அரசிடமிருந்து வடக்கு—கிழக்கு மாகாணசபைக்கு இரண்டரைக் கோடி ரூபா வந்து சேர்ந்ததாகத் தகவல்.

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை குடாநாட்டு உள்ளூராட்சி சபைகளுக்கென ஒதுக்கிய சுமார் நான்கு கோடி இருபத்திரெண்டு லட்சம் ரூபாவில் இரண்டு கோடிரூபா யாழ்ப்பாணம் செயலகத்துக்கு வந்துவிட்டது. ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் வகுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கு முற்பணமாக வழங்குவதற்கே வந்துசேர்ந்த பணம் பயன்படுத்தப்படும். எனினும் இந்தப் பணமும் இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

ஆகவே யதார்த்த ரீதியாக நோக்கின் புதிதாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு முன்னர் கிடைத்த நிதியை விட புதிதாகக் காசு கைக்கு வந்து சேரவில்லை. அதனால் திட்டங்கள் தயார்; கையில் பணமில்லை என்ற நிலையில் குடாநாட்டின் உள்ளூராட்சி சபைகள் இன்னமும் சரிந்து கிடக்கின்றன. மாகாண சபைக்கும் செயலகத்திற்கும் வந்த பணம் கைக்குக் கிடைக்கும் போதுதான் அவைசற்று நிமிர்ந்து எழும்ப முடியும். இப்படியொரு நிலையேற்படுவதற்கு இன்னும் எத்தனை மாதங்கள் சபைகள் காத்திருக்கவேண்டுமோ தெரியாது. உண்மையில் கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்காத நிலையே இது.

★ ★ ★

யாழ். மாநகரசபை நிர்வாகத்தில் தமிழ்க்கட்சிகள் ஒத்துழைக்கும் அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் நல்ல செய்தியின் மத்தியில் கைதானோர் காணாமல் போனோர் விவகாரம், நிவாரண நிறுத்தத்தை வாபஸ் பெறக் கோருதல் நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுவித்தோ நீதிமன்றத்தில் நிறுத்தியோ நீதியை நிலைநாட்டக் கோரல் ஆகிய விவகாரங்களிலும் தமிழ்க் கட்சிகள் குடாநாட்டில் ஒன்றித்துச் செயற்படுகின்றன. அந்த ஒத்துழைப்பான போக்கின் பிரதிபலனாகவே மனித நீதிக்கான போராட்டக் குழு உருவெடுத்துள்ளது. இந்தக் குழுவின் ஆதரவில் மக்கள் சம்பந்தப்பட்ட மேற்படி பிரச்சினைகளை வெளிப்படுத்தி, உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டப் பேரணி ஆகியவற்றை போராட்டக் குழு நடத்தியிருக்கிறது. இந்த ஆட்சேப இயக்கங்களில் வெகுஜன அமைப்புகளும், தொழிற் சங்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய ஒரு முயற்சியை இதற்கு முன்னரே மேற்கொண்டிருக்கலாம். ஆனால் அரசியல் கட்சிகள் தமது சொந்த இலாபங்களைக் கருதி ஒரே அணி சேர்ந்து செயற்படப் பின்னடித்து வந்தன. இப்போதாவது அவை மனம் மாறியிருப்பது மக்களுக்குப் பல சாதகமான விளைவுகளைத் தரும் என்று எதிர்பார்க்கலாம் எனச் சொல்கிறார் ஸ்ரீமான் பொதுஜனம்.

## உள்ளக் கிடக்கை

அண்மையில் நடந்த உண்ணாவிரதப் போராட்டம், ஆர்ப்பாட்டப் பேரணிகளிற் கலந்து கொண்ட கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் வெளியிட்ட அவர்களது உள்ளக் கிடக்கைகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை.

தங்கள் பிள்ளைகள், தங்களது உறவினர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைத் தானும் அறிந்து சொல்வதற்கேனும் அரசியற் கட்சிகளால் இயலாமல் போய்விட்டமை குறித்து அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இக்கட்சிகள் தமது லாபம் கருதித் தமக்குள் மோதாமல் ஒன்றுபட்டு செயற்பட்டிருப்பின் அரசுக்கு ஒருவகை அழுத்தத்தைக் கொடுத்திருக்கலாமென்ற கருத்து அவர்களிடையேமேலோங்கி உள்ளது.

எனினும் மக்கள் அமைப்புகள், வெகுஜன இயக்கங்கள் போலவே அரசியற் கட்சிகளாலும் காத்திரமாக இது விடயத்தில் உதவ முடியாத நிலை ஒன்று உண்டு. தாங்களும்உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் போன்ற போராட்டங்களை நடத்தி அவை வெற்றி காணாவிடில் அவற்றின் வடிவங்களை மாற்றியும், விஸ்தரித்தும் மேற்கொள்வதே ஒரேமாற்று வழி என்று அரசியற் கட்சிவட்டாரங்களில்கருதப்படுகிறது.

இன்னொன்று—

யாழ்ப்பாணத்தில் மிகப் பிந்தியேனும் தமக்குள் ஒத்துழைக்கும் போக்கைக்

[XI ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனமுற்றவர்களின் துயர் துடைக்கும் ஜெய்ப்பூர் நிறுவனம்



தொழிற்சாலையில் செயற்கைக் கால்கள் பொருத்தப்படுகின்றன. தொழிற்சாலையின் தொழில் நுட்பவியலாளரும் செயற்கைக்கால் பொருத்தி நடமாடுபவரே.



யாழ். நகரை அண்டிய பகுதியில் இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் தங்களின் ஒவ்வொரு காலை இழந்த தந்தையும் மகனும் — ஊனமுற்ற பின்னரும் உறுதியுடன் மேசன் தொழிலில்.

அருளன்

யாழ். குடாநாடு உட்பட வடக்குக் கிழக்கில் கடந்த பல வருடங்களாக நடைபெற்று வரும் போர் காரணமாக ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை ஒன்றா, இரண்டா? எண்ணிலடங்காதவை. இவற்றுள் கண்ணி வெடிகள், பொறிவெடிகள், விமான, ஷெல், குண்டுவீச்சுக்களினால் ஊனமுற்றோரே அதிகம் பேர்.

இவ்வாறு கால்களை கைகளை இழந்தவர்கள், தாம் தமது வாழ்வையே இழந்து விட்டதாக எண்ணிக் குறுகிவிடுகிறார்கள்; தமக்குள்ளே தாழ்வுமனப்பான்மையைத் தாமாகவே வளர்த்துக்கொண்டு சமூகத்திலிருந்து விலகிவிடுகிறார்கள். தாம் நிரந்தரமாக எழுந்து உலவ முடியாது; சராசரி மனிதனாக இருக்க முடியாது எனத் தலைகுனிகின்றனர். உண்மையில் அவ்வாறானவர்களின் மனக் குமுறல்கள், அளவிட முடியாதவை.

நாமும் சமூகத்தில் தலை நிமிர்ந்துநிற்க முடியாதா என ஏங்கிய நெஞ்சங்களுக்கு வாழ்வில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தி புத்துயிர் அளித்துப் புதுவாழ்வளிப்பதில் பெரும் பங்காற்றும் நிறுவனங்களில் ஒன்றுதான் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம்.

யாழ். நகரில் சுண்டிக்குளியில் பழைய பூங்காவிற்குப் பின்னால் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டச் செயலகம் அமைந்துள்ளது. வடபகுதியில் யுத்தம் மற்றும் விபத்துக்கள் காரணமாக கை, கால்களை இழந்தவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் இலவசமாகவும், நன்கொடையுடனும், செயற்கைக் கால், கைகள் பொருத்தப்படுகின்றன.

இங்கு யாழ். மாவட்டத்தில் காலை, கையை இழந்தவர்களும் சராசரி மனிதர்களாக வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அண்மையில் நிகழ்ந்த இடப்பெயர்வின் பின் இங்கு 200 க்கும் மேற்பட்டோருக்கு கால் கைகள் பொருத்தப்பட்டுள்ளன. மழலைகள், மாணவர்கள் முதல் பெரியோர்கள் வரை இங்கு கால்கள் பொருத்தப்படுகின்றன.

இந்த நிறுவனம் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி 25 ஆயிரம் ரூபா ஆரம்பநிதியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமைக் காரியாலயம் கொழும்பில் இயங்குகிறது.

யுத்தத்தினால் மனரீதியாக, உடல்ரீதியாகப் பாதிப்புற்றவர்களுக்கு இந்நிறுவனம் ஆற்றிவரும் சேவை அதிகம்.

இந்த நிறுவனத்தின் 11 ஆவது ஆண்டுவிழா நிறைவையொட்டி அதன் தலைவர் திருமதி லங்கா சிவராமலிங்கம் சஞ்சீவிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்த சில விடயங்கள் வருமாறு:—

★ கேள்வி; போரினால், தமது அங்கங்களை இழந்து உடலளவில் முடமாகியதோடு மட்டுமல்லாமல் மனத்தளவிலும் ஊனமாக்கப்பட்டவர்களுக்கு பெரியளவில் சேவையாற்றிவரும் உங்கள் நிறுவனத்தின் ஆரம்பகால செயற்பாடுகள் எவை?

★ பதில்: 1987 ஆம் ஆண்டளவில் வல்வெட்டித்துறைப் பகுதியில் இராணுவத்தினரால் ஆண்கள் கடத்தப்பட்ட வேளையில் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்காக அன்னையர் முன்னணி என்ற பெயரில் அமைப்பொன்றை உருவாக்கினோம். அது செயற்பட்டுக்கொண்டிருந்த வேளையில் கொழும்பிலிருந்து 'பிரண்ட்—இன்—நீட்' சங்கத்தின் (Colombo Friends In Need Society) தலைவர் யாழ்குடாநாட்டில் இவ்வாறு ஒருசெயற்கைக்கால் திட்டத்தை ஆரம்பித்தால் என்ன என்று கேட்டு எம்மை ஊக்கப்படுத்தினார். நாமும் அதற்குச் சம்மதித்ததால் அந் நிறுவனம் எமக்கு 25 ஆயிரம் ரூபா நிதி தந்தது. அந்த நிதியுடன் ஆரம்பிக்கப்பட்டதே யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம். இவ்வாறு சிறு மழலையாய் மலர்ந்த இந்த நிறுவனம் 11 ஆவது அகவை நிறைவை கொண்டாடுவதையிட்டு நான் பேருவகை அடைகிறேன்.

யாழ்ப்பாணம், ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனம் கடந்த புதனன்று தனது 11 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. அதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகுகின்றது.

★கேள்வி: உங்கள் நிறுவனத்தில் எத்தகையவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்படுகிறது; எந்தெந்த வழிகளில் ஊனமுற்றவர்களுக்கு உதவி வருகிறீர்கள்?

★ பதில்: எமது நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் தமர், பிறரெனப் பார்ப்பதில்லை; நாம் காசுபணத்தை நோக்குவதில்லை. இங்கு கால்களை, கைகளை இழந்து வருபவர்களுக்கு நாம் ஐந்து நாள்கள் எமது விடுதியில் தங்கவைத்து புதிய செயற்கை அவயங்களைப் பொருத்தி அனுப்புகிறோம். மற்றவர்களால் தூக்கி வரப்பட்டவர்கள்— ஊன்றுகோல்களுடன் சிரமப்பட்டு வந்தவர்கள்— ஐந்து நாள்களில் ஜெய்ப்பூர் செயற்கை அவயவத்தை அணிந்துகொண்டு உறுதியுடன், அகத்திலும் முகத்திலும் உவகை பொங்க வெளியே போகும்போது எமது சேவை எமக்கு மன நிறைவைத் தருகிறது.

எமது நிறுவனம் செயற்கை அவயங்களைப் பொருத்துவதோடு மட்டுமல்லாமல் உடல் ஊனமுற்று நடக்க முடியாத காலுள்ளவர்களுக்கு இங்கு முச்சக்கர வண்டிக்கதிரை, முச்சக்கர சைக்கிள் ஆகியவற்றை வழங்கி வருகிறது.

இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நாம் சிகிச்சையளித்து வருகிறோம்.

இதைவிட சுயதொழில் ஊக்குவிப்புக்கென எமது திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை வருடாவருடம் ஒதுக்கி வருகிறோம். இதன்படி எம்மிடம் வரும் ஊனமுற்றோருக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்கென வட்டி இல்லாமல் கடன்களை வழங்கி வருகிறோம். அத்துடன் கைகால்களை இழந்த இளைஞர்கள், குடும்பஸ்தர்களுக்கு எமது நிறுவன வேலைத்தளத்திலேயே வேலைவாய்ப்பும், ஊனமுற்ற— எம்மிடம் பதிவு செய்த—பாடசாலை செல்லும். மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டமொன்றின் கீழ் கல்வி கற்பதற்கு உதவியும் வருகிறோம். எமது அலுவலகத்தில் தற்போது யாழ். போதனா வைத்திய சாலை வைத்தியர் ஒருவரின் உதவியுடன் இயன் மருத்துவ வியல் (Physiothrophy) பயிற்சிகளை அளித்து வருகிறோம்.


★ கேள்வி: உங்களது செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உள்ளூர் வெளியூர், தொண்டர் நிறுவனங்களிடமிருந்து உதவிகள் கிடைக்கின்றனவா?

★பதில்: ஆம், எமக்கு அரசாங்கத்தினால் எந்த விதமான உதவிகளும் கிடைப்பதில்லை. உள்ளூரில் லயன்ஸ்—லியோ கழகங்கள், றோட்டறிக்கழகம், வை. எம். சி. ஏ. போன்ற சமூக சேவை அமைப்புகள் வழங்கி வரும் உதவிகள் மறக்கமுடியாதவை. இதைவிட வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்தும் எமக்கு ஓரளவு உதவிகள் கிட்டுகின்றன.


ஆனால் எமக்கு மக்களின் ஒத்துழைப்பு போதியளவு இல்லை என்பதுதான் வருத்தப்பட வேண்டிய விடயம். ஏனெனில் நாம் எந்தவித அரச உதவியுமின்றி இயங்குகின்ற ஒரு பொது நிறுவனம். மக்களின் சேவையே எமது நோக்கம். ஊனமுற்றோரின் வாழ்வைச் செழுமைப்படுத்துவதற்காக மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் சுய தொழில் ஊக்குவிப்புக்கென கடன்களை நாம் வழங்கி வருவதும் தெரிந்ததே. இக்கடன்களை வாங்கி இலாபமீட்டியவர்கள் கூட தமக்குப் பின் வேறொரு ஊனமுற்றவர் பயன் பெறவேண்டுமே என்று கூடப்பாராது கடனை மீளளிக்கப் பின்னடிக்கிறார்கள். இது கவலைக்குரிய விடயமே. அவர்கள் சீராக கடனை மீளளித்தால் நாம் இன்னுமொரு பயனாளிக்கு அதைக் கொடுக்க முடியும். ஊனமுற்றோர், மறுவாழ்வு பெறுவதே எமது நோக்கம். உடலால், உள்ளத்தால் முடமாக்கப்பட்டவர்களுக்குப் புத்துயிர் அளிப்பதில் அனைவரும் எமக்குத் துணை நிற்க வேண்டும். அவ்வாறாயின் நாம் எமது சேவையின் மூலம் சமூக அந்தஸ்தை நிச்சயமாக உயர்த்த முடியும்.

★ கேள்வி: இறுதியாக ஒரு கேள்வி... உங்களது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 11 வருடங்களாகியும் இன்னமும் உங்களது உதவி பெறாமல் ஊனமாகவே வாழும் ஒரு சிறு பகுதியினர் எம்மிடையே இருக்கிறார்களே... இதற்குக் காரணம் யார்?

(X ஆம் பக்கம் பார்க்க)



ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலையின் முகப்புத் தோற்றம், கோயிலுக்கு என இளநீர் பிடுங்கச் சென்ற சமயம் தென்னையின் கீழ் இருந்த மிதிவெடியில் சிக்கி இருகால்களையும் இழந்து, செயற்கைக் கால் பொருத்தப்பட்ட ஒருவர் வாசலில் நிற்கின்றார். இந்த செயற்கைக் கால்கள் அவரின் வாழ்வில் மீண்டும் வசந்தம் வீசச் செய்துவிட்டன.



இரண்டு கால்களையும் இழந்து செயற்கைக் கால்களால் நடமாடும் மாது ஒருவர். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சுய தொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உதவியைப் பெற்று சிறிய கடை ஒன்றை நடத்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய தேசம்

உணர்வோடு விளையாடும் உலகானது—மனித
உயிர்கூட விலையற்ற பொருளானது!
மணல்மேடு கனிகாய்க்குந் திறன்போனது—இன்று
மனுக்கூடு புதைக்கின்ற தரையானது!
இனத்தோடு இனம்மோதும் விதியானது—நாம்
இருக்கின்ற மனைகூடப் பகையானது!
மனத்தோடு ஒருமிக்கும் மனம்போனது—கொண்ட
மதத்தோடு முகம்பார்க்கும் இருளானது!

மொழியோடு முரண்பட்டு பகைமூண்டது—இழந்த
மண்மீட்கப் போராடும் வகையானது!
வழியோடு வகைசேர்ந்து உரம்மூண்டது—கொண்ட
வன்மத்தில் தோளோடு பகைசேர்ந்தது!
குழிதோண்டிக் குதிக்கின்ற நிலையானது—நம்
கண்கெட்டு, நாணற்று திறம்போனது!
விழிதோண்டி விலைபேசும் நகந்தன்னையே—நம்
வாழ்வென்று ஊர் சொல்லும் பழியானது!

ஆதிக்க வெறியொன்றே குறியானது—உடன்
ஆயுத்த மில்லாது போர் மூண்டது!
பாதிக்கு மிகையாக பலம் போனது—உயர்
பேதத்தில் சொந்தத்தில் காழ்ப்பானது!
போதிக்கும் அறிஞர்க்கும் தலைபோனது—உள
பாசங்கள் வேரோடு தூளானது!
சாதிக்கு சரிவென்ற நடையானது—குல
சாரங்கள் ஒட்டோடு புளியானது!

போரோடு வாழ்கின்ற தேய்வானது—உலகம்
பேரோடு சமாதான வழிதேடணும்
வேரோடு சாகின்ற நாள்வந்ததும்—நமையே
வேறாரும் அனணத்தேக வரநாணுவர்
நாரோடு சேர்கின்ற பூவாகவே—ஒருமை
நாம்காணும் நிலைகண்டு இறைவாழுமே!
ஆரோடு போரென்ற நேர்மாறுமே – நிதமும்
ஆரோக்ய நிலந்தன்னுள் நாம்வாழலாம்!

— மாவை வரோதயன்—

# காத்தவராயா! காக்கவாராயா?

ஆனைக் கோட்டைக் காத்தவராயா—நீயும்
ஆடு கோழியில் ஆசை கொண்டாயா?
வாயில்லா ஊமைகளை வாய் கதறக் கொல்வதனால்
வலிகாமம் மக்கள் வாழ வழி கிடைத்திடுமோ?
பலி கொண்டு உன்கோயில் பழிசேர விடலாமா?
இலி இன்றி உன் பேரும் வியாபாரப் படலாகுமா?
யார் சொல்லி உனக்கிந்தப் பேராசை வந்ததப்பா?
பார் போற்றும் தெய்வம் என்ன பணத்தாசைப் பலியாடா?
பலி போட்டு இங்கே பழி மாற்றப் புறப்பட்டோர்
படைப்பாரா தம்மகனை பலியென்று நீ கேட்டால்?
ஏனப்பா இந்த ஏமாற்று வித்தையெல்லாம்?
கூறப்பா நீ அவர்க்கு கூறிடலை விடுகவென்று...
கொடுவாளைத்தடுப்பதற்குக் குதிக்கலையா உந்தனுள்ளம்
எடுப்பார் கைப்பிள்ளை ஆகிவிட்டால் ஏது தெய்வம்?
பிள்ளை அலறியழ பெருமையுனைச் சேருமென்றால்
அன்னையென்ன அப்பன் என்ன அன்பும் அறனுமென்ன?
இனப்பாகுபாடு இழிவுச் செய்கையெல்லாம்
எதிர்ப்பேயில்லாமல் இணக்கம் உனக்கென்றால்
இறை எமக்கு ஏனிங்கே?
திறை செலுத்தி வாழ்வதற்கா?
வேண்டும் பதில் எனக்கு
வேள்வி உனக்கேனென்று
கேவலத்தை அனுமதித்துக் கேட்டாயா நீ என்று?
கொல்லான் புலாலை வெறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழுமென்ற நிலை எங்கே?
கொலைக்களம் காணும் கோயிலென்றால் உண்மையெங்கே?
அரக்க குணம் வளர ஆதரவு கொடுப்பதென்றால்
இரக்கமுள்ள இறை நீயா? உன் நிலையும் ஓர் சிறையா?
வெட்டரிவாள் மீண்டொருகால் வேலை தொடங்குமுன்னே
காகத்தவராயா...! நீயும் காக்க வாராயா?

— வேலணை ஷணா

# வேடுவத் தலைவ! வியக்கின்றேன் நினையே!

துண்டோ கட்டி, தோளில் துணிதான் போட்டு—நிதம்
தண்டேகரத்தில் தாங்கி தலைவனாய் உயர்ந்து ஓங்கி
பண்டு மகியங்கினைப் பதியினில் வாழ்ந்து—அந்தோ
''சென்றுவிட்ட'' செம்மலே! - திஸகாமி!
சிரம் தாழ்த்திப் பணிகின்றேன்
அன்று இலங்கைத்தீவை ஆண்டவுன் (!) இயக்கர்சாதி
சந்ததியில் வந்துவிட்டு, சற்றே மேல்நாட்டு மோகம்
முந்தியே பெற்றதனால் மூதாதை உனைமறந்து
திக்கெல்லாம் சிதறி, தீமையெல்லாம் தமதாக்கி
எக்காளமிட்டு ''எம்மை விடயாருண்டு?''
என்னும் உம்மவரை இயல்பாய் புறக்கணித்து
''இன்னும் நாம் வேடுவரே'' எனக்கூறித் திடமாக
கருமைக் காட்டினுள்ளே வாழ்ந்துவந்த கோமகனே!
கானகத்தில் வாழ்ந்திடினும் கனவானாய் வாழ்ந்திட்டாய்;
ஈனமிகு செயல்களையே இடித்துரைத்துக் குறைத்திட்டாய்;
தூணாக நின்றுந்தன் சுற்றத்தை ஓம்பிவிட்டாய்! இங்கே
வளர்ந்துவிட்ட நவஉலகின் வளங்களெனவுரைத்து
களைந்து விட்டுத் தம்பண்பு கடமைகளனைத்தையுமே
அலைந்துலையும் மனிதர்களே—அட நின்னை நினைக்கையிலே
மலைக்கின்றேன் மனத்துள்!
மனதாரப் போற்றுகின்றேன்!

— அனலையூர்ச் சேந்தன்—

# தேநீர்க் கடை சான்றிதழ்

பழஞ்சோற்று வடை
பல நாள் கேக்
இளவளத்த இனிப்புப் பண்டம்
இத்தனையும் அடக்கி வைத்த
ஈ மொய்க்கும் அலமாரி!
குடநீர் திறந்திருக்கும்
குப்பைகள் குவிந்திருக்கும்
குடிப்பதற்கு தேநீர் தந்தால்
குட்டி எறும்பு ஒட்டி வரும்!
குட்டை நாய்கள்
எட்டிப் பார்க்கும்
எச்சில் இலை எடுத்துண்ணும்
பின்புறக் குசினி பார்த்தால்
பிரட்டி வயிறு குமட்டிவரும்.

அழுக்கான கடையதற்கு
அழகான சான்றிதழ்
அச்சடித்துப் பிறேம் போட்டு
அக் 'கபே' யில் காட்சிக்கு...

சுற்றாடல் கடைக்குள்
சுத்தமான கடையதாம்
சுகாதாரச் சபை கொடுத்த
சுக வாழ்வுச் சான்றிதாம்!

— மானியூர் ரட்ணேஸ் —

# நறுந்தேன்

ஆருயிர் கவர்ந்திடும்
அந்தகன் போலொரு
பாதகன் வந்தனன்
பந்தம் ஒன்றேந்தி.

சொந்தம் எம்மவை
சூழ்ந்து கலைந்தன
குஞ்சு குடம்பிகள்
கூட்டில் பொசுங்கின.

குற்றுயிரில் சில
குறுகித் துடித்தன
பற்றிய வெப்பில்
பதைத்துயிர் நீத்தன.

சிற்றுடல் தீயில்
வெந்து மற்றவை
சிதறிப் பிளந்து
சீவன் இழந்தன.

காற்று சுனை திடல்
கடந்து பறந்து
பூக்குறி தேடி
போந்து உறிஞ்சி

கூட்டில் உமிழ்ந்து
குவித்த தீனி
வேட்டையாடி
போயினர்! அந்தோ

உதரத் தெழுந்திடு
உறுபசி கொன்று
வளர்சிறு குளவிகள்
வயிறு நினைந்து

சிறுகச் சிறுக
சேர்த்த தீனி
பறித்துப் போயினர்
பாதகர் அந்தோ!

அனற்பொறி தப்பி
அகன்ற ஈக்கள்
முனைப்பொடு மீண்டு
மொய்த்துச் சூழ்ந்தன.

வனப்பொடு சுகித்து
வாழ்ந்த கொம்பு
நெருப்பது பற்றி
நீறானமை கண்டன.

இகமதில் மாந்தர்
ஈனம் கண்டு
இரைந்தன சினந்தன
எழுந்து பறந்தன.

கரந்து வேறிடம்
கடிதில் ஏகி
தேர்ந்தன குளவிகள்
திடமுடன் வாழ்வு.

— வை. சுந்தரேசன் —

# நடிப்பு சுதேசிகள்

முகத்திலே சிரிப்பு வைத்து — தம்
முதுகிலே கத்தியை மறைத்து வைத்தார்
அகத்திலே வஞ்சம் கொண்டார் — அவர்
ஆவியைப் போக்கவே நாமெழுவோம்!

நாக்கிலே நஞ்சுவைத்து — நுனி
நாவிலே தேனினைச் சொட்டவிட்டார்
சாக்கடைச் சேற்றில் இவர் — பூத்
தாடிடின் வேரொடு களையெடுப்போம்!

வீட்டிற்கு மோசம் செய்து — வெளி
வீதியில் நல்லதாய் வேடமிட்டால்
பூட்டிய அறைக்குள் வைத்து — நல்ல
பூசைகள் போடவும் பின்னடியோம்!

தவறினை உணர்ந்து கொண்டு — அதை
தவிர்க்கிற வழியிலே முயன்றுவிடு
உறுதியாய் வாழும் எண்ணம் — மனதில்
ஊன்றினால் என்றுமே இன்பமுண்டு!

— கி. குருபரன் —

# கண்ணோடு காண்பதெல்லாம் கண்களுக்குச் சொந்தமில்லை!

பூவொன்று இதழ்விரிந்து போனால் — அதன்
புதுவாசம் சொந்தமிலை யங்கு
தேவண்டு தேடிவந்து தொட்டால் — இனித்
தேன்கூடச் சொந்தமிலை நம்பு!

இலையசைய வீசுகின்ற காற்றில் — அதன்
இதழ் இலைக்கு சொந்தமிலைத் தம்பி
குலைபோட்டு மூசுகின்ற வாழை — அதன்
குலை, குட்டி உண்டதிலைத் தம்பி!

மழைவந்து தரைவீழும் போது — எழும்
மணம் அதற்குச் சொந்தமில தம்பி
உலைமீது எழுகின்ற ஆவி — இனி
உறுப்பாகும் காற்றிடையே மேவி!

இருள்வந்து பூமியினைத் தொட்டால் — அந்த
இடம் ஒளிக்குச் சொந்தமிலைத் தம்பி
ஒரு குண்டு வெடிக்கின்ற போது — பலர்
உயிர் எவர்க்கும் சொந்தமிலைத் தம்பி!

— கி. வாயுபுத்திரன் —

# தேர்

கடலெழுந்த தாமென கரமிணைத்து நாமெலாம்
வடம்பிடித்து நிற்கிறோம்; வலியதேர் இழுக்கவே
திடமிருக்கு நெஞ்சினில், தினவிருக்கு தோள்களில்
அட! கணங்கிடாதினி; அசையுமெங்கள் தேர் இனி!

ஐயர் சூடங்காட்டினார்! கண்ணில் ஒற்றிக் கொண்டுநாம்
செய்த நேர்த்தி எண்ணினோம்! சேர்ந்துமே வடந்தனை
''நைந்துபோன நூலென நினைந்திழுத்தனம்''; அதோ...
பையத் தேரும் நகருது; பரவசம் பிறக்குது

வாழைமாலை ஆடுது! ஆலவட்டம் சூழ்ந்தது!!
கும்பலின் அரோகரா... வானை, மண்ணை மூடிற்று
மேளதாளம் தேரையும் துள்ளிச் செல்ல வைத்தது
காவடி அதிர்ந்தது! வேதம் வாழ்த்திசைத்தது!!

கோடி பக்தர் தேரினை காணவந்தனர்; அதைக்
கூடிச் சேர்ந்திழுக்கலை! ஒதுங்கினர்.. வணங்கினர்.
பாதித்தூரம் வந்ததேர் வேர்பரப்பி நின்றிடல்
தீது என்று தேறினோம்; பொடியளாய் இழுக்கிறோம்

தேரும் வீதி வந்ததால் மக்கள் கண்டு போற்றினர்;
சாதி வேறுபாடுகள் மறந்துவிட்டு ஆர்த்தனர்;
தேரில் வந்த தேவனைக் கண்டு வாழ்த்தினர்! வரம்,
நீதி, கேட்டு ஏங்கியே... வீதி மக்கள் காத்தனர்

உரிமைக்காரரோடு 'அவ் வுபயகாரர்' மட்டுந்தான்
வருவர் தேரிழுக்கவே என்ற நீதி மாற்றிநாம்
கரம் கொடுத்திழுத்தனம்! கடவுளா தடுத்தனன்?
கவிந்த போலி வேசங்கள் கலைய... நாம் உயிர்த்தனம்!

மண்டபப் படிகளால் வாசல்கள் சிரித்தன
பெண்களும் வடத்தினைத் தொட்டனர்...; இழுத்தனர்
''சின்னஞ் சிறிசு'' தேரின்பின் சென்று சங்கு ஊதிற்று
'பென்சன் கிழடு' கூடக்கை குவித்து சிந்து சொல்லுது

''சறுக்குக் கட்டை'' போட்டிடல் தவறினால் நசியும் கை!
இதைத் தெரிந் தறிந்தவர் ''தேர் திருப்ப'' உதவவும்...,
குறித்த நேர வேளையுள் இருப்பிடம் அடைந்திட
சுறுசுறுப்பு சூழ்ந்ததேர்... அசையுது; நகருது!

— அருணன் —

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப் பொடியனும் புழுக்கொடியலும்...

**துரை சுப்பிரமணியம்**

அம்மா செத்தவீட்டிற்குப் போய்விட்டு வந்து தோய்ந்து விட்டு தலையை உலர்த்தித் தனது வெள்ளைத் தலைமயிரைக் காயவிட்டுக் கொண்டு நின்றார்.

''என்ன மலலமாதிரிக் கிடக்கிறான் தம்பி அந்தப் பொடியன்......ச்சா ... அரும் மந்த இளந்தாரி...''

''ஏனாம் அம்மா அவன் செத்தவன்...?''

''...அவனோ... அவன் சாகத்தான் வேணும்...அவன் வீட்டுக்கும் உதவான் நாட்டுக்கும் உதவான். அவனை வீட்டுக்காரர் இருக்கிற காணியை அறா வட்டிக்கு ஈடு வைச்சு பிரான்சுக்கு அனுப்பினது களாம்...அவன் அங்கை போய் பவுடர் அடிச்சவனாம்...அதென்ன தம்பி... பவுடர் அடிக்கிறதெண்டால்...''

''அதம்மா அந்த அபின், கஞ்சா மாதிரித்தான் வெறிக்கும்...பவுடராய் அரைச்சசு வைச்சிருக்கிறாங்கள் ... ஒரு ஓலை நெட்டியாலை எடுத்து போடுற அளவு...ஒருக்காப் போடுற மூக்குத்தூள் அளவு நூறு ரூபாக்குக் கிட்ட வருமாம்...''

''அப்ப அவன் உழைக்கிறதெல்லாத்திற்கும் உந்தப் பவுடரைத்தான் வாங்கி அடிச்சுக்கொண்டு திரிஞ்சவனாம்...ஓயாமல் அதையே அடிச்சதாலை அவனுக்கு நரம்புத் தளர்ச்சி நோய் வந்து வேலைவெட்டி ஒண்டும் செய்யமுடியாமல் இஞ்சாலை வந்து சேந்தானாம். இஞ்சை வந்து சும்மா இருந்தானே...''

''அந்தக் குமரிப்பிள்ளையளும் தாயும் சேர்ந்து கிடுகு பின்னிக் சஷ்டப்பட்டு உழைக்கிற காசைத் தூக்கிக் கொண்டு ஓடிவிடுவானாம். காசு இல்லையெண்டால் நிவாரணத்துக்குக் குடுக்கிற சாமானைக் கொண்டுபோய் வித்துப்போட்டு குடிச்சுப் போட்டு நல்ல வெறியில வருவானாம் ... அண்டைக்கும் அவன் விடிய எழும்பித் தோஞ்சுபோட்டு தாய் மனுஷியிட்டைக் காசுகேட்டவனாம்...தாய்மனுஷி தன்னட்டையில்லை எண்டவவாம் 'என்னை இந்த வயசிலையும் கிடுகு பின்னி வயிறு கழுவ வச்சிட்டு...இந்த இரண்டு குமருகளைப்பார்... வாடிச் சுருங்கி கோலம் கெட்டுப் போய் நிக்குதுகள்...உங்களை ஆம்பிளைப் புள்ளையன் எண்டு வளர்த்து விட்டதிலை நான் என்னத்தைக் கண்டன்...இஞ்சை பார்...உடுத்த சேலைக்கு பதில் சேலை இல்லை கட்ட ...காணியாலை ஈட்டுக்காறன் எழுப்பப்போறான்... நானும் இந்த இரண்டு குமருகளும் ஆற்றை கோடியுக்கை போய் பதுங்குறது...இதைப் பற்றி உனக்கு எள்ளளவேணும் சிந்தனையில்லை... என்ரை வயித்திலை நெருப்பை அள்ளிக் கொட்டிறியளே...எனக்கு எப்ப தான் சாவுவருமோ...? ஐயோ கடவுளே என்னைக் கெதியாக் கொண்டு துலையன்...' எண்டு தலையிலை அடிச்சுக் கத்தினவளாம். அது அவனுக்கு நல்லாச் சுட்டுப்போட்டுதாம். அண்டைக்கும் நல்ல வெறியிலை வந்து அலரிக்காயை அரைச்சுத் தின்டவனாம். உந்தப் பொடியளுக்கு என்ன பவுடர் அடி...உந்தப் பவுடருக்குக் குடுக்கிற காசை ஒரு பேணிக்கை போட்டு வைச்சாலும் அந்தக் குமருகளுக்காவது உதவும்...சரி, நீ பிரான்சிலைதான் அந்த அநியாயத்தை செய்தனியெண்டால் இஞ்சை வந்தும் உனக்குப் பவுடர் அடியே...உந்தப் பவுடர் அடிக்கிற கவனம் வரேக்கை நாலைஞ்சு புழுக்கொடியலை நறுக்கிப் பொக்கற்றுக்கை போட்டுக் கொண்டால் வேணுமெண்டால் இரண்டொரு தேங்காய்ச் சொட்டுத் துண்டுகளையும் வைச்சுக்கொண்டு சப்பினால் தேகத்துக்கும் நல்லது...தேசத்துக்கும் நல்லது ...புழுக்கொடியலின்ரை விஷேஷம் இந்த நாளைப் புதுப் பெடியளுக்கு எங்கை விளங்கப் போகுது... நாங்கள் ஒடியல் புட்டுத்திண்டுதானே இப்பவும் தைரியமாக இருக்கிறம்... உதுகள் எங்கை கேக்கப் போகுதுகள்...பளசுக்கு உதுதான் தெரியுமெண்டு சொல்லுங்கள்...''

—என்று சொல்லிக்கொண்டு சுடச்சுட தேநீர் குடிக்க அம்மா அடுக்களைக்குள் சென்றாள்.

அம்மா—பழசு, சொன்ன 'புழுக்கொடியல் தேகத்துக்கும் நல்லது தேசத்திற்கும் நல்லது என்றதை மிகவும் சீரியசாக யோசித்துக் கொண்டு நானும் புழுக்கொடியலைத் தேடி அடுக்களைக்குள் நுழைந்தேன்.

★

(யாவும் கற்பனை)

சஞ்சீவி

# சிறு கதைகள்

## வேள்வி

**ஆழியூர் விஜய்**

தாடியனுக்கு தான் இன்னும் பத்து நாள்களில் சாகப் போகிறேன் என்பது புரியாமல் அவிழ்த்துப்போட்ட ஆலங்குழையை ''கறக் முறக்'' எனக் கடித்துத் தின்றுகொண்டிருக்கிறது. நிமிர்ந்த வெண்ணிறத் தோற்றம்; நீண்ட ஆலம் இலைச் செவி. இருபுறமும் உள் வளைந்த அழகான கொம்புகள். இதையெல்லாம் விட அழகான வெண்ணிற தாகூர் தாடி. வெள்ளிக் கம்பிகள் போல் எப்போதும் மினுங்கிக்கொண்டிருக்கும். அது அடிக்கடி தனது தாடியால் என் முகத்திலே உராய்ந்து விளையாடும். தாடியன் பிறந்து மூன்று நாளில் தாய் ஆடு வலித்துச் செத்துவிட்டது. அன்று முதல் புட்டிப் பால் கொடுத்து அதனை அன்பாக வளர்க்கும் என்னிடம் அதற்கு அன்பு இல்லாமல் போகுமா? ஒருமுறை பரமசிவம் அண்ணையின் கடியன் நாய் அதன் பின்னங்காலிலே கடித்துக் குதறிவிட்டது. ஓடிவந்து முற்றத்தில் விழுந்த தாடியனுக்கு பச்சிலை மருந்துபோட்டு காயம் ஆற்றுவதற்கு பெரும்பாடாகிவிட்டது. அப்போதெல்லாம் கெந்தி கெந்தி ஓடி வந்து தனது காலைத்தூக்கி எனது மடியில் வைக்கும். வீம்புக்கு கொம்பால் என்னை மெல்ல உரசும். தனது நாக்கால் எனது முழங்கால்களை நக்கும். மனிதர்களிடம் இல்லாத நன்றியுணர்வு அதற்கு இருக்கிறதோ? ... ஆனால் அதற்கு நிகழப்போகும் கொடுமையை — நினைத்து உள்ளம் உள்ளுக்குள்ளே மௌனமாக அழுதது.

''அம்மாவேண்டாமணை. தாடியனை வேள்விக்கு விட வேண்டாம். உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன் அம்மா...''

நான் ஏக்கத்துடன் சொன்னேன்.

''டேய் தம்பி இது பிறக்கயிக்கையே இத நேத்திக்கு விடுகிறதெண்டு நேத்தி வைச்சுப்போட்டன். பிறகு கோயில் குறை ஆக்களைச் சும்மா விடாது. சொன்னாக் கேளடா'' என்று கூறிவிட்டு அம்மா உள்ளே போய் விட்டா. அம்மாவின் பதில் என் நெஞ்சை உலுக்கியது. அன்பாகப் பிள்ளையைப் போல் வளர்த்த தாடியனை— அந்த அன்பான ஐந்தறிவுச் சீவனை—வேண்டாத மூடக் கொள்கைகளுக்கு பலியிடுவதா? அதுவும் புனிதமான அன்பே உருவமான கடவுளின் பெயரால்.

வெளியே மாமரத்தின் கீழ் வந்தேன். தாடியன் என்னை நோக்கிக் கெந்திக் கெந்தி ஓடிவந்தது. அதனைப் பிடித்து மெல்லத் தடவிக் கொடுத்தேன்.

★ ★ ★

வேள்வி தொடங்கிவிட்டது. கோயிலில் ஆடுகளும், கோழிகளும் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டு இருந்தன. நடுவிலே இரத்தக் கலரில் ஒரு கொடி, பறந்து கொண்டிருந்தது. 'அதுதான் பலிக்கொடியோ...?' தங்களது முடிவை, மரணத்தை அறியாது அவை கோயிலுக்கு வருவோரையும், போவோரையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தன.

தாடியனை அப்பா குளிப்பாட்டி குங்குமப் பொட்டு வைத்து கோயிலுக்கு கொண்டுபோக ஆயத்தமானார். அது மிரள மிரள என்னிடம் ஓடிவந்தது. மெல்லிய குரலில் 'மே...மே' என்றது. எனது கைவிரல்களை நாக்கால் நக்கியது. கண் இடுக்கால் கண்ணீர் வழிய என்னைப் பரிதாபமாகப் பார்த்தது. அது தனது முடிவை அறிந்துவிட்டதோ? ... ''தாடியா? என்னைமன்னிச்சிடு. உனக்கு நடக்கப்போகும் கொடுமையை தடுக்க முடியாத பாவி நான்'' அதன் முகத்தை ஆதரவாய் தடவினேன். அப்பா கழுத்துக் கயிறை இழுத்துக்கொண்டு தாடியனைக் கொண்டுபோட்டார். அது தூரத்தில் 'மே... மே' என அலறும் சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.

★ ★ ★

நடுச்சாமம் 12 மணி. வேள்வியைக் காண மக்கள் கூட்டம் அலை மோதியது, நடுக்கட்டையில் கயிற்றைக் கட்டி அதனை ஆடுகளின் தொண்டையோடு சேர்த்து பிணைத்து கட்டிவைத்திருந்தனர். சாமி வந்த சிலர் பலி பீடத்தைச் சுற்றி ஆவேசத்துடன் உருக்கொண்டு ஆடினர். எனது தாடியனைப் பார்த்தேன். தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு நின்றது, யாரோ கழுத்தில் சிறிய மாலை ஒன்று போட்டிருந்தார்கள். திடீரென உரு [illegible] வாளை உருவினார். அவர் தான் ஒவ்வொரு முறையும் பலி வெட்டுபவர்.

''...பலிகொள்ளத்தொடங்கீட்டுது சாமி...அம்மாளே... அம்மாளே...'' என எல்லோரும் உரத்த குரலெடுத்து கத்தினர்.

'சதக்' 'சதக்' தலைகள் மண்ணிலே உருண்டன. 'மே மே' என்ற ஒலி வானைப் பிளந்தது. கால்கள் தரையில் அடித்து சில ஆடுகள் மெல்ல மெல்ல உயிரை விட்டன. எங்கும் மரண ஓலம். சில ஆடுகள் குற்றுயிரும், குலை உயிருமாய் முனகிக் கொண்டிருந்தன.

அடுத்து... அடுத்து எனது தாடியனது முறை. கழுத்துக் கயிறை இழுத்து அறுக்க முயன்று கொண்டிருந்தது. ஆனால் என் கண் முன்னாலேயே தாடியன் தலையறுபட்டு முண்டமாக மண்ணிலே சாய்ந்தது. மண் இரத்த வெள்ளமாகியது. 'தாடியா... ஐயோ! என்ன கொடுமை இது.' எனது கண்கள் தாடியனுக்காக கண்ணீர் சிந்தின. அதற்கு மேல் என்னால் அவ்விடத்தில் நிற்க முடியவில்லை. வெறிபிடித்தவனாய் வீட்டை நோக்கி ஓடினேன்.

★ ★ ★

அடுத்தநாள் வீட்டிலே ஒரே கொண்டாட்டம், பத்து நாள் மச்சம் சாப்பிடாமல் விரதம் இருந்தவர்களுக்கு அன்று நல்ல வெட்டுத்தான். எனது மனமோ தாடியனை நினைத்து அழுதது. அதனை வழக்கமாய்க் கட்டும் குத்துக் கட்டையை இழுத்து வெளியே எறிந்தேன். குசினிக்குள் இருந்து இறைச்சிக் கறி வாசம் மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது. இளைய தம்பி கேதுவும், குட்டித் தம்பி தாசனும் தமது சாப்பாட்டுக் கோப்பைகளை எடுத்துக் கொண்டு ஓடினர்.

''டேய் தம்பி சாப்பிட வாடா. வேள்வியில் வெட்டின ஆடு, அப்பா வேண்டி வந்தவர்...'' என்று அம்மா அழைப்பது கேட்டது.

''எனக்கு வேண்டாம் நீங்கள் சாப்பிடுங்கோ'' நான் வேண்டா வெறுப்பாய் கூறினேன்.

''ஏன்ரா உன்ர முகம் ஒரு மாதிரிக் கிடக்கு'' அம்மா விடாமல் கேட்டா. எனக்கு ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. அம்மாவும் ஒரு வகையில் தாடியனின் சாவுக்கு காரணம் என என் மனம் கோபப்பட்டது.

''அம்மா! என்ர தம்பியளை வெட்டி இறைச்சி சமைச்சா அதை நீங்கள் சாப்பிடுவியளோ! தாடியனும் என்ர சகோதரம் போலத்தான். ஐஞ்சறிவுச் சீவனுகளை இரக்கமில்லாமல் துடிதுடிக்க வெட்டி அதைச் சாப்பிட்டு உயிர் வாழ வேணுமோ அம்மா! என்னால் உந்தப் பாவத்தைச் சாப்பிடேலாது'' நான் ஆவேசமாய்க் கத்தினேன்.

அம்மா வாயடைச்சுப் போய் பேசாமல் நின்றா. எனக்கு நெஞ்சு படபடத்தது. வெளியே வந்து பார்த்தேன். தாடியன் கெந்திக் கெந்தி என்னை நோக்கி ஓடிவருவது போல் இருந்தது.

★

(யாவும் கற்பனை)



## கல்லூரிப் பருவம்

நினைவுப் பதிவேட்டில்
நிரந்தரமாகவே
உறைந்துவிட்ட
உல்லாசக் காலம்!
பக்கங்களை இடையே
புரட்டிப்பார்க்கையில்
பளிச்சென்று இன்னும்
பசுமையாயிருக்கும்.
வெள்ளை உடையணிந்து
வேளைக்கு வெளிக்கிட்டு
அள்ளிய உணவினை
அரைகுறையாய் உண்டு
பஸ்ஸுக்கு ஓடியதெல்லாம்
பழங்கதை!
'நடா' அண்ணை கன்ரீனில்
நாவினிக்க ரீகுடித்து
நாமடித்த கொட்டங்கள்!
ஓய்வு நேரத்தில்
ஒன்றாகக் கூடி
அத்தனை பாடலையும்
அனுபவித்துப்பாடி
ஆனந்தித்ததும்...
'குமாரசாமி' மண்டபத்தில்
கொஞ்சுந் தமிழினிலே
மரபுக்கவியெடுத்து
முழங்கித் தள்ளியதும்...
'உண்மைக்குக்' குரல்கொடுக்க
ஊர்வலத்துக் கோடியதும்..
இழந்தவர்க்காக
இதயம் புலம்பியதும்...
இனி என்று வரும்?
இன்று..
கல்லூரிவீதியில்
கால்கள் நடக்கையில்
நடந்ததையெல்லாம்
நினைத்துப் பார்ப்பேன்.
கப்பும் சோகத்தில்
கண்கள் கலங்கும்.
எனினும்...
என்னை வளர்த்த
என் அன்னை
எனக்கு மட்டும்
அன்னையல்லள்
என்பதை உணர்ந்து
ஆறுதலடைவேன்!

— உடுவில் அரவிந்தன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்பிறப்பு நினைவுகளிலிருந்து விடுபடாமல் வாழ்ந்த பெண்!

1930 களில் பரபரப்பான ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளியானது. டில்லி மாநகரத்தில் ஓர் ஒதுக்குப்புறமான பகுதியில் பிறந்த ஒரு சாதாரண பெண் — பெயர் சாந்தி தேவி. வளர்ந்து பருவமடைகின்றாள். அவள் நடவடிக்கைகள் அனைத்துமே வித்தியாசமாக இருந்தன. அடிக்கடி தன் குடும்பத்தாருடன் போன ஜென்மத்தில் நான் இன்னாருடைய மகளாகப் பிறந்திருந்தேன்; இன்னாருடைய மனைவியாக வாழ்ந்திருந்தேன் என்று பேசுவாள்.

இவள் சிறுமியாக இருந்ததால், இதைக் கேட்ட அவளுடைய பெற்றோர்கள் சிரித்தார்கள் வயது வந்த பிறகும் அவள் தொடர்ந்து அதையே சொல்லிக் கொண்டிருந்தாள். அப்போது தான் அவர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

அந்தச் சாந்தி தேவியைப் பற்றிய கதை இது.

1902 ஆம் ஆண்டு ஜனவரி 18 ஆம் தேதி மத்திய பிரதேசத்திலுள்ள மதுரா என்ற இடத்தில் சதுர்புஜ் என்பவருக்கு லக்டிபாய் என்ற மகள் பிறந்தாள். அவள் 10 வயது சிறுமியாக இருந்தபோது, அவளுக்குத் திருமணமாகியது. கணவருடைய பெயர் கேதர்நாத், அவர் அங்கேயே ஜவுளிக் கடை வைத்திருந்தார். கேதர்நாத்திற்கு இவள் இரண்டாவது மனைவி.

லக்டிபாய் மிகுந்த கடவுள் பக்தி உடையவள். எப்போதுபார்த்தாலும் கோயில் குளங்களுக்குச் சென்று கொண்டிருப்பாள். ஒருமுறை இவ்வாறு சென்றபோது காலில் அடிபட்டு, சிகிச்சைக்காக தன்னுடைய சொந்த ஊரான மதுராவில் இருந்தாள். குணம் ஆகாததால் ஆக்ராவுக்குச் சென்றாள்.

இந்த இடைக் காலத்தில் அவள் ஒரு குழந்தைக்குத் தாயானாள். ஆனால் குழந்தை கர்ப்பத்திலேயே இறந்துவிட்டது. சத்திர சிகிச்சை செய்து செத்த குழந்தையை வெளியே எடுத்தார்கள்.

காலவலி முழுமையாகக் குணமாவதற்கு முன்பே சில மாதங்களில் மீண்டும் கர்ப்பமானாள். கணவன் அவளை ஆக்ராவிலுள்ள ஒரு மருத்துவமனையில் சேர்த்து பிரசவம் பார்த்தான். அவள் ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானாள். 1925 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் தேதி பிரசவம் நடந்தது.

ஒன்பது நாள்களுக்குப் பிறகு, ஒக்ரோபர் 4 ஆம் தேதி லக்டிபாயின் உடல் நிலை கவலைக்கிடமாகி, காலை 10 மணிக்கு மரணமடைந்துவிட்டாள்.

அதன் பிறகு சரியாக 1 வருடம், 10 மாதம், 7 நாள்களுக்குப் பிறகு 1926 டிசம்பர் 11 ஆம் திகதியன்று டில்லியின் ஒதுக்குப்புறமான ஒரு குடியிருப்பில் இந்த லக்டிபாய், சாந்திதேவியாகப் பிறந்தாள் என்று கூறப்படுகின்றது.

மதுராவில் தனது 23 ஆவது வயதில் காலமான இளம் பெண் லக்டிபாய். சரியாக ஒரு வருடம், பத்து மாதங்கள், ஏழு நாள்கள் கழித்து டில்லியில் ஒதுக்குப் புறமான ஒரு குடியிருப்பில் சாந்தியாகப் பிறந்தாள். முற்பிறப்புப் பற்றிய சாந்தி தேவியின் நினைவுகள் வியப் பூட்டுவனவாக அமைந்தன.

எல்லாக் குழந்தைகளையும் போலத்தான் 4 வயது வரை சாந்திதேவியும் இருந்தாள். அதற்குப் பிறகு இவள் வித்தியாசமாகக் காணப்பட்டாள். இவளுடைய பேச்சும் வித்தியாசமாக இருந்தது. 5 வயதிலேயே அவள் தன் கணவனைப் பற்றியும் மகனைப் பற்றியும் பேசினாள்.

தன்னுடைய கணவர் மத்திய பிரதேசத்தில் மதுராவில் இருப்பதாகவும், ஜவுளிக்கடை வைத்திருப்பதாகவும், இவளுக்கு அங்கு ஒரு மகன் இருப்பதாகவும் கூறினாள். தன்னைக் கேதர்நாத் மனைவி என்றே கூறியும் கொண்டாள்.

ஆனால் அவளுடைய பெற்றோர்கள் இக் குழந்தை பிதற்றுகிறது என்று இதற்கு முக்கியத்துவமே தரவில்லை. ஆனால் இந்த 5 வயதுக் குழந்தை, தொடர்ந்து தன் கணவனைப் பற்றியும் மகனைப் பற்றியும், அவளுடைய குடும்ப சம்பவங்களைப் பற்றியும் சொல்லிக்கொண்டே இருந்தது. பெற்றோர்களும், "இவளுக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா?" என்றுகூட சந்தேகப்பட்டார்கள்.

சாப்பிட உட்காரும்போது, "மதுராவில் நான் விதவிதமான இனிப்புப் பலகாரங்களைச் சாப்பிடுவேன்" என்று கூறுவாள். இந்தச் சிறுமிக்கு அவளுடைய தாயார் ஆடை அணிவிக்கும்போது, போன ஜென்மத்தில் விதவிதமான ஆடைகள் அணிந்ததைக் குறிபபிடுவாள். கணவனைப் பற்றிய அடையாளங்களைக் குறிப்பிடுவாள். அவன் சிவப்பு நிறத்தில் இருப்பான்; கண்ணாடி அணிந்திருப்பான்; அவன் இடது கன்னத்தில் ஒரு தழும்பு இருக்கும் என்றெல்லாம் குறிப்பிடுவாள்.

மதுராவில் பிரபலமாகவுள்ள கோயிலுக்கு நேர் எதிரே தனது கணவருடைய ஜவுளிக்கடை இருப்பதையும் சொல்லுவாள்.

5 வயதிலிருந்து 6 வயதுக்குள் இவ்வளவையும் தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தாள். குழப்பம் அடைந்துபோன பெற்றோர்களுக்கு ஒரு விதத்தில் பயமாகவும் இருந்தது.

பிரசவத்தினால் ஏற்பட்ட ரத்தப்போக்கினால் தான் மரணமடைந்து விட்டதாக இந்த 6 வயதுக் குழந்தை கூறியது. இவளைத் தனது குடும்ப டாக்டரிடம் அழைத்துச் சென்று பெற்றோர்கள் காண்பித்தார்கள். அந்த டாக்டரிடமும் இந்தச் சிறுமி தனக்கு சத்திர சிகிச்சை செய்த செய்திகளை எல்லாம் விவரித்தாள். டாக்டருக்கும் குழப்பம் ஏற்பட்டுவிட்டது.

இவள் மேலும் வளர்ந்து பெரியவளானாள். மதுராவில் உள்ள தனது கணவரிடம் அழைத்துச் செல்லும்படி தன் பெற்றோர்களை வற்புறுத்தினாள். ஆனால் தன் கணவனுடைய பெயரை மட்டும் உச்சரிக்கவில்லை. காரணம், இந்தியப் பெண்கள் கணவன் பெயரைச் சொல்லக்கூடாது என்ற சம்பிரதாயம்தான்.

பிறகு 8 வயதில் அந்தப் பெயரையும் வெளியிட்டாள். "கணவனைஎன்னால் அடையாளம் காட்டமுடியும்" என்றும் சொன்னாள்.

டில்லியில் ஆசிரியராக இருந்த இவளுடைய உறவினர் ஒருவர், இந்தச் சிறுமியை மதுராவிலுள்ள கணவனிடம் அழைத்துச் செல்வதாக வாக்குறுதி அளித்தார்.

அதற்கு முன்பு, இவள் கணவனுடைய விலாசத்திற்கு அவர் ஒரு கடிதம் போட்டார். அத்துடன் போன ஜென்மத்துக் கணவனை டில்லிக்கு ஒருமுறை வந்து போகுமாறும் அந்த ஆசிரியர் அக்கடிதத்தில் கேட்டுக்கொண்டார்.

சில நாள்களில் கணவனிடமிருந்து பதில் வந்தது. அவள் சொல்வது அத்தனையும் உண்மை என்றும் டில்லியிலுள்ள தனது உறவினர் ஒருவர் இந்தச் சிறுமியைப் பார்க்க அனுமதிக்குமாறும் இந்த ஆசிரியருக்கு கேதர்நாத் பதில் எழுதினார்.

சாந்தி தேவியைப் பார்க்கச் சென்ற அந்த உறவினரைக் கண்டவுடன், சாந்தி தேவி அவரைத் தன் கணவனுடைய சித்தப்பா மகன் என்பதை உடனே அறிந்து கொண்டாள். மதுராவிலுள்ள தன் வீட்டில், ஒரு குறிப்பிட்ட இடத்தில், கொஞ்சம் பணத்தை புதைத்து வைத்திருப்பதாகவும் அந்த உறவினரிடம் அந்தச் சிறுமி கூறினாள்.

அந்த உறவினர் அவளிடம் "உன்னுடைய வீட்டை யாரும் வழிகாட்டாமல் உன்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியுமா?" என்று கேட்டதற்கு, "முடியும்" என்று கூறினாள்.

அதன் பின்னர் சாந்தி தேவியின் போன ஜென்மக் கணவனான கேதர்நாத்தும், அவள் பெற்ற மகனும் கேதர் நாத்தினுடைய புதிய மனைவியும் டில்லிக்கு வந்தார்கள். அடுத்த நாளே அந்த டில்லி ஆசிரியர் அவர்களை அழைத்துக் கொண்டு சாந்தி தேவி வீட்டுக்குச் சென்று, கேதர்நாத்தை அவளுடைய கணவன் என்று அறிமுகப்படுத்தாமல், தன்னுடைய உறவினர் என்று மட்டும் அறிமுகப்படுத்தினார்.

ஆனால், சாந்தி தேவி தன் கணவனுக்கு முன்னால் நிற்பதற்கு நாணமடைந்து ஒதுங்கி நின்றாள். அந்த ஆசிரியர், "என்னுடைய உறவினருக்கு முன்பாக ஏன் நீங்கள் வர மறுக்கிறீர்கள்?" என்று சாந்தி தேவியைக் கேட்டபோது, "இவர் உங்களுடைய உறவினர் மட்டுமல்ல. என்னுடைய கணவர்" என்று நாணத்தோடும் உறுதியோடும் சொன்னாள்.

உடனே தன் தாயாரை அழைத்து "என் கணவர் சிவப்பு நிறமாகவும், இடது கன்னத்தில் ஒரு தழும்போடும் இருப்பார் என்று சொன்னேனே... நீங்களே பாருங்கள்!" என்றும் கூறினாள்.

இவர்கள் அனைவருக்கும் விருந்து கொடுக்க வேண்டும் என்றும் தன் தாயாரிடம் கூறினாள். அப்போது "என் கணவனுக்குப் பிடித்தது உருளைக்கிழங்கு புரோட்டா தான்!" என்றும் கூறினாள். கேதர்நாத் இவைகளைக் கேட்டுப் பிரமித்துப் போனான்.

சாந்தி தேவி தன் போன ஜென்மத்து மகனைப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டாள். கண்களில் நீர் கோர்த்து நின்றன. அவனைக் கட்டித் தழுவிக்கொண்டாள்.

தன் வீட்டில் தனக்கு வாங்கி வைத்திருந்த பொம்மைகளையெல்லாம் எடுத்து தன் மகனுக்கு விளையாடக் கொடுத்தாள்.

"இவன் பிறந்தவுடன் நீ இறந்தபோனாய். இப்போது உன்னால் எப்படி இவனை அடையாளம் காண முடிகிறது?" என்று இவளிடம் கேட்ட கேள்விக்கு, "இந்த மகன் என்னுடைய ஆன்மாவின் ஒரு பகுதி. இங்கே என் ஆன்மா தன் ஆன்மாவைத்தான் அடையாளம் காண்கிறது. நான் அல்ல!" என்று பதில் கூறினாள்.

விருந்துக்குப் பிறகு சாந்தி தேவி, தன் கணவனைப் பார்த்து "இந்தப் புதிய மனைவியை நீ ஏன் கல்யாணம் செய்து கொண்டாய்? மறுபடியும் திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று என்னிடத்தில் சத்தியம் செய்து கொடுத்தாயே, நினைவு இருக்கிறதா?" என்று கேட்டாள்.

கேதர்நாத் இதைக் கேட்டு பேந்தப் பேந்த விழித்தான்.

சாந்தி தேவி தனது போன ஜென்மக் கணவனைப் பார்த்து "இந்தப் புதிய மனைவியை நீ ஏன் கலியாணம் செய்து கொண்டாய்? மறுபடியும் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று என்னிடம் சத்தியம் செய்து கொடுத்தாயே! நினைவு இருக்கின்றதா?" என்று கேட்டாள். கணவன் கேதர்நாத் இதைக் கேட்டு பேந்தப் பேந்த விழித்தான்.

தனது முன்னைய மனைவி லக்டிபாயின் நடவடிக்கைகளும் இந்தச் சாந்தி தேவியின் நடவடிக்கைகளும் ஒரே மாதிரியாக இருப்பதை அவன் ஒப்புக்கொண்டான்.

தனது முன்னைய மனைவியான லக்டிபாய் நடவடிக்கைகளும், இந்த சாந்தி தேவியின் நடவடிக்கைகளும் ஒரே மாதிரி இருப்பதை ஒப்புக் கொண்டான்.

சாந்தி தேவி தன் கணவனோடு மதுராவிற்கே திரும்பிவிட வேண்டும் என்று விரும்பினாள். அதற்கு அவர்களுடைய பெற்றோர்கள் அனுமதிக்கவில்லை. அதனால் ஏமாற்றம் அடைந்தாள்.

இந்த செய்திகள் அனைத்தும் பத்திரிகைகள் மூலமாக நாடு முழுவதும் பரவிற்று. மகாத்மா காந்திஜியும் இதனைப் பற்றிக் கேள்விபட்டு, சாந்தி தேவி என்ற அந்தச் சிறுமியை அழைத்து வரச் சொன்னார் மகாத்மா அவளிடம் பேசினர். பிறகு தன் ஆசிரமத்திலேயே சாந்தி தேவியை தங்குமாறு கூறினார்.

காந்திஜி 15 பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்றை அமைத்து, இதைப் பற்றி ஆராய்ச்சி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அந்தக் குழு, சிறுமி சாந்தி தேவியை அழைத்துக் கொண்டு டில்லியிலிருந்து மதுராவிற்கு ரயிலில் சென்றது.

மதுராவை அடைந்தவுடன் தன் சொந்த வீட்டிற்கு வருகின்ற சந்தோஷம் சாந்தி தேவியின் முகத்தில் தெரிந்தது.

ரயில் நிலையத்தில் இறங்கியவுடன், இந்தச் சிறுமியை தேசபந்து என்பவர் தன் கைகளில் தூக்கிக் கொண்டு வந்தார். அப்போது ஒரு முதியவர், இவள் முன்னால் வந்து மெதுவாக நடந்தார். இந்தச் சிறுமியிடம் அவரை யார் என்று கேட்டார்கள். உடனே அந்த முதியவரின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டு, பிறகு தேசபந்துவின் காதுகளுக்குள் "இவர்தான் என் கணவனுடைய அண்ணன்" என்று கூறினாள்.

'இது எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தது அவள் சொன்னது உண்மை.

பிறகு, அவளை ஒருவண்டியில் அழைத்துக் கொண்டு அவள் செல்லுகிற பாதையில் செல்லுமாறு வண்டிக்காரனிடம் கேட்டுக் கொண்டார்கள். அந்தப் பாதையில் புதிதாக இருந்த கட்டடங்கள் பற்றியும், முன்பு அவைகள் இல்லை என்பதனைப் பற்றியும் அவள் விவரித்துக் கொண்டேவந்தாள். சரியாக தன் வீட்டிற்கு முன்னால் வண்டியை நிறுத்தச் சொன்னாள்.

அங்கு இறங்கி, அங்கிருந்த கூட்டத்தில ஒரு முதியவரை அடையாளம் கண்டாள். அவர்தான் தன் மாமனார் என்று டில்லியில் இருந்து வந்த குழு உறுப்பினர்களிடம் கூறினாள். அதுவும் உண்மைதான்.

வீட்டிற்குள் நுழைந்தவு

(X ஆம் பக்கம் பார்க்க)

பிராணிகள் உலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிகவும் பெரிய பறவை

உலகில் உள்ள பறவைகளில் மிகப் பெரியது
ருப்புக்கோழி. இதன் உயரம் சுமார் இரண்டரை
றர். எடை சுமார் 130 கிலோ. இது ஆபிரிக்கக்
டத்திலும் ஆசியாக் கண்டத்திலும், அரேபியா
பும் வாழ்கிறது.


நெருப்புக்கோழியின் தலை சிறியது. ஆனால்
த்து மிக நீளமாக இருக்கும். கழுத்தில் சிறகுகள்
க்கா. கழுத்தும் கால்களும் சிவப்பாக இருக்
. இப்பறவைக்கு இறக்கைகள் உண்டு. எனினும்
னால் பறக்க இயலாது. ஆனால் இது மணிக்கு
கிலோமீற்றர் வேகத்தில் ஓடக்கூடியது. வேக
க ஓடுவதற்கேற்ப இதன் கால்கள் மிக நீளமாக
உறுதியாகவும் இருக்கும்.

தன்னைக் காத்துக்கொள்ள இது பகைவர்
ளக் காலால் எட்டி உதைக்கும். இதனிடம்
தபடும் குதிரையோ மனிதனோ உடனே எழுந்
க்க முடியாது.

நெருப்புக்கோழியின் இறக்கைகளில் வெண்மை
ன இறகுகள் இருக்கும் இந்த இறகுகளைத்தொப்
ல்அணிவது முற்கால வழக்கம். அதற்காக ஏராள
ன நெருப்புக்கோழிகளை மக்கள் வளர்த்து வந்
ர். இப்போது இப்பழக்கம் மறைந்துவிட்டது.
இலை, விதை, பழங்கள் முதலியனவும் சிறு
சிகளுமே நெருப்புக்கோழியின் உணவு. ஆனால்
, ஆணி, கண்ணாடி, எலும்பு முதலியவற்றை
இது விழுங்கும். இரைப்பையில் உணவைக்
ரத்துச் செரிக்கவைக்க இவை உதவுகின்றன.
ணீர் குடிக்காமல் நெருப்புக் கோழியால் பல
ள்கள் உயிர்வாழ முடியும். அதற்காக இதனை
ட்டகப் பறவை' என்றும் சொல்வர். நெருப்புக்
ழி சுமார் 80 ஆண்டுகள் வரை உயிர்வாழும்.
மணலில் பள்ளம் தோண்டி நெருப்புக்கோழி
டையிடும். இதன் முட்டை மிகப் பெரியது.
முட்டை, 12 கோழிமுட்டைகளின் அளவு
க்கும்! முட்டை ஓடு கடினமானது. இந்த ஓடு
ள ஆபிரிக்கப் பழங்குடி மக்கள் சிலர் உண்கல
கப் பயன்படுத்துகிறார்கள்.

நெருப்புக்கோழியை எளிதில் பழக்கலாம். பழக்
நெருப்புக்கோழிகளைக் கொண்டு ஓட்டப் பந்
ங்கள் நடத்துவது உண்டு. இது மிக வேடிக்கை
க இருக்கும்.

# செய்து பாருங்கள்!



ருகில் உள்ள கூட்டில் இரு
தியைந்து சதுரங்கள் உள
. ஒன்று முதல் 25 வரை
ள எண்களை இச்சதுரங்
இட்டு அதனைப்
த்தி செய்ய வேண்டும்.
ால் எந்தப் பக்கத்திலி
து கூட்டினாலும் மொத்
65 ஆக வரவேண்டும்.
களால் முடிகின்றதா?
ஐந்து இலக்கங்கள் உள
. அவற்றை முறையே
3, 4, 5, 6 ஆகிய எண்
களால் தனித்தனியே வகுத்த
போது ஒவ்வொன்று மிசசம்
வந்தது. ஆனால் அந்தஐந்து
இலக்கங்களையும் ஏழால்
வகுத்த போது மிச்சமே வர
வில்லை. அந்த ஐந்து இலக்
கங்களும் யாவை?

3) அனுஷாவின் பூனை
நிறையக் குட்டிகளைப்போட்
டிருந்தது. சில குட்டிகள்
வெள்ளை வெளேர் என்று
வெளுப்பு. சில கன்னங்கரேல்
என்ற கறுப்பு. ஒவ்வொரு
கறுப்புப் பூனைக் குட்டியை
எடுத்தாலும் அதற்கு ஒரே
எண்ணிக்கையான வெள்
ளைச் சகோதரர்களும்,
கறுப்பு சகோதரர்களும் உள்
ளன. ஒவ்வொரு வெள்ளைப்
பூனைக்குட்டியை எடுத்துக்
கொண்டாலும் கறுப்பு நிறச்
சகோதரங்கள் வெள்ளையை
விட இருமடங்காக இருந்
தன. அப்படியானால் மொத்
தச் பூனைக் குட்டிகள் எத்
தனை? அவற்றில் எத்தனை
வெள்ளை?
(விடைகள் XIஆம்பக்கத்தில்)

# சரிபாதி!

ஆணும் பெண்ணும் சரிபாதி
சிவனும் உமையும் சரிபாதி
பெட்டியும் மூடியும் சரிபாதி
பூவும் மொட்டும் சரிபாதி

வானமும் நீலமும் சரிபாதி
அன்னையும் தந்தையும் சரிபாதி
ஆளும் உடையும் சரிபாதி
வீடும் முற்றமும் சரிபாதி

பகலும் இரவும் சரிபாதி
உடலும் உயிரும் சரிபாதி
இருளும் ஒளியும் சரிபாதி
இன்பமும் துன்பமும் சரிபாதி!

— ம. துவாரகா —
(ஆண்டு 4, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

# பாசமிகு உயிர்கள்

சின்னக் கோழிக் குஞ்சுகள்
தீனி போடத் தாயுடன்
என்னை நோக்கி வந்துமே
இரையைக் கையில் தேடுமே.

பாலைக் குடிக்கக் கன்றுமே
பசுவைத் தேடி ஓடுமே
வாலைக் கிளப்பித் துள்ளுமே
வந்து என்னைத் தள்ளுமே.

பூனை கண்ணை மூடியே
பாலைக் குடிக்கப் பார்க்குமே
நானெழுந்து நடக்கவே
நடுவிற் கண்ணைத் திறக்குமே.

ஜெ. தாட்சாயிணி
(ஆண்டு 4, மட்டுவில் கமலாசனி வித்தி.)

# நத்தையாரே!

நத்தையாரே நத்தையாரே
அத்தை வீடு பயணமோ?
அத்தை வீடு போக முதுகில்
தண்ணீர்க்குடம் வேணுமோ?

அத்தையார்க்கு நீர் சுமக்கும்
நத்தையாரே வாருங்கள்!
மெத்த வழியில் நீரும் சிந்தும்
மெல்ல மெல்லச் செல்லுங்கள்.

தருமலிங்கம் வாகினி
(ஆண்டு 4, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

# பாவை

சின்னச் சின்னப் பாவை
சிறிய நல்ல பாவை
வண்ண வண்ண ஆடை
அணிந்திருக்கும் பாவை!

நான் அருகில் சென்றால்
கண்சிமிட்டும் பாவை
கள்ளம் இல்லா நெஞ்சை
கொண்டிருக்கும் பாவை!

கு. பிரதீபா
(ஆண்டு 5, ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரி)

# உலகோர் மதிக்க வாழ்ந்திடு

அரட்டைப் பேச்சைத் தள்ளிடு
அறிவால் உலகை வென்றிடு
ஆசை அழிக்கும் தெளிந்திடு
அன்பே அணைக்கும் தேர்ந்திடு


படிப்பே நன்று அறிந்திடு
பண்பே உயர்வு புகழ்ந்திடு
பெரியோர் வழியில் சென்றிடு
பெருமை கிடைக்கும் உணர்ந்திடு

கருணையுள்ளம் கொண்டிடு
கற்றோர் அறிந்து சேர்ந்திடு
கரத்தை இணைத்துச் சென்றிடு
காலம் வாழ்த்தும் மகிழ்ந்திடு

உதவாப் பொய்யை மறந்திடு
உயர்த்தும் உண்மையை மதித்திடு
உயர்வு நெறியைப் போற்றிடு
உலகோர் மதிக்க வாழ்ந்திடு.

(குடாரப்பு)

# சுறுசுறுப்பான பிராணி!



சுறுசுறுப்பான பிராணி ஒன்று இங்கு ஒளிந்துள்ளது. அதனைக் கண்டுபிடிப்பதாயின் ஒன்று முதல் 32 வரையான இலக்கங்களுக்குரிய புள்ளிகளை ஒழுங்கு முறையில் இணையுங்கள்.




# சத்தமிடுபவர் யார்?



இப் படத்தில் இருப்பவர் சத்தமிட்டு குரல் எழுப்புகின்றார். அவர் யார் எனத்தெரிகின்றதா? இல்லையாயின் ஒன்று முதல் 38 வரையுள்ள இலக்கங்களுக்கு உரிய புள்ளிகளை ஒழுங்கு முறையில் இணைத்துப் பாருங்கள்.

# உங்களுக்குத் தெரியுமா?

1) ஒரு நத்தை பத்து அடி ஆழக் குழியிலிருந்து நில மட்டத்திற்கு ஏறி வருகின்றது. ஐந்து நிமிடத்தில் மூன்று அடி ஊர்ந்து ஏறும் நத்தை அதற்குள் இரண்டு அடிசறுக்கியும் விடுகின்றது. நத்தை குழியிலிருந்து வெளியே வர எவ்வளவு நேரம் எடுக்கும்?

2) ஒரு பொற்கொல்லர் நீளமான ஒரு தங்கச்சங்கிலியை உருவாக்கினார். அதிலிருந்து ஒரே அளவுள்ள துண்டுகளை வெட்டி நெக்லஸ் செய்வது அவரது திட்டம். அவர் உத்தேசித்திருந்த அளவை விட 5 சதம மீற்றர் சிறிதாக நெக்லஸ்களை உருவாக்கினாரானால்மேலும் அதிகமாக 2 நெக்கிலஸ்கள் கிடைக்கும். ஆனால் 10 சதம மீற்றர் அதிக நீளமாகச் செய்தால் அவர் திட்டமிட்டதைவிட 3 நெக்கிலஸ்கள் குறைவாகக் கிடைக்கும். அப்படியானால் அவரிடமுள்ள நீண்ட சங்கிலியின் மொத்த நீளம் என்ன?

(விடை XIஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சனி வி | | வெ | செ சூ |
| கே | இராசிச் சக்கரம் | | புத |
| | | | ரா |
| | | சந் | |

# இந்த வார இராசி பலன்

## [04 - 07 - 1998 முதல் 10 - 07 - 1998 வரை]

மாற்றம்:

துலாம் இராசியில் —(சுவாதி நட்ஷத்திரத்தில்) சந்திரன் இருக்கும்.

இலங்கை அரசியலில் திடீர் திசை திருப்பங்கள் ஏற்படலாம். தலைவர்கள், மூத்த தலைவர்களின் மனமாற்றத்தால் பலர் கட்சி மாறலாம். தொழிலாளர்கள், மாணவர்கள் அபிப்பிராய பேதப்படுவர். அயல் நாட்டு அனுசரணைகளால் மாற்றங்கள் ஏற்படலாம். இந்திய அரசியலில் புதிய அணுகு முறையால் மாற்றங்கள் ஏற்படும்.

உலகில் மேற்கும் — கிழக்கும் அரசியல்சாணக்கியத்தைப் பயன்படுத்துகின்றன. பொருளாதார மாற்றங்களால், சிலநாடுகளுக்கு அழுத்தங்கள் ஏற்படலாம்.

மேடம்: கலகம் பிறந்து தான் நியாயம் பிறக்கும். எந்த விஷயத்தையும் இரவில் தனிமையிலிருந்து யோசித்து அல்லது எதிர்ப்பாளருடன் கருத்துப் பரிமாற்றம் செய்து பகலில் ஓடியாடி நிறைவேற்றப் பாருங்கள். ஏழரைச் சனீஸ்வரனால் சற்று கலக்கம் ஏற்படத்தான் செய்யும். தைரியமாக எதிர் கொள்ளுங்கள். வெற்றி அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் அதிகம் கதைத்தபடி இருக்கிறீர்கள். அதனால் காரியங்கள் தாமதமாகலாம். காணி பூமி விஷயமாக ஓடியாடித் திரிவீர்கள். கோட்டுக்குப் போகும் விஷயம் பக்குவமாய் பாருங்கள். உஷ்ணபீடை, கண் எரிவு, கடும் கோபம், தலையிடி, கைகால் பிடிப்பு சாடைமாடையாக இருக்கத்தான் செய்யும்.

★ அதிர்ஷ்டநாள்:-புதன், வெள்ளி.

இடபம்: கொஞ்சம் கலகலப்பாக இருக்கிறீர்கள். வெளிநாட்டுத் தபாலில் நற்செய்திகள் வந்திருப்பது போல இருக்கிறது. கவனம். பக்கத்தில் இருப்பவர்கள் கவனித்தபடி இருக்கிறார்கள். உதவி என வந்து உபத்திரவங்கள் கொடுப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் பொருளால் ஏமாற்றங்கள் வரலாம். சகோதரங்களால் கலக்கம் வரும். உங்கள் வாக்குச் சாதுரியத்தால் சமாளித்து வாருங்கள். அடிக்கடி சங்கீதஞானம் வந்து போகும். சலவருத்தம், நாம்புநடுக்கம், மறதி கொஞ்சம், உடலெரிவு, கண்ணில் வலி, காலில் பிடிப்பு என மாறி மாறி வரலாம். பிரயாணத்தால் மாற்றம் சிலருக்கு ஏற்பட இடம் உண்டு.

★ அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.

மிதுனம்: உங்களைக் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கின்றது. இங்கும் அங்குமென ஓடியாடித் திரிகிறீர்களே! என்ன அவசரம்? இலாபம் இல்லாத வேலையும், சொந்தம் இல்லாத உறவும் சரிப்பட்டுவராது எனச் சொல்லுவீர்களே. தொழில் ஸ்தானத்தில் முன்னேற்றம், நாலு பேர் உங்களைப் பற்றிக் கதைத்தபடிதான் இருப்பார்கள். மேலதிகாரிகளின் உதவிகளால் காரியானுகூலங்கள் ஏற்பட்டபடி இருக்கும். காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்ளுங்கள், உங்களின் விகடப் பேச்சால் எல்லோரும் மயங்கி இருக்கும் பொழுதே அலுவல்களை முடித்து விடுங்கள். உடல் வலி, தலைவலி, கைகால் பிடிப்பு, நாரிநோ என வருத்தலாம். வைத்தியம் செய்யுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள், புதன்.

கடகம்: அரசியல் ஒரு பக்கம், ஆண்டவன் சிந்தனை மறுபக்கம், விகடப் பேச்சு ஒருபுறம், காரியசிந்தனை மறுபுறம். எதிர்பாராத மாற்றங்கள் நடக்கும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் சமயோசிதத்தால் காரியங்களைச் சாதிக்க முற்படுவீர்கள். உங்கள் திடீர் பேச்சால் சிலரை அதிகம் புண்படுத்திவிடுவீர்கள். எதிர்ப்பாளரை எதிர்க்காமலும், உறவினரைப் பகைக்காமலும் ஒருவாறு சமாளித்து வாருங்கள். சலவருத்தம், நெஞ்சுச்சளி, உடல் நோ, விறைப்பு, கைகால் உளைவு என்பன அடிக்கடி இருந்தபடி இருக்கும். தகுந்த வைத்தியரை நாடுங்கள். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ் நாள்:- திங்கள், வியாழன்.

சிங்கம்: உங்களுக்கு விடிவு காலமாகும். புதிய மாற்றம் ஏற்படும். கலகம் பிறந்து தானே நியாயம் பிறக்கும்? தொழில் ஸ்தானத்தில் சோதனைகள் ஏற்பட்டு உங்களுக்குச் சாதகமான சூழ்நிலைகள் தென்படும். நாலுபேர் நாலு விதமாகத்தான் சொல்லுவார்கள் உங்களின் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளவும். வெற்றி தோல்விகள் வாழ்க்கையில் சகஜம். எனவே எதையும் எதிர்நீச்சலடித்துத்தான் பெறமுடியும் என்பது உங்களுக்கு நன்கு தெரியும் தானே? இருதய நோ, முதுகுவலி, கைகால் வலி என்பன சர்வசாதாரணமாகும். உஷ்ண பீடைகளால் அடிக்கடி தொல்லைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்:-புதன், வியாழன்.

கன்னி: ஏன் அடிக்கடி நேரத்தைப் பார்க்கிறீர்கள்? என்ன அவசரம்? ஏன் இப்படிக் கோபிக்கிறீர்கள்? எந்த விஷயத்திலும் சட்டதிட்டத்தின்படி நடக்க முடியுமா? காலத்திற்குத் தகுந்தால் போல் நடப்பவரே புத்தி சாதுரியமானவர்கள். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான பேச்சுக்கள் வேதனைகள் தரும். மேலதிகாரிகளின் உதவிகள் அடிக்கடி இருக்கும். சோல் வருத்தங்கள், உஷ்ணபீடைகள், சளித்தொல்லைகள், வாதப்பிடிப்புக்கள், வாய்வுத் தொல்லைகள் என ஏதாவது ஒரு வருத்தம் பின் தொடர்ந்தபடி இருக்கும். மனச்சலனம் சர்வசாதாரணம். அட்டமத்துச் சனி ஆட்டிப் படைக்கும் எனச் சிலர் உங்களைக் குழப்பி விடுவார்கள். துணிவே துணையாகும்.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, வெள்ளி.

துலாம்: உலகத்தை கலை ரசிப்புடன் பார்ப்பவர்கள் நீங்கள். ஓய்வில்லாமல் எந்த விஷயத்திலும் ஆராய்ந்தபடி இருப்பீர்கள். ஆனால் இது உலகத்திற்கு தெரியாது. அதனால் உங்களைச் சிலர் தரக்குறைவாக மதிப்பார்கள். மதிக்கட்டுமே அதனால் எனக்கென்ன கவலை என்று சொல்லுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் நல்ல வரவேற்பிருக்கும். பணவரவு ஓரளவு இருக்கும். முழங்கால் நோ, பல்வலி, வயிற்று நோ, சொறி, உள் உறுப்புக்களால் சில தொல்லைகள் கொடுக்கும். ஆலயத்திற்கோ அல்லது ஆஸ்பத்திரிக்கோ சிலர் அடிக்கடி போய் வருவார்கள். உள்ளத்திற்கும் உடலுக்கும் அங்கேதானே ஆறுதல் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- ஞாயிறு, வெள்ளி.

## சோதிட சஞ்சீவி

## மகாதேவா ஜோதிடம்

விருச்சிகம்: உங்களுக்கு அடிக்கடி படபடப்பாக இருக்கிறதா? உடலில் ஒரு வேகம் உந்துகின்றதா? இக்காலத்தில் இருக்கத்தான் செய்யும். எதிர்ப்பாளரை அனுசரித்து நடவுங்கள். அவர்களால் பல நன்மைகள் கிடைக்கும். குடும்ப வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். விசாரணைகள் ஏற்படலாம். கைகால் தாக்கம். இரத்த அழுத்தம், சிரசு வருத்தங்கள், உஷ்ண பீடைகள், கிருமித்தாக்கங்கள் என்பனவற்றால் வருந்துவீர்கள். வீட்டில் திருத்தம்; அதனால் செலவுகளின் தாக்கம் சிலரை அதிகம் யோசிக்கச் செய்யும்.

★ அதிர்ஷ்டநாள்:-புதன், வெள்ளி.

தனுசு: இக்காலங்களில் எதிர்ப்பாளருடன் அவதானமாக இருங்கள். தொழில் ஸ்தானத்தில் பேச்சுவார்த்தையில் அவதானமாக இருக்கவும். அதிகாரிகளும் சகஊழியர்களும் உதவி செய்தும் அடிக்கடி குறைகூற்றமும் கண்டும் வேதனைகள் தருவார்கள். கவர்ச்சிகரமாகப் பேசியும், உண்மைகளை வெளிப்படுத்தியும் பேசும் உங்களின் மனோபாவத்தை எல்லோரும் அறிய மாட்டார்கள்.

(X ஆம் பக்கம் பார்க்க)

## குறள் வெள்ளம்

பெற்ற பிள்ளையை எப்படி வளர்த்து உருவாக்கிவிடல் வேண்டும் என்று அறிவுரை சொல்லி இருக்கிறார் வள்ளுவர். இது சொல்லித் தெரிய வேண்டிய கருமம் அல்ல. ஆனால் பலருக்கும் விளங்காத சமாசாரம் ஆக இருக்கிறதே.

ஆண்டு தோறும் ஆரவாரமாகப் பிறந்த நாள் கொண்டாடுவதிலேயும் — அளவுக்கு மீறிய ஆடம்பரமாக ஆடை அலங்காரம் செய்வதிலேயும் — பகட்டு வாழ்வில் — அதமம் — ஆணவம் தலை தூக்கும் மனப்போக்கில் பிள்ளையை வளர்த்து விடுவதிலேயும்தான் பலரும் குறியாக இருக்கிறார்கள்.

இதன் பாரதூரமான விளைவுகள் காலம் கடந்துதான் வெளிப்படும். உருப்படியான மனப்போக்குடன் பிள்ளையை வளர்த்து விடப் பலரும் தயங்கி விடுகிறார்கள்.

நாளை பிள்ளை வாழ்க்கையில் நோகும் போது — துள்ளித் திரிகின்ற பருவத்திலே என் துடுக்கடக்கி பள்ளிக்கு வைத்திலரே—என தந்தையை — தாயை மனம் நோகக் கூடாது.

உலக நடையும் — வாழ்க்கை அனுபவமும் கலந்த கல்வியினைப் பிள்ளைக்குக் கொடாத போது — பெற்றுத் தடிமாடனாய் வளர்த்துத்தான் என்ன லாபம்?

ஊரோடு ஒத்து ஓட — உதாரண புருஷனாய் திகழ—சபையோர் நாலுபேர் மதிக்க—முன்னணியில் மகனை நிற்க வைத்தலே தந்தையின் தலையாய கடனாகிறது.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். — 0067

(மக்கட் பேறு)

— அம்பிகைபாகன் —

# மந்திரக்காளி

பகுதி 8

தகவலைத் தேடி......


## ஆதித்தனும் நிலாவும் துப்பறிகிறார்கள்

இடப்பட்ட கட்டளையை நிறைவேற்ற இயலாமல் கொடுமையான மரண தண்டனையை மைக்கேல் பெற்றுக் கொண்டது அங்கிருந்த அனைவரதும் மனதில் வேதனையைத் தந்தது. ஆனால் எவரும் மறுவார்த்தை கேட்கவில்லை; கேட்கவும் கூடாது. ஊசி விழுந்தால் கேட்கக் கூடிய பயங்கர அமைதி அங்கு நிலவியது. புலிக் கூண்டு மேலேறியாகி விட்டது. ''அசோகளின் வாரிசுகள் நிச்சயமாகப் புதையல் இரகசியத்தைத்தேடி வந்திருக்க வேண்டும். இனி அவர்கள் விரட்டப்பட வேண்டியவர்கள்ல்லர்; அவதானிக்கப்பட வேண்டியவர்கள்.'' கடைசிக் கட்டளையை அவர்கள் உணர்ந்த விநாடியில் சூலம் நீலத்திலிருந்து பச்சை ஊடாக சிவப்பிற்கு நிறம் மாறிற்று. தலைமைத் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

அதே கணத்தில்... அசோக பவனத்தினுள்ளே எமது குழந்தைக் கதாநாயகர்களைத் தவிக்க விட்டு வந்து விட்டோமே அவர்களுக்கு என்ன நடந்தது என்று பார்ப்போம்.

வீலென்று கத்திய நீலாவின் பார்வை வரவேற்புக் கூடத்தில் விழுந்திருந்தது. அங்கே மனித எலும்புகள் ஒரு சூல வடிவில் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. திரிசூல உச்சியில் மூன்று மண்டையோடுகள் காணப்பட்டன. ஆதித்தன் பயப்படவில்லை. அவனது நோக்கமெல்லாம் தந்தை குறிவைத்த இரகசியத் தகவல் எங்கே என்பது தான்.

அவதானமாக ஒவ்வொரு அறையாகத் தேடினார்கள். சுவர்களை எல்லாம் கூர்ந்து கூர்ந்து பார்த்தார்கள். நிலா அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தாள். றெக்சி மீண்டும் மீண்டும் சமையலறைக்குள் ஓடி ஏதோ புரிவிக்க முயன்



றது. நிலா சமையலறைக்குள் புகுந்தாள். சின்னஞ் சிறு குட்டியாக அசோகன் வளர்த்த நாயல்லவா? கருங்கல் அம்மியின் அப்பாலுள்ள சுவர்ப் பிரதேசத்தை நோக்கிப் பாய்ந்து [illegible]. கூர்மையான அவனது விழிகள் மகிழ்ச்சியால் விரிந்தன. "அண்ணா! தாத்தா! அப்பாவின் எழுத்தைக் கண்டு பிடித்து விட்டேன்'' நிலாவின் கீச்சுக் குரல் சந்தோஷமும் படபடப்புமாக எழுந்தது. சடுதியான அந்தக் குரலால் கவரப்பட்டார்கள் தாத்தாவும் ஆதித்தனும்.

மண்டிக் கிடந்த பற்றைகளின் மறைவிலிருந்த ஒரு உருவத்தின் கவனமும் அக்குரலால் திருப்பப் பட்டது. அது வேறு யாருமல்லை. அவலட்சணமாக வடுக்கள் மிகுந்த முகத்தையுடைய ஒற்றைக் கண் மனிதன். தலையை மூடி ஒரு முக்காடு இட்டிருந்தான் அவன். மெதுவாகச் சமையலறையை நோக்கி அவனும் நகர ஆரம்பித்தான்.

# சிறுவர்களுக்கான மர்மத் தொடர்கதை

## சு. சாரங்கா

''அவர்கள் தங்கள் கட்டளைப்படி அவதானிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தற்போது அசோக பவனத்தினுள் 'அந்த' இரகசியத் தகவலைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்''

காளித்தாய்க்கு மிகமெதுவான குரலில் செய்தி அனுப்பிக் கொண்டிருந்த சூலப்படைப் பணியாளும் சமையலறையின் பின்புற யன்னலை நோக்கிப் பதுங்கிப் பதுங்கி சென்று கொண்டிருந்தான்.


நெருங்கி வரும் எதிர்பாராத ஆபத்துக்களை அறியாது, ஆதித்தனும் தாத்தாவும் நிலாவின் பிஞ்சுக் கரங்கள் நீண்ட திசையைப் பார்த்தனர். அங்கே நான்கே நான்கு வரிகள் எழுதப்பட்டிருந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 57



சொற்சிலம்பம் இல. 57
சஞ்சீவி,
861, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................
விலாசம்: ..............................................................
..............................................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 10 — 07 — 1998

**இடமிருந்து வலம்**

1, இடுக்குப் பேச்சை இப்படி அழைப்பர். 4. ஒத்தாசை. 7. சுவடு. 8. பாகஞ் செய்தல். 9. வீறுடன் தோன்றும் தன்மை. 11. தோடு. 13. திருமணத்தால் இணைந்த சோடி. 14. நீர் நிலை. 15 குழம்பு போன்றது. 16. மனை. 17. சிறு பூச்சி இது. 19. மறு. 21. மரங்கள் அடங்கிய உயிர்பிரிவின் தொகுதி.

**மேலிருந்து கீழ்**

1. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம். 2. கயிற்று இழை. 3. வீண்டம்பம். 4. பார்வதி. 5. கிருபை. 6. முற்கால ஆயுதங்களில் ஒன்று. 8. இணங்கு. 10. மரம் அறுக்க உதவுவது. 12. வேழம். 13. தகுதியுடைய தன்மை. 14. தீயைத் தீண்டினால்......... 15. மிதியடி. 16. அறநெறி தவறிய அரசு நிச்சயம்......... 18. தந்தை. 19. பெருக்கல் குறி. 20 உன்.

### சொற்சிலம்பம் 55 — விடைகள்

**இடமிருந்து வலம்**

1. உதைபந்து. 5. அது. 7. குலம். 8. வைபவம். 10. தம்பதி. 12. தம்பி. 13. ரதிதேவி. 15. ஆம். 16. நாகை. 17. சான் 18. அன்பன். 20. படிவம். 22. தகுதி. 24. குமாரர்.

**மேலிருந்து கீழ்**

1. உகுதல். 2. தைலம். 3. பம்பரம். 4. துவை. 5. அவம். 6. தும்பிக்கை. 9. பதவி. 11. திதி. 14. தேவன். 15. ஆண்டி. 16. நான்கு. 17. சாபம். 18. அம்மா. 19. பதர். 21. வகு. 23. திறை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: பொ. பவானந்தன், தபாற் கந்தோர், காங்கேசன்துறை.

★ இரண்டாம் பரிசு: றஜிதா சிவநேசன், வியாபாரி மூலை, பருத்தித்துறை.

★ மூன்றாம் பரிசு: திருமதி றோ. திசவீரசிங்கி, 60, 'ஏ' கோவில் வீதி, சுண்டிக்குளி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 56 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# ஊக்கத்துடன் உழைத்ததால் உயர்ந்த உத்தமர் எடிசன்!

ஏழைக் குடும்பங்களில் பிறந்தவர்களில் பலர் மனித குலம் பயன்பெறும் வகையில் பல மாபெரும் அரிய காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள்.

கிராமபோன், மின்சார சக்தியைப் பயன்படுத்தி ஓடும் டிராம் வண்டி, மின்சார விளக்கு, சினிமா போன்றவைகளை உலகிற்கு தந்தவர் விஞ்ஞானமேதை தோமஸ் அல்வா எடிசன்.

அவரும் ஏழைக் குடும்பத்தில் பிறந்து வறுமையின் கோரப்பிடியில் சிக்கிப் பிழியப்பட்டு, இளமைப் பருவத்தில் தாங்கமுடியாத அவமானங்களையும் கஷ்டங்களையும் கண்டவர்தான்.

எடிசன் ஓர் ஏழைக்குடும்பத்தில் 1847 ஆம் ஆண்டில் பிறந்தார்.

அவர் பள்ளியில் மூன்றே மாதங்கள்தான் படிக்க முடிந்தது.

எடிசன் படிப்பில் எந்தவித ஆர்வமும் காட்டாமல் பள்ளியில் கடைசி மாணவனாக இருந்ததாக அவருடைய பள்ளி ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்.

பள்ளியில் படிக்காத எடிசன், உலகப் புகழ் பெறும் மாபெரும் ஆராய்ச்சியாளனாக உருவெடுக்கப் போகிறார் என்பதை அந்தக்காலத்தில் யாரும் நம்பியிருக்கமாட்டார்கள்.

சிறு மாணவனாக இருக்கும்போதே எடிசனுடைய மனம் புதுமைகளைப் பற்றி நினைத்து ஆராய்ந்து செயல்பட்டு வந்திருக்கிறது.

அவர் சிறுபையனாக இருக்கும் போது, பறக்கும் புழுக்களை உணவில் கலந்து வேலைக்காரிக்குக் கொடுத்து சாப்பிடவைத்து, அவளால் பறக்க முடிகிறதா என்று ஊன்றிக் கவனித்திருக்கிறார்!

நண்பனுக்கு வெடிமருந்து கொடுத்து, அதை வெடிக்க வைக்கும்போது, தன் நண்பனாலும் சிதறும் பலூன் துண்டுகளைப் போன்றுபறக்க முடியும் என்று நினைத்திருக்கிறார்.

வேலையில் சேர்ந்து சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால், எடிசன் ஓடும் ரயில் வண்டியில் மிட்டாய், சொக்லெட் போன்றவைகளை விற்கும் பணியைச் செய்துவந்தார்.

அந்தக் காலத்தில் செய்திகள் மிகவும் தாமதமாக வெளிவந்தன. செய்திகளை தந்தி மூலம் பெற்றுவரும்தன் நண்பனிடமிருந்து செய்திகளைச் சேகரித்து, ஓடும் ரயிலிலேயே ஒரு சிறு அச்சு இயந்திரத்தின் மூலமாக அச்சிட்டு, செய்தித்தாளில் அந்தச் செய்திகள் வெளிவருவதற்கும் முன்பே மக்களுக்கு அவற்றைக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்து வந்தார்.

ஒரு முறை ஓடும் ரயிலில் அவர் பொஸ்பரஸைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்து வரும்போது நெருப்புப் பிடித்துக் கொண்டது. அதன் காரணமாக அவருடைய ரயில் பெட்டி எரிந்து அச்சு இயந்திரம், ஆராய்ச்சிப் பொருள்கள் உட்பட அனைத்தும் பஸ்பமாகி விட்டன. அதனால் அவரை ரயிலில் வேலை செய்யவர வேண்டாம் என்று கூறிவிட்டார்கள்.

அதற்கு பின்பு அவர் தந்தி அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அவர் அங்கு தந்தி அனுப்புவதில் பல நவீனமான புதிய முறைகளைக் கண்டுபிடித்தார். ஒரே கம்பியின் மூலம் எதிர்திசைகளிலிருந்து ஒரே சமயத்தில் இரண்டு செய்திகளை அனுப்பும் ட்யூப்லெக்ஸ் டெலிகிராப் முறையைக் கண்டு பிடித்தார்.

தன்னுடைய இருபத்திரண்டாவது வயதில் அவர் கையில் பணமில்லாமல் அமெரிக்கா வந்துசேர்ந்தார்.

நியூயோர்க் நகரில் வேலை தேடி தெருத் தெருவாக அலைந்து வந்தார்.

ஆனால் யாரும் அவருடைய ஆராய்ச்சிகளில் ஆர்வம் காட்டாமல் அவரைத் திருப்பி அனுப்பிவந்தார்கள்.

அப்போது அவர் ஒரு பெரிய கட்டடத்தில் மிகவும் சிறிய ஓர் அறையில் தங்கியிருந்தார்.



அந்தக் கட்டடத்திலிருந்த ஒரு பெரிய நிறுவனத்தின் 'டிரான்ஸ்மிட்டர்' கெட்டு விட்டது. அப்பொழுது பல அவசரமான செய்திகள் அனுப்பவேண்டி இருந்ததால், அந்த நிறுவனத்தின் தலைவர் பொறுமையின்றித் துடித்துக் கொண்டிருந்தார். இஞ்ஜினியர், மெக்கானிக்குகள் தவறு எங்கு இருக்கிறது என்று தெரியாமல் முழித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆறு வருடங்களுக்குள் 120 புதிய பொருள்களைக் கண்டு பிடித்து அதன் பதிவு உரிமையை எடுத்துக் கொண்டார்.

கிராமபோன், மின்விளக்கு, மின்சார டிராம் போன்றவைகளை அவர் கண்டு பிடித்தார்.

அந்தக் காலத்தில் டெலிபோனில் பேசுவதற்கும் கேட்பதற்கும் ஒரே கருவியை உபயோகப்படுத்தி வந்தார்கள். எடிசன் டெலிபோனில் பல முன்னேற்றங்களைக் கொண்டு வந்து நிறைய தூரம் பேசும் முறையைக் கண்டுபிடித்தார்.

பதின்மூன்று வருடங்கள் அவருடன் வாழ்ந்து அவருக்குப் பல உதவிகளைச் செய்து வந்த அவருடைய அன்பு மனைவி மேரி இளம் வயதிலேயே இறந்து விட்டார். அந்த துக்கத்தை மறக்க அவர் இன்னும் தீவிரமாக ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார்.

ஒருமுறை அவர் ரயிலில் சென்று கொண்டிருக்கும் போது ஜன்னல் வழியாக ஓடி மறையும் காட்சிகளை ஊன்றிக் கவனித்தார். அப்போதுதான் 'ஓடும் சினிமாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணம் அவர் உள்ளத்தில் 'முதன்முறையாக உதித்தது. மிகவும் பாடுபட்டு உழைத்து அவர் சினிமாவைக் கண்டு பிடித்தார்.

அவர் நிறைய விஷயங்களை ஆராய்ந்து பல புதியவைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்.



அப்போது எடிசன் அங்கு சென்று டிரான்ஸ்மிட்டரை தான் சரி செய்து கொடுப்பதாகக் கூறினார். ஒரு 'ஸ்பிரிங்' உடைந்திருப்பதைக் கண்டுபிடித்து அதை மாற்றி சில நிமிடங்களுக்குள் டிரான்ஸ்மிட்டர் நன்கு இயங்கும்படி செய்தார்.

அந்த நிறுவனத்தின் தலைவர் மாதம் 300 டாலர் சம்பளத்தில் எடிசனுக்கு வேலை போட்டுக் கொடுத்தார்.

இரண்டு வருடங்கள் அங்கு அவர் வேலை செய்து பணம் சேமித்து, சொந்தமாக ஒரு சிறிய தொழிற்சாலையை ஆரம்பித்தார்.

அவருடைய தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட சமான்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது. அதனால் அவருக்கு நிறைய லாபம்கிடைக்கஆரம்பித்தது.

1300 தயாரிப்பு வகைகளுக்கு அவர் உரிமைப் பதிவு செய்து கொண்டிருந்தார்.

அமெரிக்காவின் தலை சிறந்த மனிதர் யார் என்பதைக் கண்டுபிடிக்க வாக்கெடுப்பு எடுத்தபோது எடிசனைத்தான் மக்கள் அதிக அளவில் தேர்ந்தெடுத்தார்கள்.

''வெற்றி என்பது 98 சதவிகிதம்; வியர்வை சிந்தும் உழைப்பு, காரியத்தை முடிக்க வேண்டுமென்ற ஊக்கம் 2 சதவிகிதம்'' என்று அவர் கூறியிருக்கிறார்.

ஊக்கத்துடன் வியர்வை சிந்தி உழைக்கத் தயாராக இருப்பவன்—அவன் ஏழையாயிருந்தபோதிலும்—மாபெரும் மனிதனாக உருவெடுக்க முடியும். இந்த உண்மைக்கு எடிசனுடையவாழ்க்கைநல்ல ஓர் உதாரணம் அல்லவா? ★

## யார் கர்மயோகி?

அழகு மங்கையொருத்தி ஆற்றுவெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிறாள்.

அப்போது 'நமக்கென்ன!' என்று கரையேறிச் செல்பவன் மனித மிருகம்.

'ஆபத்து ஆபத்து!' என்று அலறுபவன் பொதுஜனம்.

'ஐயோ பாவம்' என்று முணுமுணுப்பவன் அனுதாபி.

'இறைவனே! இவளைக் காப்பாற்றும்' என்று இறைஞ்சுபவன் பக்தன்.

இந்தநேரத்திலும் அவளது அழகைரசிப்பவன் கவிஞன்.

'பெண்கள் நீச்சல் கலையிலும் வல்லவர்களாகத் திகழ வேண்டும்' என்று முழங்குபவன் சீர்திருத்தவாதி.

'ஆற்றில் குளிக்கப் பாதுகாப்பில்லை' என்று அரசை சாடுபவன் எதிர்க்கட்சிக்காரன்.

'எவ்வளவு இழப்பீட்டு நிதி வழங்கலாம்?' என்று ஆலோசிப்பவன் ஆளும் கட்சிக்காரன்.

காப்பாற்றும் முயற்சியில் உயிரிழப்பவன் தியாகி.

திடீரென்று ஆற்றில் குதித்து அவள் கூந்தலைப் பிடித்து இழுத்து வந்து கரையேற்றிவிட்டுப் பிரிந்து செல்பவன் கர்மயோகி. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்பிறப்பு...

(VI ஆம் பக்கத் தொடர்)
டன் தனது சமையல் அறை, படுக்கை அறை, கழிப்பறை, ஆகியவற்றை சரியாகக் காட்டினாள்.

இந்த வீட்டிற்குவருவதற்கு முன்பு, இவர்கள் வசித்த வேறு வீட்டையும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அதையும் பார்த்துவிட்டு வந்தார்கள். தன் வீட்டில் ஒரு கிணறு இருந்ததாக டில்லியில் ஒரு முறை குறிப்பிட்டிருந்தாள். ''அந்தக் கிணறு எங்கேஇருக்கிறது?'' என்று கேட்டார்கள். உண்மையில் அதை மறைத்துக் கொண்டுதான் இவளிடம் அதைக் கேட்டார்கள். இவளோ, அதைக் கண்டுபிடித்து விட்டாள்.

அதேபோல வீட்டில் எங்கோ பணத்தைப்புதைத்து வைத்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தாள் அல்லவா? தோண்டிப் பார்த்தபோது அங்கும் பணம் இல்லை. ஆனால் இவளோ நிச்சயம் அங்கும் பணத்தை புதைத்ததாகச் சாதித்தாள்.

''உண்மையில் நான்தான் அந்தப்பணத்தைத் தோண்டி எடுத்துக் கொண்டேன்''— என் கணவன் கேதர்நாத் ஒப்புக் கொண்டான்.

பின்னர் சாந்திதேவி என்ற சிறுமியை போன ஜென்மத்தில் அவளுடைய பெற்றோர்களைக் காட்டுமாறு குழு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அவசரத்தில் தன்னுடைய வீட்டிற்குச் சென்ற, சாந்தி தேவி, தன் தாயாரைப் பார்த்து அத்தை என்று அறிமுகப்படுத்திவிட்டாள். பிறகு அவளே உணர்ந்து, ''அத்தைஅல்ல, இவர்தான். என் தாயார்'' என்று அவளே கூறினாள்.

தாயாரும், மகளும் கண் கலங்கி ஒருவரையொருவர் தழுவிக் கொண்டார்கள். பிறகு அந்த ஊரிலுள்ள முக்கியமான வீடுகளையும், பிரதான கோயில்களையும் அடையாளம் காட்டினாள். குழு உறுப்பினர்கள் முழுமையாகத் திருப்தி அடைந்தார்கள். இந்தச் செய்தி உலகமெங்கும் பரவிற்று.

சிலர் மட்டும்தான் அதனை ஒரு மோசடி என்று விமர்சனம் செய்தார்கள். அதற்குப் பிறகு பிரபலமான ஒரு எழுத்தாளர், சாந்திதேவியை யாருக்கும் தெரியாமல் மறுபடியும் டில்லியிலுள்ள மதுராவிற்கு அழைத்துச் சென்று சரி பார்க்க விரும்பினார்.

1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி சாந்தி தேவிக்கு 10 வயது நடந்தபோது, மீண்டும்மதுராவிற்கு அழைத்துச் சென்றார்கள். மீண்டும் அவள் சொன்னது அனைத்தும் உண்மையாயிற்று.

1936ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பி. சி. நாகதா என்ற நாத்திகர், சாந்தி தேவியை சந்தித்து அவருடைய சந்தேகங்களை எல்லாம் எழுதி வெளியிட்டார்.

அதன் பின்னர் 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் தேதி டாக்டர் கிர்டி, சாந்திதேவியைச் சந்தித்தார். அதன் பிறகு நான்கு நாள்கள் கழித்து தனது 61 ஆவது வயதில் சாந்திதேவி தனது இரண்டாவது பிறவியில் இறந்து போனாள்.

மூன்றாவது பிறவியாக இவள், எங்கே பிறந்திருக்கிறாள் என்று இதுவரை எவருக்கும் தெரியாது. ஆனால் அதேசமயம், இதை ஒரு மோசடித்தனமாகவும் கருத முடியவில்லை. இதைப் பற்றி கருத்துக் கூறுகையில் டாக்டர் கிர்டி, ஒரு சம்பவத்தை கேதர்நாத்தினுடைய நண்பன் மூலமாகக் கேட்டு, பெற்று விவரித்தார். அதுமிக மிக அந்தரங்கமான ஒரு சம்பவம்.

சாந்தி தேவியைச் சந்திப்பதற்காக டில்லி வந்த கேதர்நாத், அந்தச் சிறுமியை சந்தித்த பிறகு விருந்துசாப்பிட்டார்கள். பிறகு எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு அறையில் கேதர்நாத், மகன் நவனித், கேதர்நாத்தின் புதிய மனைவி, அவர்களோடு சிறுமியாக சாந்தி தேவியும் தங்கியிருந்தாள்.

எல்லோரும் உறங்கிய பிறகு, சிறுமி சாந்தி தேவியைக் கூப்பிட்டு, கேதர்நாத் ஒரு கேள்வி கேட்டான். ''சென்ற ஜென்மத்தில் லக்டிபாய் என்ற பெயரில் என் மனைவியாக இருந்தாய். அப்போது காலில் அடிபட்டு, உனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. அதன் காரணமாக முதல் பிரசவம் கலைந்து விட்டது. அப்படிப்பட்ட நீ இரண்டாவது முறை கருத்தரித்தது எப்படி என்ற ரகசியத்தைச் சொல்லமுடியுமா?'' என்று சிறுமி சாந்தி தேவியிடம் கேட்டான். சிறுமி சாந்திதேவி எலும்பு முறிவுக்குள்ளான தான், கணவனோடு எப்படி தாம்பத்திய உறவு மேற்கொண்டாள் என்பதை முன்னைய ஜென்மத்தில் தனக்குக் கணவனாக இருந்த கேதர்நாத்திடமே விவரித்தாள். அதைக் கேட்டவுடன் கேதர்நாத் பிரமித்துப் போனான்.

இந்தச் செய்தியை கேதர்நாத்தின் நண்பன் மூலமாக டாக்டர் கிர்டி தெரிந்து கொண்டார். சாந்தி தேவியினுடைய இந்த மறு பிறப்பு நினைவாற்றல் ஆராய்ச்சியாளர்களையும், ஞானிகளையும். பகுத்தறிவுவாதிகளையும் சிந்திக்கவும், திகைக்கவும் வைத்துள்ளது.

சுவீடனிலிருந்து ஜோனர் ஸ்ட்ராண்ட் என்ற ஒரு நாத்திகவாதி, இந்தியாவுக்கு வந்து இந்த மோசடியை அம்பலப்படுத்துவதாக சவால் விட்டார். அப்படிப்பட்டவர், இந்த விடயத்தை முழுவதும் ஆராய்ச்சி செய்த பின்னர், ''மறுபிறப்பு என்பது சாந்தி தேவியின் விஷயத்தில் முழுக்க முழுக்க நிரூபணமாகியிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன்!'' என்று நேர்மாறாக எழுதினார்.

டாக்டர் கிர்டி இதோடு திருப்தியடையவில்லை. டெல்லியில் மறுபிறப்பைப் பற்றிய ஆராய்ச்சியாளர் இயன் ஸ்டீவன்சன் கருத்தையும் மேற்கோள் காட்டுகிறார். ''சாந்தி தேவியை நான் சந்தித்தேன். போன ஜென்மத்தைப் பற்றிய அவளுடைய 24 வாக்குமூலங்களும் முழுக்க முழுக்க அப்படியே சரியாக இருந்தன'' என்றார் ஸ்டீவன்சன்.

வாசகர்களே! நீங்கள் மறுபிறப்பை நம்பவீர்களானால், இப் பிறப்பிலுள்ள பந்த பாசங்களுக்கு இவ்வளவு சிறப்புத்தரத் தேவையில்லை. நம்ப மறுப்பீர்களானால், இந்த வாழ்க்கையில் இன்பமாக இருக்க, போன ஜென்மத்தைப் பற்றிய ஞாபகம் கொஞ்சம் கூட இருக்கக் கூடாது என்பதற்கு உங்கள் அவநம்பிக்கை உதவி செய்யும்.

ஏனென்றால், போன ஜென்மத்தில் ராஜாவாகப் பிறந்திருப்போமானால், அதை ரசிக்கலாம். ஆனால். ஒரு கொள்ளைக்காரனாகப் பிறந்து, அந்த உண்மை தெரியும் பட்சத்தில், நமது இரத்தம் கொதிப்படையும் அல்லவா? அதனால், போன ஜென்மத்தின் நினைவுகள் வேரோடும், வேரடி மண்ணோடும் நமக்குக் கிடைக்காமல் போவதுதான் நல்லதல்லவா?

நன்றி:- ஓம் சக்தி

# இந்தவார...

(VIII ஆம் பக்கத் தொடர்)
இழுப்பு, இடுப்புவலி, கல்லீரலால் முள்ளந்தண்டில் நோ, வயிற்றுப் பொருமல், வாய்வுத் தொல்லைகள் அடிக்கடி இருக்கும். அடிக்கடி தேகப் பயிற்சி செய்து வரவும். சுகம் வரும்.

★ அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.

மகரம்: ஆடம்பரத்தால் எதுவும் ஆகிவிடாது. காரியத்தில் கண்ணாக இருங்கள். இலாபம் இல்லாத அலுவல்களால் வேதனையும், கால நேரமும்தான் வீணாகும். தொழில் ஸ்தானத்தில் பொருள் சஷ்டம் கொடுக்கல் வாங்கலால் ஏற்படும். மேலதிகாரிகள் உதவுவார்கள். மற்றவர்களின் அலுவல்களில் தேவையற்றுத் தலையிட்டு வேதனை தரச் செய்யும். வயிற்றுக் கோளாறு, கிருமித் தாக்கம், வாய்வுத் தொல்லைகள், வாதப்பிடிப்பு, நரம்புத் தளர்ச்சி என வருத்தங்கள் வரலாம். நல்ல காற்றோட்டமான இடங்களுக்கு சென்று வாருங்கள்; சுகம் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

கும்பம்: மற்றவர்களுக்கு அடிக்கடி போதனைகள் செய்யும் நீங்கள் அடிக்கடி ஏன் யோசிக்கிறீர்கள்? பிறருக்கு உதவிகள் செய்வீர்கள். ஆனால் உங்களுக்கு உதவி செய்ய யாரும் வரவில்லையா? தொழில் ஸ்தானத்தில் குறைகுற்றம் சொல்லுவார்கள். சமாளித்துக் கொள்ளுங்கள். பொருள் நிலையில் அவதானம். ஏமாற்றங்கள் ஏற்படச் செய்யும். அரசியலை அதிகம் அலசி ஆராயாதீர்கள். உங்கள் கருத்துக்கள் உங்களுக்கு எதிராக வர இடம் உண்டு. வாத உளைவு, நரம்புச் சோர்வு, உடல்வரட்சி, சாப்பாட்டால் அஜீரணம் போன்றவற்றால் வருந்தலாம். தகுந்த வைத்தியம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

மீனம்: அதிக யோசனைகளை விட்டுவிட்டு காரியங்களில் கண்ணாக இருங்கள். இயல், இசை, நாடகங்களில் அடிக்கடி தொடர்பு கொள்ளுங்கள். அதனால் ஓரளவு கலகலப்பாக இருப்பீர்கள். எதையும் சிம்பிளாக எடுத்து சமாளித்து வாருங்கள். விதி வசப்பட்ட பலன், ஏழரைச் சனி தாக்கம் எனச் சில சோதிடர்கள் வெருட்டி அடிப்பார்கள். அதைப் பெரிது படுத்தாமல் ஆலயங்களுக்குச் சென்று வாருங்கள். ஆறுதல் கிடைக்கும். தொழில் பீடங்களில் வரவுக்கு மீறிய செலவுகள் இருக்கும். சளி, கைகால் வலி, உள்உறுப்புக்களால் அசதி, கிருமித்தாக்கம் என்பன கொடுக்கும். வைத்தியம் செய்யுங்கள். ஏழைகளுக்கு தானம் கொடுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வியாழன்.


# ஊனமுற்...

(III ஆம் பக்கத் தொடர்)
★ பதில்: இதற்கு நாம் பொறுப்பாளிகளல்லர்; உண்மையில் ஒரு செயற்கைக் காலைச் செய்வதற்கு ரூபா 4ஆயிரம் முதல் ரூபா 6 ஆயிரமும் முச்சக்கர வண்டி செய்வதற்கு ரூபா 11 ஆயிரமும் செலவாகின்றன. ஆனால் நாம் அவற்றை பெறுபவர் வசதி படைத்தவராக இருந்து அவர் தாமாக முன் வந்தால் ஒருவரிடமிருந்து 3 ஆயிரத்து 500 ரூபாவை நன்கொடையாகப் பெறுகிறோமே தவிர எவரையும் கட்டாயப்படுத்தவில்லை — பணம் செலுத்தவில்லை என்பதற்காக நாம் யாருக்கும் 'இல்லை' என்று கை விரிப்பதுமில்லை. உண்மையில் வறுமையில் வாருபவராயின் இலவசமாக எதனையும் பெறமுடியும், இது மக்களின் அனைத்துத் தரப்பினருக்கும் தெரிவதில்லை. இதனால் அங்கு சென்றால் பணம் கேட்பார்கள் என்ற ஒரு தப்பபிப்பிராயம் மக்களிடையே நிலவுகிறது. எமது நோக்கம் கை, கால் இழந்தவர்கள் மறுவாழ்வு பெறவேண்டும் என்பதே. அத்துடன் எமது நிறுவனம் குறைந்த வளங்களின் மத்தியிலும் தன்னிறைவுடன் சேவையாற்றி வருகிறது. சமூகத்தில் அனைத்துத் தரப்பினரின் உதவியும் எமக்குத் துணைப்புரியத் தேவை. எமது சேவை வளம் பெற வேண்டும் என்பதே எனது பேரவா.

★

# சாவிக்கொத்தில் சிறிய துப்பாக்கி

அறிவியல் வளர்ச்சியின் அரிய கண்டு பிடிப்புகள் ஆக்கப் பூர்வமான வழிகளுக்குப் பயன்படும் அதே நேரத்தில் அழிவுப் பாதைக்கும் வழி வகுப்பதாக இருக்கின்றன.



அணுகுண்டு முதல் சாதாரண சாமானியன் கையில் கிடைக்கும் நாட்டு வெடிகுண்டு வரை அனைத்துமே அழிவுக்குவழிவகுக்கும் அறிவியல் வளர்ச்சியில் இடம் பிடிப்பவை. இந்தப் பட்டியலில் தற்போது சேர்ந்துள்ளதுதான் சாவிக்கொத்து துப்பாக்கி.

ஆஸ்திரேலியாவின் பேர்க் சர்வதேச விமான நிலையத்தில் பயணி ஒருவரை சோதனையிட்ட சுங்க அதிகாரி ஒருவர் சாவிக் கொத்தில் இருந்த துப்பாக்கியைப் பார்த்து அசந்து போனார்.

சிறிய சாவிக்கொத்தில் (Key — Tag) துப்பாக்கி இருக்கும் என்று யார்தான் எதிர்பார்ப்பார்கள்?

வழக்கமாக பெயர் பொறித்த அல்லது பொம்மைகளைக் கொண்ட சாவிக் கொத்துகள் மட்டுமே பரிச்சயமான அனைவருக்குமே இந்த சாவிக் கொத்து துப்பாக்கி அதிர்ச்சியை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

சாவிக்கொத்து துப்பாக்கி வடிவமைக்கப்பட்ட விதத்தைப்பற்றி ஆராய்கிறார் அஸ்திரேலிய சுங்க அதிகாரி நிக்கல் மாஸ்டர்டன். புதிய கண்டுபிடிப்பு அனைத்து நாட்டினருக்கும் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அமெரிக்கா தனது விமான நிலையங்களில் கடும் சோதனையை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது. ★

# கொழு கொழு குழந்தை



பிரிட்டனில் தற்போது பிறக்கும் குழந்தைகள் அதிக எடையுள்ளவைகளாகப் பிறக்கின்றன. ஒரு குழந்தையின் சராசரி எடை 7 இறாத்தல் 5 அவுஸ் (3 29 கிலோகிராம்) என்று சமீபத்தில் பிரிட்டனில் எடுக்கப்பட்ட ஆய்வு தெரிவிக்கிறது. ★

# இளமையில் சாதனை

இளமையில் சாதனை புரிந்த சாதனையாளர்களின் பட்டியலைக் கடந்த வார சஞ்சீவியில் பார்த்தோம். அந்த வரிசையில் மற்றும் சில சாதனையாளர்கள் பற்றிய தகவல்கள் இங்கு தரப்படுகின்றன.

ஃபிளஷ் கழிப்பறைமுறை1584ஆம்ஆண்டில்கண்டுபிடிக்கப்பட்டது. அதைக் கண்டுபிடித்த ஹரிங்டனுக்கு அப்போது வயது 23. நெப்போலியனுக்கு டாக்டராக இருந்த லாரி டாமினிக்ஜீன்தான் அம்புலன்ஸை 1792 இல் வடிவமைத்தார். அப்போது அவரது வயது 26.

வாயு நிரப்பப்பட்ட வெப்பமானியை கலீலியோ கண்டு பிடித்த போது அவரது வயது 28.

பாஸ்கல் எல்லோரையும் மிஞ்சி விட்டார். கணக்கில் கூட்டல் முறையை விரைவாகச் செய்வதற்கு அவர் ஒரு கருவியை 1642 இல் கண்டு பிடித்தார். அப்போது அவர் வயது 19.

'ஷோர்ட் ஹாண்ட்' (சுருக்கெழுத்து) படிப்பவர்களுக்கு பிட்மனைத் தெரியாமல் இருக்க முடியாது. இன்றும் நடைமுறையில் உள்ளது பிட்மன் கண்டுபிடித்த சுருக்கெழுத்துத்தான். இதை 1837 ஆம் ஆண்டு தமது 24 ஆவது வயதில் பிட்மன் கண்டுபிடித்தார்.

ஹெலிக்கொப்டர், சிக்கோன்ஸ்கி என்பவரால் 1913 ஆம் ஆண்டு அவரது 24 ஆவது வயதில் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது பெரும்பாலான ஆகாய விமானங்களில் பொருக்கப்படுவது ஜெட் என்ஜின். இதை விட்டல் என்பவர் 1930 ஆம் ஆண்டு கண்டு பிடித்தார். அப்போது அவரது வயது 23 தான்.

'டீஸல்' என்பவர்தான் டீஸல் என்ஜினைக் கண்டு பிடித்தவர். 1892 ஆம் ஆண்டு இது கண்டு பிடிக்கப்பட்டது. இவர்தான் சற்று வயதானவர். இவர் தமது 34 ஆம் வயதில் இந்தச் சாதனையைச் செய்தார்.

நவீன 'போலராய்ட் கமரா'—அதாவது 'க்ளிக்' செய்த சில விநாடிகளுக்குள் வண்ணப் படம் தயார். இதை ஈ. எச். லாண்ட் என்பவர் கண்டுபிடித்தபோது அவருக்கு 30 வயது பூர்த்தியாகவில்லை.

கணிதம் மற்றும் பௌதிகத் துறைகளைப் பொறுத்த வரை இரண்டு நபர்கள் நினைவுக்கு வருகின்றனர். முதல் நபர் ஐன்ஸ்டீன். இவரது பொது ரிலேட்டிவிட்டி சித்தாந்தம் மற்றும் விசேட 'ரிலேட்டிவிட்டி' சித்தாந்தம் ஆகியன விஞ்ஞான உலகின் மைல்கற்கள். முன்னை சித்தாந்தம் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு போன்ற ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்படுவதற்கு வழிகோலியது. பிந்தியது விண்வெளிப் பயணங்களுக்கு அடிகோலியது. இவ்விஷயங்களில் ஐன்ஸ்டீனின் முதல் கட்டுரை அவரது 16 ஆம் வயதில் பிரசுரமாகியது. 22 வயதிற்குள் அவரது அடிப்படை சித்தாந்தங்கள் வெளியாகிவிட்டன.

இந்தியாவைப் பொறுத்தவரை கணித மேதை ராமானுஜம் மட்டுமே இந்தப் பட்டியலில் இடம் பெறக் கூடியவர். 16, 17 வயதிலேயே இவரது திறமை வியக்கும் வண்ணம் இருந்தது. இவரது 24 ஆம் வயதிலே கணிதத் துறையில் இவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் உலகு அனைத்திலும் பாராட்டப்பட்டன. 1887 இல் கும்பகோணத்தில் பிறந்த ராமானுஜன் 33 ஆண்டுகளே உயிருடன் இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை வெல்வதே தவம்!

அறத்திற்கும் மறத்திற்கும் இடையிலான நிழல்யுத்தம் நெடுங்காலமாக நடந்து வருகிறது.

இடைவிடாமல் தொடரும் இந்தப்போரில் அறம் தோற்பது போலவும், மறம் வெற்றி பெறுவது போலவும் ஒரு மாயத்தோற்றம் அவ்வப்போது தோன்றி மறையும்.

ஆனால் இறுதியில் வெற்றி பெறுவதென்னவோ அறம்தான். இந்தக் கோட்பாட்டில் தளராத நம்பிக்கை கொண்ட கவிச்சக்கரவர்த்தி கம்பன், 'வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால்?' என்ற வினாவின் மூலம் தெளிவான விடையைக் கூறுகிறான்.



அறம் வலிமை மிக்கது. எனவே அது ஆயுதங்களின் உதவியை நாடுவதில்லை.

ஆனால் வலிமை குன்றிய மறம் எப்போதுமே பல ஆயுதங்களோடுதான் களத்திற்கு வரும். ஆனால் வருகிறவேகத்தில் உண்மை, அன்பு, அருள் போன்ற ஆயுதங்களையே கையில் ஏந்திவரும். இவை யாவும் அறத்திற்குச் சார்பான படைக்கலன்கள். இறுதியில் இந்த ஆயுதங்களே அறத்திற்குச் சார்பாகப் போரிட்டு, மறத்தை வீழ்த்தி விடும்.

ஆழ்ந்து நோக்கினால் உலகில் எப்போதும், எக்காலத்தும் மறம் வெற்றி பெற்றதே இல்லை என்பது தெரியவரும்.

தவம் என்பதும் பேராற்றல் வாய்ந்த ஒரு கருவிதான். பொறிபுலன்களை வென்றவரிடம் இது வந்து பொருந்துகிறது. தவம் என்பது அறவோர்க்கு உரிய கருவி.

ஆனால் அறத்திற்கு மாறுபட்ட அரக்கர்களிடமும், அசுரரிடமும் இந்தத் தவம் எனும் கருவிகள் தாராளமாய்க் குவிந்து கிடந்தன. எனினும் அவர்கள் தோல்வியைத் தழுவினர். தவம் எனும் கருவியை வாங்கத் தெரிந்த அவர்களுக்கு அவற்றைப் பயன்படுத்தும் முறை தெரியவில்லை.



நாம் சில வீட்டு உபயோக சாதனங்களை வாங்கும்போதே அவற்றைப் பயன்படுத்துவது எப்படி என்ற குறிப்புச் சீட்டையும் பட விளக்கங்களுடன் தருவார்கள். அதைப் படித்துத் தெரிந்துகொண்டால்தான், அந்த அறிவியல் சாதனத்தை நாம் பயன்படுத்த முடியும். இல்லையென்றால், அந்த அறிவியல் சாதனம் அழிவதோடு. அதைத் தவறாகப் பயன்படுத்திய நம்மையும் அழித்துவிடும். பெரும்பாலான அரக்கர்களின் தவம், அவர்களையும் அழித்துத் தானும் அழிந்ததற்கு இதுதான் காரணம் என்று எடுத்துக்காட்டுகிறான் கம்பன்.

பொறிபுலனை வென்று தவம் செய்வோர் பெரும்பாலும் தவறிழைப்பதில்லை. உணர்ச்சி மேலீட்டால் அவர்கள் தவறிழைக்க நேரிட்டாலும், அருகிலிருக்கும் யாராவது ஒருவர் தலையிட்டு அவரை நல்வழிப்படுத்திவிடுவர்.

சீதையைப் பிரிந்த இராமன், உலகின் மீதே வெறுப்புற்று அதனை அழித்தொழிப்பேன் என்கிறான். இது இராமன் இயல்புக்கு மாறானது. அப்போது அங்கிருந்த சடாயு இராமனை நோக்கி

உம்பிழை என்பதல்லால் உலகம்செய் பிழையும் உண்டோ?
கொம்பிழை மானின்பின் போய்க்குலப்பழி கூட்டிக் கொண்டீர்

— என்று கூறி, இராமனை நல்வழிப்படுத்துகிறான். இதற்கு இராமன் செய்த தவமே துணை நிற்கிறது. அவன் தவறு செய்யும் சூழ்நிலை வந்தாலும், அவனைத் தடுத்து நல்வழிப்படுத்துகிறது.

இராவணன் நிலை இதற்கு நேர் எதிராக அமைந்துவிட்டது.



அவன் தவத்தின் காரணமாகப் பெற்ற ஆற்றலைக் கொண்டே தவறிழைக்கத் தொடங்கிவிடுகிறான்.

இராமனுடன் போரிட்டுத் தோற்றுத் திரும்பும் இராவணன் நல்லவனாக மாறத் துவங்குகிறான். ஆனால் அந்த நேரம் பார்த்து அங்கு வந்த மகோதரன் மீண்டும் இராவணனைத் தவறான பாதைக்கே அழைத்துச் நோக்கியேறான்.

இராமன் தன்னையும் அறியாமல் தவறு செய்ய முற்பட்டாலும் ஏதோ ஒன்று இடையில் புகுந்து அந்தத் தவறு நிகழாமல் தடுத்துவிடுகிறது.

இராவணன் தன்னையும் அறியாமலிருந்த முற்பட்டாலும் ஏதோ ஒன்று இடைமறித்து மீண்டும் அவனைப் பழைய பாதைக்கே திருப்பிவிடுகிறது.

இதற்குக் காரணம் என்ன? இருவரும் செய்த தவம்தான். இராமன் தன்னை வெல்வதற்காகவே தவம் செய்தான். இராவணன் பிறரை வெல்வதற்காகவே தவம் செய்தான்.

தன்னை வெல்லாத ஒருவன் உலகை வெல்ல முடியாது. அப்படியே வென்றாலும் அது தற்காலிக வெற்றியாகவே இருக்கும். இவர்களிடம் சேருகின்ற ஆற்றல் இவர்களையும் அழித்து, இவர்களைச் சேர்ந்தோரையும் அழித்துவிடும். இதற்கு இராவணன் மட்டுமன்றி, உலகப் போரிலும், இரண்டாம் உலகப்போரிலும் உலகை வெல்லப் புறப்பட்ட ஒரு சில தலைவர்களும் உதாரணமாகத் திகழ்கிறார்கள். இன்றைக்குப் போர் வெறி கொண்டு திரியும் நாடுகளுக்கும் நாளை இதே கதிதான் நேரப்போகிறது.

இதனால்தான் 'தன்னை வெல்லுவதே தவம்' என்ற உயரிய கருத்தைக் காலங்கடந்து நிற்கும் வகையில் கம்பன் பாடி முடித்தான்.

இல்லறத்தார்—துறவறத்தார் ஆகிய இருதரத்தாரும் செய்யும் தவத்தைக் கம்பன் விரிவாகப் பேசுகிறான். அவற்றையெல்லாம் சுருக்கி ஒரே வரியில் கூறுவதாயின் தன்னை வெல்லுவதே தவம் எனலாம்.

ஒருவன் தன்னை வெல்லும் முயற்சிகளில் ஈடுபட்டால் அது தவமாய் மலர்கிறது. இதில் மாறுபட்டால் அது அவமாய் முடிகிறது.

இப்படித் தன்னையே வென்று உயர நினைக்கும் தவசீலருக்கு இரண்டு அடிப்படைப் பண்புகள் தேவை என்கிறது திருக்குறள். அவற்றுள் ஒன்று, தனக்கு வந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்வது; மற்றொன்று, பிறருக்குத் துன்பம் செய்யாதிருப்பது—

"உற்றநோய் நோன்றல், உயிர்க்கு உறுகண்
செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு." (தவம்—1)

## வி. அசோக்குமரன்

இந்த அடிபடையை மனதில் நன்கு வாங்கிக்கொண்ட கம்பன், வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் இக் கருத்துக்கு மெருகூட்டிச் செல்கிறான். தவத்தை முயன்று மேற்கொண்ட சான்றோர் பலருள் மிகச் சிலரே இந்த இருவகை அடிப்படைப் பண்புகளைப் பெற்றுள்ளனர். ஏனையோர் தமது தவவலிமையைப் பயன்படுத்தி அடுத்தவரை சபிப்பதிலிருந்து, அவர்தம் உயிரைப் போக்குவது வரையிலான முயற்சிகளில் ஈடுபட்டுத் தமது தவத்தில் எளியராகி, மெலியராகி விடுவதை எடுத்துக்காட்டுகிறான் கம்பன். ★

## கவிதை...

(I ஆம் பக்கத்தொடர்ச்சி)

உவமையை அழகுக்கு அணியாகவும் அதே நேரத்தில் இன்னும் ஒரு கருத்தைக் கூறும் கருவியாகவும் பயன்படுத்திய தனித்துவம் வள்ளுவருக்கே உரியது:

பிறருக்குப் பயன்படும் செல்வந்தனின் செல்வத்தைக் குறிப்பிடத் திருவள்ளுவர் மூன்று உவமைகளைக் கையாள்கிறார். அவையின் மூன்றிலும் சிறுசிறு வித்தியாசம் உண்டு.

ஒரு குறளில் உலகுக்குப் பயன்படும் செல்வனது செல்வம் ஊர் நடுவே உள்ள குளம் நீர் நிறைந்தது போன்றது என்கிறார்: ஊருக்கு நடுவே உள்ள குளத்துநீர் ஊரவர் எல்லோருக்கும் பயன்படுவது போல இவனது செல்வமும் ஊரவர் எல்லோர்க்கும் பயன்படுகிறதாம்.

அடுத்த குறளில் ஊர் நடுவே உள்ள பழுமரம் பழுத்தது போன்றது உலகுக்குப் பயன்படும் செல்வனது பொருள் என்கிறார். ஊருக்கு நடுவே இருப்பதால் ஊரவர் எல்லோருக்கும் அந்தப் பழமரம் பழத்தைக் கொடுக்கிறது. அதுபோலவே செல்வனும் ஊரவர் எல்லோர்க்கும் தன் செல்வத்தைக் கொடுக்கிறான் என்கிறார்.

மூன்றாவது குறளில் மருந்தாகப் பயன்படும் மரத்தைக் கூறுகிறார். மருந்து மரத்தின் இலை மருந்தாகப் பயன்படுகிறது; மருந்து மரத்தின் பட்டை மருந்தாகப் பயன்படுகிறது; மருந்து மரத்தின் விதை மருந்தாகப் பயன்படுகிறது: மருந்து மரத்தின் வேர் மருந்தாகப் பயன்படுகிறது; மருந்து மரத்தின் உறுப்புக்கள் அனைத்தும் மருந்தாகப் பயன்படுகின்றன.

"ஊருணி நீர்நிறைந்தற்றே
உலகவாம்
பேரறிவாளன் திரு"

"பயன்மரம் உள்ளூர்ப்
பழுத்தற்றால் செல்வம்
நயன் உடையான் கண்படின்"

"மருந்தாகித் தப்பா
மரத்தற்றால் செல்வம்
பெருந்தகையான் கண்படின்"

இந்த மூன்று குறள்களில் வரும் மூன்று உவமைகளிலும் சிறு சிறு வித்தியாசம் வைத்துத் தனது தனித்துவத்தைக் காட்டியுள்ளார் வள்ளுவன்.

குளம் தன்னோடு தொடர்பில்லாத மழை நீரைசேர்த்து வைத்து ஊரவர்க்குக்கொடுக்கிறது.

பழமரம் தனது அங்கமாகிய பழத்தைக் கொடுக்கிறது.

மருந்துச்செடி இலையாக, பட்டையாக, விதையாக, வேராக தன்னையே கொடுகிறது.

செல்வர்கள் பயன்படுவதில் ஒன்றாயினும் பயன்படும் முறையில் சிறுசிறு வேறுபாடு காட்டிய வள்ளுவரின் அணி நலன் பாராட்டுக்குரியது.

சிலர் தங்களுடைய சிறுமிக்குச் சில நகைகளைப்பூட்டியே அழகு செய்வர். சிலர் பல நகைகளை அணிவித்துத்தான் அழகு செய்வர். சங்கப் புலவர்களும் திருவள்ளுவரும் சில அணிகளைக் கொண்டே தமது கவிதை மகளை அலங்கரிக்கும் ஆற்றல் கைவந்தவர்கள்.

எத்தனை அணிகள் அணி இலக்கண நூல்களில் கூறப்பட்டாலும் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் முதலிய அணிகளே பெருதழக்கில் உள்ளன. பெண்கள் அணிகலன்களிலும் மிகப்பலவகைகள் இருந்தாலும் சில அணிகளே பெருவழக்கில்உள்ளன. ★

## விடைகள்

VII ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

(1)

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 24 | 7 | 20 | 3 |
| 14 | 12 | 25 | 8 | 16 |
| 17 | 5 | 13 | 21 | 9 |
| 10 | 18 | 01 | 14 | 22 |
| 23 | 6 | 19 | 2 | 15 |

(2) 301, 721, 1141, 1561, 1981.

(3) நான்கு கறுப்புப் பூனைக்குட்டிகளும், மூன்று வெள்ளைப் பூனைக்குட்டிகளுமாக மொத்தம் ஏழு குட்டிகள். (இந்த ஏழு குட்டிகளில் ஒரு கறுப்புக்குட்டியை எடுத்தால் அதற்கு மூன்று கறுப்பு மூன்று வெள்ளைச் சகோதரங்கள் உள்ளன. ஒரு வெள்ளைப் பூனைக்குட்டியை எடுத்தால் அதற்கு இரண்டு வெள்ளைச் சகோதரங்களும் நான்கு கறுப்புச் சகோதரங்களும் உள்ளன. ஆகவே கணக்குச் சரிதானே!

### உங்களுக்குத் தெரியுமா?

(1) நாற்பது நிமிடங்கள் எடுக்கும். (ஐந்து நிமிடத்துக்கு நத்தை மொத்தமாக ஏறும் உயரம் ஓர் அடி. ஆகவே முப்பத்தைந்து நிமிடத்தில் ஏழு அடி ஏறிவிடும். அடுத்த ஐந்து நிமிடத்துக்குள் மூன்று அடி ஏறியதும் நத்தை குழிக்கு வெளியே வந்து விடும். குழிக்கு வெளியே வந்தால் மீண்டும் சறுக்குவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுமல்லவா?)

(2) நீண்ட [illegible] நீளம் 9 மீற்றர். அவர் செய்யத் திட்டமிட்ட [illegible] நீளம் 50 சதம மீற்றர்.

## அலசிலம்பல்...

(II ஆம் பக்கத் தொடர்)

கடைப்பிடிக்க முனைந்துள்ள தமிழ்க் கட்சிகள் ஏனைய மாவட்டங்களிலும் இதே அணுகு முறையைக் கையாள வேண்டும். அவ்வாறு செய்யின் மட்டுமே, தமிழ் அரசியற்கட்சிகளால் தமிழ் மக்களுக்கு ஏதேனும் செய்ததாக ஆகும்.

பிள்ளைகளை, உறவினர்களைக் காணாமல் உயிர் துடிக்கும், பரிதவிக்கும் பெற்றோர்கள் வெளியிட்டுள்ள கருத்துச் சிதறல்களை ஏனைய பெற்றோர் கவனத்திற் கொள்வது அவசியம்.

எங்கள் பிள்ளைகளின் நிலையை அறிவதற்கு நாம் நடத்தும் போராட்டங்களில் பிள்ளைகளுடன் வாழக் கொடுத்து வைத்த ஏனைய பெற்றோர்களும் சேர்ந்து கொண்டால், எமது போராட்டம் வெற்றியளிக்கும் சாத்தியம் மிகவும் உண்டு. இன்று எங்களுக்கு நேர்ந்த கதி நாளை இவர்களுக்கு நடக்காதென்று என்ன உத்தரவாதம் அல்லது எவ்வகையில் நிச்சயம்? இதனை இவர்கள் ஒரு கணம் சிந்தித்திருந்தால் எப்போதே எங்களுடன் கை கோர்த்திருப்பர். ஆனால் இப்போது நாம் அவர்களை வேண்டுகோள் விடுத்து அழைக்கும் நிலை வந்துள்ளது — என்று காணாமற்போன இளைஞரொருவரின் தந்தை கண்ணீர் மல்கச் சொன்னார்.

தனது தலையில் கல்லு விழுந்ததன் பின்னர் தான் இரத்தம் வடியும் என்பது தெரியும் என்ற அளவுக்கு எமது மத்தியில் ஊறிப்படிந்துள்ள சுயநலம் இன்னும் சிறிதேனும் கறை நீங்கவில்லை. காணாமற் போன இளைஞனின் தந்தையின் ஆதங்கம் நியாமானது என்பதை ஏனைய கொடுத்து வைத்த பெற்றோர்கள் இனியாவது உணர வேண்டும்.

தமிழ் மக்கள் படும் அவலங்கள், அவஸ்தைகள், இன்னல்கள், இடர்கள் நீங்க வேண்டுமாயின், எங்களிடமுள்ள சுய நலம் ஒழிந்து ஒற்றுமையாகச் செயற்படும் பண்பு வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மிளிர வேண்டும். அந்தக்காலம் எப்போது? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்ரன் - ஜியாங் செமின் சந்திப்பில்

# முக்கிய விடயங்களில் இணக்கம் இல்லை!

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் சீனாவில் தனது 9 நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பி உள்ளார்.

1989 தியன்னன்மென் படுகொலைகளின் பின்னர் சீனா சென்ற முதலாவது அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் ஆவார்.

இதனால் இவரது விஜயம் சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. உள்நாட்டிலும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

1989 ஆம் ஆண்டு சீன அரசுக்கு எதிராக ஜனநாயக ஆதரவு இயக்கங்கள் தியன்னன்மென் சதுக்கத்தில் நடத்திய ஆர்ப்பாட்டத்தை மிகவும் மோசமான முறையில் சீனப்படைகள் அடக்கின.

அப்பொழுது நூற்றுக்கணக்கான ஜனநாயக ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவத்தை கண்டித்து சீனாவுக்கு எதிராக சில பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா அப்போது விதித்தது.

## மூங்கில் திரையை உடைத்த நிக்ஸன்

குடியரசுக் கட்சி ஜனாதிபதியாக இருந்த ரிச்சேர்ட் நிக்ஸனே சீனா சென்ற முதலாவது அமெரிக்க ஜனாதிபதி ஆவார்.

1972 ஆம் ஆண்டு நிக்ஸன் மேற்கொண்ட விஜயம் சீனாவின் ''மூங்கில் திரை'', உடைய வழி வகுத்தது.

அமெரிக்காவின் சிறந்த ராஜதந்திரியாக அப்பொழுது கருதப்பட்டவர் ஹென்றி கிசிஞ்சர்.

சீன அதிகாரிகளுடன் அவர் பல இரகசியப் பேச்சுக்களை நடத்தியது மூலம் நிக்ஸனின் சீன விஜயத்துக்கு வழி கோலினார்.

எனினும் வாட்டர் கேட் ஊழல், வியட்நாம் யுத்தம் காரணமாக நிக்ஸன் பின்னர் செல்வாக்கு இழந்து விட்டார்

நிக்ஸனின் விஜயத்தின் பின்னர் எத்தனையோ அமெரிக்க ஜனாதிபதிகள் சீனா சென்று வந்துள்ளனர். அதே போன்று சீனத் தலைவர்களும் அமெரிக்கா சென்று திரும்பினர்.

தற்போதைய ஜனாதிபதி ஜியாங் செமினும் கடந்த ஆண்டு அமெரிக்கா சென்றிருந்தார்.

எனினும் தாய்வான், கொரியப் பிரச்சினைகள் இரு தரப்பு உறவுகளுக்கு இன்னும் முட்டுக்கட்டையாகவே இருந்து வருகின்றன.

1989 — 90 இல் சோவியத் யூனியன் வீழ்ச்சி அடைந்து சர்வதேச அரங்கில் கெடுபிடி யுத்தம் முடிவடைந்த பின்பும் நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை.

யதார்த்த நிலையை உணர்ந்து சீனத் தலைவர்கள் தமது கடும் போக்கை தளர்த்தி உள்ளனர். ஆனால் மனித உரிமை மீறல், மத சுதந்திரம் ஆகியவை தொடர்பாக சீனா மீது இன்னும் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் பட்டே வருகின்றன.

## பெய்ஜிங் உச்சிப் பேச்சு


ஜனாதிபதி கிளின்ரனும் ஜியாங் செமினும் பெய்ஜிங்கில் நடத்திய உச்சிப் பேச்சுக்களில் 47 அம்சங்களில் உடன்பாடு காணப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏவுகணை, பொருளாதாரம் ஆகியவையும் இவற்றில் அடங்கும்.

## மனித உரிமை, தாய்வான் பிரச்சினை தீர்ந்தாலேயே நல்லுறவுக்கு வாய்ப்பு

தாய்வான் பற்றியோ அல்லது மனித உரிமைகள் குறித்தோ எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் நீண்டகாலமாக அபிவிருத்தி அடையாது இருந்ததுக்கு தாய்வான் பிரச்சினையே பிரதான காரணம்.



அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் தனது சீன விஜயத்தின் போது சீனப் பத்திரிகை ஒன்றைப் பார்வையிடுகிறார். சமீப காலங்களில் சீனா சென்ற உலகத் தலைவர்களில் சீன மக்களை அதிகம் கவர்ந்தவர்களில் அமெரிக்க ஜனாதிபதியும் ஒருவர்.

''ஒரு சீனா'' என்ற கொள்கையை அமெரிக்கா தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது ஆனால் பிரச்சினைக்குத் தீர்வுகாண தாய்வானும் சீனாவும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று அமெரிக்கா கோரி வருகின்றது.

தாய்வான் சீனாவின் பிரிக்க முடியாத ஒரு மாகாணம் என்று சீனா கூறுகிறது.

## உலக உலா

என்.பி. சீலன்

1949 ஆம் ஆண்டு முதல் தாய்வானையே உண்மையான சீனா என்று அமெரிக்கா கூறிவந்தது. நிக்ஸனின் சீன விஜயமே சீனாவை அமெரிக்கா அங்கீகரிக்கவும் தாய்வான் ஐ. நா வில் இருந்து வெளியேற்றப்படவும் உதவியது.

பிளவுபட்ட நாடுகள் உலகில் இணைந்துள்ள போதிலும் சீன — தாய்வான் இணைப்பும் வடகொரிய— தென்கொரிய இணைப்பும் இன்னும் வெகுதூரத்திலேயே இருந்து வருகின்றன.

1953 இல் கொரிய யுத்தம் முடிவடைந்து 45 வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் உலகில் பதற்றம் நிறைந்த பகுதியாக கொரிய தீபகற்பம் இன்னும் இருந்து வருகிறது.

கிளின்ரன்—ஜியாங் செமின் உச்சிப் பேச்சுக்களின்போது கொரியாவிலும் உபகண்டத்திலும் நெருக்கடியைத் தளர்த்துவதில் ஒத்துழைப்பது என இணக்கம் காணப்பட்டுள்ளது.

1950—53 கொரிய யுத்தத்தின்போது வடகொரியாவுக்கு ஆதரவாக சீனா தனது படைகளை அனுப்பியதாலும்—

வடகொரியாவின் மிக நெருங்கிய நட்பு நாடாக சீனா இன்னும் இருந்து வருவதினாலும் —

சீனாவின் உதவி இன்றி கொரிய நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியாத நிலையில் அமெரிக்கா இருந்துவருகிறது.

இதே போன்று உபகண்டத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அணு ஆயுதப் போட்டிக்கும் சீனா மீதே குற்றம் சுமத்தப்படுகிறது.

சீனாவே அணு தொழில் நுட்பங்களை பாகிஸ்தானுக்கு இரகசியமாக வழங்கியதாக குற்றஞ் சாட்டப்பட்டு வருகிறது.

உந்துவிசை ஏவுகணை, அணு ஆயுதங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கக் கூடிய கருவிகள், உபகரணங்கள் மற்றும் தொழில் நுட்பங்களை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்றுமதி செய்வதை தடுப்பதற்கும் கிளின்ரனும் ஜியாங் செமினும் இணக்கம கண்டுள்ளனர்.

### அணு ஆயுத ஏவுகணை

சீனாவும் அமெரிக்காவும் தற்போதைய உச்சிப் பேச்சுக்களின்போது அணு ஆயுத ஏவுகணைகள் தொடர்பாக கண்டுள்ள இணக்கம் உபகண்டத்தில் அணு ஆயுதப் போட்டியில் ஈடுபட்டுள்ள இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பதிலடி என்று கருதப்படுகிறது.

கிளின்ரனுக்கும் ஜியாங் செமினுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கம் மூலம் அமெரிக்க நகரங்களுக்கு சீனா தனது அணு ஆயுத ஏவுகணைகளை குறி வைப்பது நிறுத்தப்படும்

அதே போன்று அமெரிக்காவும் தனது ஏவுகணைகளை சீன நகரங்களுக்கு குறி வைப்பதை நிறுத்தும்.

இதே போன்ற ஓர் ஒப்பந்தத்தை ரஷ்யவுடனும் அமெரிக்கா செய்துள்ளது

ஆனால் இந்த உடன்பாட்டை ஒரு பெரிய சாதனையாக ஆய்வாளர்கள் கருதவில்லை.

தற்போதைய நவீன கணனி தொழில்நுட்பமுறைகள் மூலம் ஒரு சில விநாடிகளில் மீண்டும தேவையான இலக்குக்கு குறிவைக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அணு ஆயுதத் தாக்குதல் நடத்தும ஒரு முடிவை இது சிறிதாவது தாமதப்படுத்தும் என்றும்—

தவறுதலாக தாக்கப்படுவதை இதன் மூலம் தடுக்க முடியும் என்றும் கிளின்ரன் கருதுகிறார்.

ஆசியாவில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணவும் அமெரிக்க—சீனத் தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளனர்.

சீனா தனது யுவான் நாணயத்தின் மதிப்பைக் குறைக்க மாட்டாது என்றும் அமெரிக்காவுக்கு உறுதி மொழிவழங்கப்பட்டுள்ளது.

அணு வெடிப்புப் பரிசோதனைகளை நடத்தியது மூலம் உலக அணு ஆயுத வல்லரசுகள் முகாமில் இணைந்து விட முடியாது என்று சீன— அமெரிக்க ஜனாதிபதிகள் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் தெரிவித்துள்ளனர்.

முழு அளவிலான அணு ஆயுத பரிசோதனைத் தடை ஒப்பந்தத்திலும், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடுமாறு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### திபெத் விவகாரம்

இந்த உச்சிப் பேச்சுகளின் போது இணக்கம் காணப்படாத மற்றும் ஒரு பிரச்சினை திபெத் பிரச்சினை ஆகும்.

1959 ஆம் ஆண்டு சீன இராணுவம் திபெத்துக்கு அனுப்பப்பட்டபோது திபெத்தின் ஆத்மீகத் தலைவர் தலாய்லாமாவும் அவரது நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களும் திபெத்தில் இருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்தனர்.

தலாய்லாமா நீண்ட காலமாக திபெத்துக்கு தனிநாடு கோரி வந்தார். தற்பொழுது தமது நிலைப் பாட்டில் இருந்து சிறிது விலகி திபெத்துக்கு சுயநிர்ணய உரிமை கோரி வருகிறார்.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவுக்குத் தடையாக இருக்கும் பிரச்சினைகளில் திபெத் விவகாரமும் ஒன்றாகும்.

திபெத் தனது பிரிக்க முடியாத ஒரு பகுதி என்று சீனா கூறுகிறது.

### திருப்பம் எதுவும் இல்லை

அமெரிக்க ஜனாதிபதியின் சீன விஜயம் குறிப்பிடத்தக்க திருப்பம் எதையும்ஏற்படுத்தவில்லை.

எனினும் தற்போதைய உலக ஒழுங்கில் அமெரிக்காவினால் சீனாவை தள்ளி வைக்க முடியாது என்பதை இந்த விஜயம் உணர்த்துவதாக அவதானிகள் கருதுகின்றனர். ★

பில் கிளின்ரனின் சீன விஜயம் ஏற்கனவே திட்டமிட்ட காலத்தை விட முன்னதாகவே மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு முக்கிய காரணம் கிளின்ரன் மீது பௌலா ஜோன்ஸ் தொடுத்த வழக்கு என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளின்ரன் தம்மீது பாலியல் துன்புறுத்தல் புரிந்ததாக பௌலா ஜோன்ஸ் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

வழக்குத் தீர்ப்பு ஜூன் மாதம் வெளியாக இருந்ததால் அந்த நாள்களில் வெகுஜன தொடர்புச் சாதனங்களின் தொல்லையில் இருந்து தப்புவதற்காகவே கிளின்ரன் தனது சீன விஜயத்தை அந்த நாள்களில் வைத்துக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் பௌலா ஜோன்ஸ் தொடுத்த வழக்கை ''லிற்றில் றொக்'' நீதிமன்ற நீதிபதி விசாரணை இன்றியே தள்ளுபடி செய்துவிட்டார்.

கிளின்ரனின் பாலியல் தொடர்புகள் சம்பந்தமான புத்தகங்கள் கிளின்ரனின் விஜயத்தையொட்டி சீன நகரங்களில் பெருமளவு விற்பனைக்கு வந்திருந்தன.

கிளின்ரனின் விஜயத்தின் போது நல்லுறவைப் பேணுவதற்காக நான்கு பிரதான நகரங்களில் இந்த புத்தகங்கள் விற்கப்படுவதற்கு சீன அதிகாரிகள் தடைவிதித்து விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org